## பொருளடக்கம்


நல்ல மருமகள் ........................................ 5

நல்ல மனைவி ........................................ 21

நல்ல பெண்மணி ........................................ 71

நல்ல அன்னை ........................................ 155


# முஸ்லிம் பெண்களுக்கு

## நல்ல மருமகள்

உங்களுக்குத் திருமணம் நடந்த அன்றோ, ஒரு சில தினங்கள் ஆன பின்போ நீங்கள் பிறந்த வீட்டை விட்டு, பெற்றெடுத்து, பேணி வளர்த்த பெற்றோர்களை விட்டு, ஒரு சில மணி நேரத்திற்கு முன்போ, ஒரு சில நாட்களுக்கு முன்போ, உங்களைக் கைபிடித்த கணவருடன் பிறிதொரு வீட்டிற்கு வருகிறீர்கள். அது உங்களின் உறவினர் வீடாகவும் இருக்கலாம். அந்நியர் வீடாகவும் இருக்கலாம். ஆனால், இதன்பின் அது தான் உங்கள் வீடு. அதில் தான் நீங்கள் ஒரு சில ஆண்டுகளாவது இருக்க வேண்டும். அங்கு உங்கள் கணவரைப் பெற்ற தந்தை இருப்பார்; தாய் இருப்பார்; உங்கள் கணவருடன் பிறந்த தமயன் இருப்பார்; தம்பி இருப்பார்; தமக்கை இருப்பார்; தங்கை இருப்பார்; தமயனின் மனைவி இருப்பார்; மக்கள் இருப்பர்; தம்பிக்கு மனைவி வருவார்; மக்கள் பிறப்பர். இவர்களுடன் தான் நீங்கள் சில காலமாவது வாழ்ந்தாக வேண்டும்.

ஆரம்பத்தில் அங்கிருப்பவர் அனைவரும் உங்கள் மீது அன்புடன் நடந்து கொள்வார்கள் தாம். ஆனால், நாள் ஆக ஆக, அந்த அன்பு சற்றுக் குறையலாம். உங்கள் மீது உங்கள் கணவர் கொள்ளும் அன்பிற்கும், உங்கள் மீது இவர்கள் கொள்ளும் அன்பிற்கும் பிணைப்பு உண்டு. உங்கள் மீது, உங்கள் கணவர்

கொள்ளும் அன்பு அதிகமானால், உங்கள் மீது இவர்கள் கொள்ளும் அன்பு குறையும். இது மனித இயல்புடன் தொடர்புடையது. உங்களின் மாமனாரும், மாமியாரும், 'இதுவரை நாம் நம் பிள்ளையிடமிருந்து பெற்ற அன்பு இனி நமக்குக் கிடையாது' என்று எண்ணுவார்கள். அதே விதம் உங்கள் கணவரின் சகோதரர்களும், சகோதரிகளும் கருது வார்கள். எல்லா வீட்டிலும் இந்த நிலைதான் இருக்கும் என்று கூறவில்லை. பெரும்பாலான வீடுகளில் இந்த நிலைதான் இருக்கும்.நீங்கள் புகுந்த வீட்டிலும் இந்த நிலை இருந்தால், அதனை மாற்ற நீங்கள் தாம் முயல வேண்டும்.

அன்பிற்கும், மனத்திற்கும் அதிகத் தொடர்பு உண்டு. ஒருவரை நாம் உண்மையாக நேசித்தால், அவரும் நம்மை உண்மையாக நேசிக்க ஆரம்பிப்பார். அதற்கு ஆதாரம் இந்தச் சம்பவம் : ஒருவர் அண்ணல் நபி(ஸல்) அவர்களைச் சந்தித்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தங்களை அதிகம் நேசிக்கிறேன்'' என்று கூறினார். அதைக் கேட்டு அவர்கள், அவர் மீது தனக்கு அன்பு ஏற்படவில்லை என்று கூறினர். அவர்கள் இப்படிக் கூறக் காரணம் என்ன? அந்த மனிதரின் அன்பு, உண்மையான அன்பாக இல்லாததாகும். புகுந்த வீட்டில் உள்ளவர்கள் மீது உங்களுக்கு உண்மையான அன்பில்லா விட்டால் உங்கள் மீது அவர்களுக்கு உண்மையான அன்பு ஏற்படாது. அவர்கள் மீது உங்களுக்கு உண்மையான அன்பிருக் குமானால் அவசியம் உங்கள் மீது அவர்களுக்கு உண்மையான அன்பு ஏற்பட்டு விடும். எனவே அவர்களை நீங்கள் உண்மையாக நேசிக்க வேண்டும். முதலாவதாக உங்களின் அன்பைப் பெற உரிமை பெற்றவர்கள் உங்கள் மாமனாரும், மாமியாரும் ஆவர். உங்கள் கணவர், உங்களின் அன்பிற்கு உரியவர்; உயிருக்கு இனியவர் இல்லையா? அந்தக் கணவரைப் பெற்றவர்கள் அவர்கள்; பேணி வளர்த்தவர்கள் அவர்கள்; வளர்த்து வாலிபராக ஆக்கியவர்கள் அவர்கள், உங்களின் கண் நிறைந்த கணவராக, 'கல்பு' நிறைந்த கணவராக உங்களுக்கு



வழங்கியிருப்பவர்கள் அவர்கள். அவர்கள் மீது அன்பு கொள்வதற்கு இதற்கு மேலும் உங்களுக்கு என்ன வேண்டும்?

உங்களின் மாமனார் உங்களுக்குத் தந்தை போன்றவர் ஆவார். உங்களின் மாமியார் உங்களுக்குத் தாய் போன்றவர் ஆவார். எனவே அவர்களை, அவ்விதமே கருதுங்கள்! அவர்கள் மீது அவ்விதமே அன்பு செலுத்துங்கள்!

அண்ணல் நபி(ஸல்) அவர்களின் அருமைப் புதல்வி பாத்திமா (ரலி) அவர்கள், முஸ்லிம் ஆண், பெண் இரு பாலா ருக்கும் சில விஷயங்களிலும், பெண்களாகிய உங்களுக்குப் பல விஷயங்களிலும், அழகிய முன்மாதிரியாய் இருப்பவர்கள். அவர்கள் தம் மாமனாரிடமும், மாமியாரிடமும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை அறிய நீங்கள் ஆவலுறலாம். அவர்களின் மாமனார் அபூதாலிப் அவர்கள், அவர்களின் திருமணத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்து விடுகிறார்கள். அவர்களின் மாமியாருடன் பாத்திமா (ரலி) அவர்கள் அன்பாக நடந்து கொண்டிருந்திருக்கிறார்கள். அதற்கு ஆதாரம் அலீ (ரலி) அவர்களின் இந்தச் சொற்கள்: ''என் அன்னையாரும், என் மனைவியாரும் தாயும் மகளும் போல் வாழ்கின்றனர்.''

வீட்டு வேலைகளை மருமகள் பார்க்கட்டும் என்று சில மாமியார்கள் இருப்பார்கள்; மாமியார் பார்க்கட்டும் என்று சில மருமகள்கள் இருப்பார்கள். 'பின்தெ அஸத்' அவர்களும் அத்தகைய மாமியாராக இருக்கவில்லை. பாத்திமா (ரலி) அவர்களும் அத்தகைய மருமகளாக இருக்கவில்லை. வீட்டு வேலைகளைச் செய்ய பின்தெ அஸத் அவர்கள் விரும் பினாலும், பாத்திமா (ரலி) அவர்கள், அவர்களை விடுவ தில்லை. பின்தெ அஸத் அவர்களை இருக்க வைத்து, பாத்திமா (ரலி) அவர்களே இருக்கும் வேலைகள் அனைத்தையும் செய்வார்கள். நீங்களும் பாத்திமா (ரலி) அவர்களைப் போன்ற மருமகளாகத் தான் இருக்கவேண்டும். உங்கள் மாமியார்

பின்தெ அஸத் போன்று இராவிட்டால், அதை நீங்கள் பொருட் படுத்தக் கூடாது. இவ்விதம் நீங்கள் நடந்து கொண்டால் உங்கள் இருவருக்கும் இடையில் அன்பு ஏற்படாமல் இராது.

உங்கள் மாமனாரும், மாமியாரும் பெரும்பாலும் சற்று வயதானவர்களாக இருக்கலாம். வயதானவர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்விலும் வழிகாட்டுதல் இருக்கிறது. வாய் மொழியிலும் வழிகாட்டுதல் இருக்கிறது. முதியவர்களை மதித்த சம்பவங்கள் அவர்கள் வாழ்வில் எத்தனையோ இருக்கின்றன. ''முதியோரை மதியாதவர்கள் என்னைச் சேராத வர்கள்'' என்று அவர்கள் கூறியிருக்கின்றனர். 'முதியவர்கள் அந்நியர்களாயிருந்தாலும், அவர்களை மதிக்க வேண்டும்' என்பது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கொள்கை. உங்களின் மாமனாரும், மாமியாரும் உங்களுக்கு அந்நியர்கள் அல்லவே. அவர்கள் உங்களின் அன்புக் கணவரைப் பெற்ற தந்தையும், தாயும் அல்லவா? எனவே அவர்களை மதியுங்கள், அவர் களுக்கு மரியாதையும் செய்யுங்கள்!

மதிப்பு மனத்தில் இருந்தால் மரியாதை சொல்லிலும் இருக்கும், செயலிலும் இருக்கும். உங்கள் மாமனார் மீதும், மாமியார் மீதும் மதிப்பு உங்கள் மனத்தில் இருக்க வேண்டும். உங்கள் மாமனாரை மாமியாரை நீங்கள் மரியாதையுடன் குறிப்பிட வும் வேண்டும். மரியாதையுடன் கூப்பிடவும் வேண்டும். அவர்கள் முன் வரும்போதும் மரியாதையுடன் வரவேண்டும்; அவர்களுடன் பேசும் போதும் மரியாதையுடன் பேச வேண்டும்.

மரியாதையுடன் நடப்பதில் பிரதானமானது பணிவுடன் நடப்பது. நீங்கள் பணக்கார வீட்டுப் பெண்ணாயிருந்தாலும், ஏழை வீட்டுப் பெண்ணாயிருந்தாலும் உங்களிடம் இந்தப் பணிவு என்னும் இனிய குணம் இருப்பது அவசியம். பெரும்பாலான ஏழை வீட்டுப் பெண்களிடம் பணிவு இருக்கும். பெரும்பாலான பணக்கார வீட்டுப் பெண்களிடம் பணிவு இராது.



பணிவு இல்லாததால் தான் சில பெண்கள் தங்கள் மாமனாருக்கும் மாமியாருக்கும் அடங்கி நடப்பதில்லை. இவ்விதப் பெண்களாலேயே குடும்பங்களில் பல சமயங்களில் குழப்பங்களும், சில சமயங்களில் குலைவுகளும் ஏற்பட்டு விடுகின்றன. குடும்பத்தில் குழப்பம் ஏற்படாமலும், குடும்பம் குலைந்து போகாமலும் இருக்க உங்களால் உதவ முடியும். ''எப்படி?'' என்று கேட்கிறீர்களா? அதுதான் சற்றுப் பணிந்து போய் விடுவது.

ஒரு சில மாமனார்களும், மிகப் பல மாமியார்களும் நீங்கள் என்னதான் பணிந்து நடந்தாலும், உங்கள் மீது ஒருவித வெறுப்புடனேயே இருப்பார்கள், அவ்விதமே உங்களை நடத்தவும் செய்வார்கள். உங்களின் சிறு பிழையையும் பெரிதுபடுத்திப் பேசுவார்கள்; பெரிதுபடுத்திக் காட்டுவார்கள். அப்பொழுது நீங்கள் பொறுமையை மேற்கொண்டு, உங்களின் நாவைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சில பெண்களின் கொள்கை, வார்த்தைக்கு வார்த்தை பதில் கூறிவிட வேண்டும் என்பது. அந்தக் கொள்கை உங்களிடம் இருக்கக் கூடாது. ஒருவர் தணிந்து போய்விட்டால், பிரச்சினை தானாகவே தீர்ந்து விடும். மாமனார் தான்,மாமியார் தான் தணிந்து போக வேண்டும் என்று நீங்கள் விரும்பக் கூடாது. நீங்கள் தாம் சற்றுத் தணிந்துபோய்விடவேண்டும். 'நாம் தணிந்துபோவதா?' என்று எண்ணக் கூடாது. தணிந்து போய் விடுவதால் நன்மையே ஏற்படும். தீமை ஏற்படாது.

நீங்கள் உங்கள் மாமனாருக்கும், மாமியாருக்கும் பணி விடைகளும் செய்ய வேண்டும். அந்தப் பணிவிடைகளை நீங்கள் விருப்புடன் செய்ய வேண்டும், வெறுப்புடன் செய்யக் கூடாது.

பெரும்பாலான மாமனார்கள் உங்களின் பணி விடையை விரும்ப மாட்டார்கள். சில மாமியார்கள் நீங்கள் தங்கள் கணவருக்குப் பணிவிடைசெய்வதை விரும்புவார்கள், சில மாமியார்கள் விரும்ப மாட்டார்கள். உங்கள் மாமனாரும்

விரும்பினால், உங்கள் மாமியாரும் விரும்பினால், நீங்கள் உங்கள் மாமனாருக்குப் பணிவிடை செய்யுங்கள்! உங்கள் மாமனாரோ, உங்கள் மாமியாரோ உங்கள் பணிவிடையை விரும்பாவிட்டால் நீங்கள் ஒதுங்கிக் கொள்வதே உகந்ததாகும்.

அநேகமாக எல்லா மாமியார்களும் உங்களின் பணி விடையை விரும்புவார்கள், எதிர்பார்க்கவும் செய்வார்கள். அவ்வித மாமியாராய் உங்கள் மாமியாரும் இருந்தால் அவசியம் அவர்களுக்குப் பணிவிடை செய்யுங்கள்! ஒரு சில மாமியார்கள் உங்கள் மீதிருக்கும் அன்பின் காரணமாக உங்களின் பணிவிடையை விரும்பவும் மாட்டார்கள். எதிர்பார்க்கவும் மாட்டார்கள். அவ்வித மாமியாராய் உங்கள் மாமியார் இருந்தால் அவசியம் அவர்களுக்குப் பணிவிடைசெய்யுங்கள்! அவர்கள் தாம் நம் பணிவிடையை விரும்பவில்லையே, எதிர்பார்க்க வில்லையே என்று 'பேசாமல்' இருந்து விடாதீர்கள்.

சில மாமனார்களும், பல மாமியார்களும் நீங்கள் என்ன தான் பணிவிடைகள் 'விழுந்து விழுந்து' செய்தாலும், நீங்கள் அவர்களக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று உங்களிடமும் சொல்வார்கள், பிறரிடமும் கூறுவார்கள். இவ்வித சந்தர்ப்பங்களில் நீங்கள் பொறுமையை மேற்கொண்டு, மௌனம் சாதித்து விடவேண்டும்.

பல வீடுகளில் மாமனார், மாமியாருக்கு அடுத்தபடி யாகவும், சில வீடுகளில் மாமனார், மாமியாருக்கு முதலா வதாகவும் உங்களுக்குப்பிரச்சினைகள் வருவது உங்கள் கணவரின் சகோதரிகளைக் கொண்டுதான். அவர்களைத் தாம் நம் நாட்டில் நாத்தினார்கள் என்று குறிப்பிடுவர். அவர்கள் உங்களுக்கு மூத்தவர்களாயும் இருக்கலாம். உங்களுக்கு இளையவர்களாயும் இருக்கலாம். அவர்களில் பெரும்பாலோர் இயல்பு தம் சகோதரரின் மனைவியை ஆரம்பத்தில் நேசிப்பது, பிறகு வெறுப்பது. உங்கள் நாத்தினார்கள் அப்படியில்லா விட்டால், அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்துங்கள்!



அப்படி இருந்து விட்டால், அதற்காக வருத்தப்படாதீர்கள்! அவர்களில் பெரியவர்களை நேசியுங்கள். அவர்களுக்கு மரியாதை செய்யுங்கள்! அவர்களில் இளையவர்களை நேசியுங்கள், அவர்கள் மீது அன்பு செலுத்துங்கள்!

அவர்களில் பெரும்பாலோர் குணம் உங்களின் மரியாதை யைப் பெறுவதும், உங்களின் பணிவிடைகளைப் பெறுவதும், தங்களின் உரிமை என்று கருதுவது. அவர்கள் விரும்பும் மரியாதையை அளித்து விடுங்கள், அவர்கள் எதிர்பார்க்கும் பணிவிடைகளைச் செய்து விடுங்கள்! அவர்களில் பெரும் பாலோர் நீங்கள் எவ்விதம் தான் மரியாதையாக நடந்து கொண் டாலும், என்னதான் பணிவிடைகள் செய்தாலும், உங்களிடம் குறை காண்பதிலேயே குறியாயிருப்பார்கள். உங்களின் சிறு தவறுகளையும் பெரிதாகக் கருதுவார்கள். பெரிதாகப் பேசுவார் கள். இப்பொழுது நீங்கள் பொறுமையை மேற்கொண்டு, ''ஒரு நிமிடப் பொறுமை ஒரு பத்து வருடச் சுகம்'' என்னும் பழமொழியை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கணவரின் சகோதரர்களை நம் நாட்டில் கொழுந்தன்கள் என்று குறிப்பிடுவர். அவர்களில் உங்களுக்கு மூத்தவர்களும் இருக்கலாம். உங்களுக்கு இளையவர்களும் இருக்கலாம். மூத்தவர்களை உங்கள் தமையனார் போன்றும், இளை யவர்களை உங்களின் தம்பிமார்கள் போன்றும் கருதி நடந்து கொள்ளுங்கள்! அவர்களில் மூத்தவர்கள் முன் வருவதையும், அவர்களுடன் உரையாடுவதையும், முடிந்த மட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள்! அவர்களில் இளையவர்கள் வாலிபர்களாக இருந்தால், அவர்கள் முன் வருவதையும், அவர்களுடன் உரை யாடுவதையும் இயன்ற மட்டும் குறைத்துக் கொள்ளுங்கள். அவர்களுடன் பெண்கள் நெருங்கிப் பழகுவதும் நல்லதல்ல. பெண்களுடன் அவர்கள் நெருங்கிப் பழகுவதும் நல்லதல்ல.

ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''பெண்கள் தனியாக இருக்கும் போது, அவர்கள் அருகில் போகாதீர்கள்!''

என்று கூறினார். அப்பொழுது அங்கிருந்த அன்சாரிகளில் ஒருவர், ''கணவனின் மூத்த இளைய சகோதர்கள் பற்றி எப்படி?'' என்று கேட்டார். அவருக்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அளித்த பதில் என்ன தெரியுமா? ''அவர்களுடன் நெருக்கமாக இருப்பது இறப்பைப் போல் தவிர்க்கப்பட வேண்டியதாகும்.'' இது ஆண்களுக்குக் கூறப்பட்ட அறிவுரையே ஆனாலும் இதில் பெண்களுக்கும் எச்சரிக்கை இருக்கிறது.

உங்களுக்குப் பெரும்பாலும் பிரச்சினைகள் உங்கள் கணவரின் சகோதரர் மனைவிமார்களைக் கொண்டு தான் வரும். அவர்களைத் தாம் நம் நாட்டில் ஓரகத்திகள் என்று குறிப்பிடுவர். அவர்களுக்கும்,உங்களுக்கும் இடையே நல்ல உறவு இருக்க வேண்டியது அவசியம். சகோதரர்கள் கூட்டுக் குடும்பமாகவும் இருப்பார்கள். கூட்டு வாணிபமும் செய்வார்கள். உங்களுக் கிடையில் ஏற்படும் சண்டை சகோதரர்களுக்கிடையிலும் பரவி, குடும்பம் பிரியும் நிலையும், வாணிபம் பிளவுபடும் நிலையும் உருவாகி விடலாம். இந்த நிலை ஏற்பட நீங்கள் ஒருபோதும் காரணமாக இருந்துவிடக் கூடாது. குடும்ப ஒற்றுமையில்தான், வாணிப ஒற்றுமையில் தான் நன்மை இருக்கிறது என்பதை நீங்கள் மனத்தில் கொள்ள வேண்டும்.

பெரும்பாலான பெண்களின் இயல்பு, பேதம் உண்டு பண்ணுவதாகும். அதனால்தான் பிரஞ்சுப் பேரரசர் ஒருவர் கூறினார், ''ஐரோப்பா முழுவதையும் ஒன்றுபடுத்துவது எளிது, இரு பெண்களை ஒற்றுமைப்படுத்துவதை விட'' என்று. அதனால்தான் ஓர் அறிஞர் சொன்னார், ''ஒரு கூரையின் கீழ் இரண்டு பெண்கள், அவர்கள் சகோதரிகளாயிருந்தாலும் ஒற்று மையாயிருக்க மாட்டார்கள்'' என்று. இதனைச் சில குடும்பங் களில் உள்ள ஆண்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனவே அவர்கள், ''பெண்கள் சண்டை பெண்களுடன்'' என்னும் கொள்கையில் உறுதியாக இருக்கிறார்கள். பெண்கள் கொண்டு வந்து கூறும் எந்தச் சண்டையையும் அவர்கள் தம் செவிகளில்



போட்டுக் கொள்வதில்லை. அதனால் அவர்களின் குடும் பங்கள் ஒற்றுமையாக இருக்கின்றன, வாணிபங்கள் சிறப்பாக நடக்கின்றன.

எல்லா ஆண்களும் இப்படி இருக்க மாட்டார்கள். பெரும் பாலான ஆண்கள் எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவர் களாய்த்தான் இருப்பார்கள். அவர்கள் தம் மனைவி கொண்டு வந்து கூறும் செய்தியைக் கேட்டு ஆத்திரப்பட்டு, ஏதாவது பேசி, அல்லது ஏதாவது செய்து, குடும்ப ஒற்றுமையைக் குலைத்து விடு வார்கள், வாணிப ஒற்றுமைக்கு உலை வைத்து விடுவார்கள். எனவே, உங்களுக்குள் இருக்கும் சண்டை உங்களுக்குள்ளேயே இருக்கட்டும். அது ஆண்கள் வரை செல்ல வேண்டாம்.

பெண்களின் இயல்பே பிறர் செய்த சிறிய பிழையையும் தம் கணவரிடம் கூறுவதாகும். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்களும் விதி விலக்கல்ல. பிலால் (ரலி) அவர்கள், அபூபக்ர் (ரலி) அவர்களால் விடுவிக்கப்பட்ட அபிஸீனிய அடிமை. அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஊழியராக இருந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் ஒரு நாள் தம் கைதவறி ஒரு பாத்திரத்தைக் கீழே போட்டு விட்டார்கள். அது உடைந்து விட்டது. இது ஆயிஷா(ரலி) அவர்களை ஆத்திரம் கொள்ள வைத்து விட்டது. அவர்கள் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் வந்ததும் அது பற்றிக் கூறி, குறைபட்டுக் கொண் டார்கள். அதைக் கேட்டு அண்ணல் நபி(ஸல்) அவர்கள், ''அப்படியா பிலால் செய்துவிட்டார்?'' என்று பிலால் (ரலி) அவர்களை அழைத்துக் கண்டிக்கவில்லை. ''பிலால் ஒரு செயலை வேறு நினைப்பில் செய்தார் என்றால் அது என் நினைவாகத்தான் இருக்கும்'' என்று கூறி பிலால் (ரலி) அவர்களை விலக்க மறுத்துவிட்டார்கள்.

நீங்கள் புகுந்த வீட்டிலுள்ள எவர் மீதாவது உங்களுக்கு ஏதாவது குறையிருந்தால், அதை வெளியில் கூறாதீர்கள்; குறிப்பாக உங்கள் கணவரிடம் கூறாதீர்கள்; குறிப்பாகக் கண்

ணீருடன் கூறாதீர்கள். கணவருடன் தனித்திருப்பது உங்களுக்கு இருக்கும் சாதகம் ஆகும். அதனை இதற்குப் பயன்படுத்தாதீர்கள். கண்ணீர் உங்களிடம் இருக்கும் ஆற்றல் மிகுந்த ஆயுதம் ஆகும். அதனை இதற்குப் பயன்படுத்தாதீர்கள். அதனை அறவே பயன்படுத்தாதீர்கள்! எரியும் நெருப்பின் மேல் எண்ணெய்யை விடுவதை ஒக்கும், எது தெரியுமா? உங்களின் சொல்லுடன் கண்ணீரைக் கலப்பது. உங்கள் கண்களிலிருந்து கண்ணீர் வரவேண்டும். எப்பொழுது தெரியுமா? 'மௌத்'தை நினைத்து; மஹ்ஷர் மைதானத்தை நினைத்து. அப்படி உங்களின் கண்களிலிருந்து கண்ணீர் வருமானால், அது கண்ணீராக இராது; பன்னீராக இருக்கும்.

உங்கள் கணவருடன் தனித்திருக்கும் போது, கண்ணீருடன் நீங்கள் வீட்டில் உள்ளவர்கள் மீது குறை கூறினால், உங்கள் கணவர் உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு, தம்மைப் பெற்ற தந்தையை வெறுப்பார், தாயை வெறுப்பார். தம்முடன் பிறந்த சகோதரர்களை வெறுப்பார். சகோதரிகளை வெறுப்பார். இது இரத்த உறவை அறுக்கும் பாதகச் செயலாகும். நீங்கள் தாயாகப் போகலாம் அல்லது தாயாகியிருக்கலாம். உங்கள் பிள்ளைகளை இப்படி ஒருவர் உங்களை விட்டுப் பிரித்தால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? நீங்கள் சகோதரிகளுடன் பிறந்திருக்கலாம். சகோதரர்களுடன் பிறந்திருக்கலாம். உங்களை விட்டு இப்படி ஒருவர் உங்கள் சகோதரர்களை, சகோதரிகளைப் பிரித்தால், அதற்கு நீங்கள் உடன்படுவீர்களா?

எனவே குறைகள் இருந்தால், அவற்றை மறந்து விட்டு, குற்றங்கள் இருந்தால் அவற்றை மறைத்துவிட்டு, எல்லோருடனும் இணக்கமாக வாழுங்கள்! இணக்கமாக வாழ்வதைத் தான் அல்லாஹ்வும் விரும்புகிறான். அவன் தூதரும் விரும்புகிறார்கள். அண்ணல் நபி(ஸல்) அவர்கள் இது பற்றி என்ன கூறியிருக்கிறார்கள் தெரியுமா? ''உங்கள் தந்தையின் அன்பைக் காத்துக் கொள்ளுங்கள்! அதை முறித்துக் கொள்ளாதீர்கள்!



(அவ்வாறு முறித்துக் கொண்டால்) அல்லாஹ் உங்களின் ஒளியைப் போக்கி விடுவான்'' என்று ஒருமுறை கூறினார்கள். ''அன்னையோடு கொண்டிருந்த உறவை முறித்து, அவரோடு எவ்விதத் தொடர்பும் கொண்டிராத ஒருவனுடைய வாழ்க்கை இறைவனுடன் எவ்விதத் தொடர்போ, உறவோ இல்லாத வாழ்க்கையாகும்'' என்று மற்றொரு முறை கூறினார்கள்.

எனவே உங்கள் மாமனார், மாமியார் மீது குறைகள் சொல்லி, குற்றங்கள் கூறி, அவர்களை விட்டும் உங்கள் கணவரைப் பிரிக்கக் கனவிலும் கருதாதீர்கள்! மேலை நாடுகளின் நிலையைக் கீழை நாடுகளுக்குக் கொண்டு வந்து விடாதீர்கள்! மேலை நாடுகளில் பிள்ளைகள் திருமணம் செய்து கொண்டதும் மனைவியை அழைத்துக் கொண்டு தனிக் குடித்தனம் நடத்தப் போய்விடுகின்றனர். அந்தப் பிள்ளைகளைப் பெற்ற தந்தையும் தாயும், முதிய வயதில் அநாதைகளாகி விடுகின்றனர். ஆதரவற்றுப் போகும் அவர்கள், முதியோர்களுக்கு என இருக்கும் விடுதிகளில் அடைக்கலம் அடைகின்றனர். அங்கு முதுமையாலும், நோயாலும் முறிக்கப்பட்டு இறந்து விடுகின்றனர்.

உத்தியோகம் நிமித்தமாகவோ, தொழில் நிமித்தமாகவோ உங்கள் கணவர் பிறந்த ஊர் விட்டுப் பிற ஊர் போக நேர்ந்தால், அவருடன் நீங்களும் சென்று குடித்தனம் நடத்துங்கள்! பெரும்பாலான பெற்றோர்கள், தாம் இருக்கும் இடத்தில் தம் பிள்ளைகள் இருக்க வேண்டும்; அல்லது தம் பிள்ளைகள் இருக்கும் இடத்தில் தாம் இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். ஊரில் உங்கள் மாமனாரும் மாமியாரும் தனித்திருக்க விரும்பா விட்டால் அவர்களையும் உங்களுடன் அழைத்துக் கொண்டு செல்லுங்கள்! ஆனால் பெரும்பாலான பெண்கள் தங்களுடன் அவர்களை அழைத்துக் கொண்டு செல்ல விரும்புவதில்லை. அவர்களில் சிலர் அவர்களுக்கு ஏதாவது செலவுக்குப் பணம் அனுப்பி வைத்து விட்டால்

போதும் என்று எண்ணுவார்கள். சிலர் அப்படி அனுப்பி வைப்பதையும் கூட விரும்ப மாட்டார்கள். நீங்கள் இப்படி இருக்கக் கூடாது. உங்களின் மாமனார், மாமியார் உங்களுடன் வர விரும்பினால், அவசியம் அவர்களை உங்களுடன் அழைத்துக் கொண்டு செல்லுங்கள்! அவர்கள் உங்களுடன் வர விரும்பாவிட்டால் அவர்களுக்குத் தாராளமாகப் பணம் அனுப்பி வைக்கவாவது உங்கள் கணவரைத் தூண்டுங்கள்! உங்கள் கணவர் அப்படி அனுப்பி வைப்பவராக இருந்தால், அவர் அனுப்புவதைத் தடுக்காதீர்கள்; கெடுக்காதீர்கள்.

உங்கள் கணவரின் உடைமையில் உங்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறது, அவரின் பெற்றோர்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒருவர் அண்ணல் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் மகன் பலவீனனாய் இருந்தபோது நான் பலவானாய் இருந்தேன். அவன் ஆதரவற்றவனாக இருந்த போது நான் அவனுக்கு ஆதரவாக இருந்தேன். இப்பொழுது நான் பலவீனனாய் இருக்கிறேன். அவன் பலவானாய் இருக்கிறான். நான் ஆதரவற்றவனாய் இருக்கிறேன், அவன் செல்வந்தனாய் இருக்கிறான்'' என்று கூறித் தம் ஆற்றாமை யையும், ஆதரவற்ற நிலைமையையும் அறிவித்தார். அதைக் கேட்டு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? ''உம் செய்தி கல்லையும் கரைக்கக் கூடியதா யிருக்கிறது, உம் மகனின் உடைமையில் உமக்குத் தேவை யானவற்றை எடுத்துக் கொள்ளும்! அதற்கு உம் மகனின் அனுமதியை நீர் பெற வேண்டியதில்லை.''

இது கொடாத பிள்ளை பற்றிய சம்பவம். கொடுக்க விரும்பிய பிள்ளை பற்றிய சம்பவம் ஒன்று உங்களுக்குத் தெரியுமா? ஒருவர் அண்ணல் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னிடம் சொத்து இருக்கிறது. அது என் தந்தைக்குத் தேவைப்படுகிறது'' என்று கூறினார். உடனே அவர்கள், ''நீரும் உம் சொத்தும் தந்தைக்குச் சொந்தமானவை. உம் குழந்தைகள் நீர் அடைந்த மிகவும் அழகிய பொருள்கள் ஆவர். உம் குழந்தைகள் தேடியதை நீர் உண்ணும்!'' என்று கூறினர். பிள்ளைகளின் உடைமையில் பெற்றோர்களுக்கு எவ்வளவு உரிமை இருந்தால், அவர்கள் இப்படிக் கூறியிருப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள்



நீங்கள் புகுந்த வீட்டில் இருப்பவர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஓரளவு உணர்ந்து கொண்டீர்கள். அங்கு அடிக்கடி வருபவர்களுடன் எப்படிநடந்து கொள்ள வேண்டும் என்பதையும் ஓரளவு அறிந்து கொள்ளுங்கள்! உங்கள் கணவரின் உறவினர்கள் அங்கு அடிக்கடி வந்து போகலாம் அல்லது தங்கிச் செல்லலாம். அவர்கள் உங்களுக்கு உறவினர் களாயும் இருக்கலாம் அல்லது அந்நியர்களாயும் இருக்கலாம். உறவினர்களாயிருந்தால் பிரச்சினை இல்லை. அந்நியர் களாயிருந்தால் அவர்களுடன் எப்படி நீங்கள் நடந்து கொள்வது? அவர்கள் திருமணத்தின் மூலம் உங்களுக்குத் 'திடும்' என உறவினர்கள் ஆனவர்கள். அதனால் அவர்கள் மீது உங்களுக்கு உடனே அன்பு ஏற்படாதது இயல்புதான். ஆயினும் நீங்கள் அவர்களை, உங்களின் அன்பிற்குரிய கணவரின் உறவினர்கள் என்று எண்ணி நேசிக்க வேண்டும். அவர்களை, 'யார் எவர்?' என்று கேட்டு அறிந்து முறை சொல்லி அழைக்க வேண்டும். அவர்களுக்குரிய மரியாதையையும் கொடுக்க வேண்டும். அவர்கள் 'யாரோ, எவரோ? நமக்கென்ன?' என்று இருந்து விடக் கூடாது. அவர்கள் வரும்போதெல்லாம் அன்புடன் அழைத்து, உபசரித்து, பேசிப் பழக வேண்டும். இவ்விதம் செய்வது அந்த வீட்டுடன் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய உறவை வலுப்படுத்திக் கொள்ள உதவும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்து விட வேண்டும். உங்கள் கணவரின் உறவினர்களுடன் நீங்களும் அன்பாகப் பழகவேண்டும், தம் உறவினர்களுடன் உங்கள்

கணவர் அன்பாகப் பழகவும் அனுமதிக்க வேண்டும். சில பெண்கள் தம் கணவர், அவரின் உறவினர்களுடன் அன்பாகப் பழகுவதையோ, அவர்களுக்கு உதவுவதையோ விரும்ப மாட்டார்கள். சில பெண்கள் அவர்களை வெறுக்கவே செய்வார்கள். இது அல்லாஹ்வும் விரும்பாத செயலாகும். அவன் தூதரும் வெறுக்கும் செயலாகும். ''(அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்தக் கலப்புப் பந்துத்துவத்திற்கும் (மதிப் பளியுங்கள்!)'' *(4:1)* என்று அல்லாஹ் கூறுகிறான். ''உறவை முறித்து விடுகிறவன் சுவனம் புக முடியாது'' என்று அவன் தூதர் சொல்கிறார்கள்.

உங்கள் கணவரின் உறவினர்கள், உங்கள் வீட்டிற்கு வந்தால் எப்படிப் பழகுவது என்பதை அறிந்து கொண்ட நீங்கள், உங்கள் உறவினர்கள் உங்கள் வீட்டிற்கு வந்தால் எப்படிப் பழகுவது என்பதையும் தெரிந்திருப்பது அவசியம். உங்களின் பெற்றோர் களோ, உங்களின் சகோதரர்களோ, சகோதரிகளோ, உங்களைப் பார்க்க வந்தால், நீங்கள் சற்று அடக்கமாக நடந்து கொள்ள வேண்டும். இரத்த உறவானதால், அவர்கள் மீது உங்களுக்கு அதிக அன்பு இருப்பது இயல்பு. அதனை நீங்கள் வெளியில் காட்டிக் கொள்ளக் கூடாது. இப்பொழுது நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று உங்கள் கணவர் வீட்டி லுள்ளவர்கள் கவனிப்பார்கள். நீங்கள் சாதாரணமாக நடந்து கொண்டாலும், அதிகம் உபசரிப்பதாகக் கருதிக் கொள்வார்கள். இதை உணராமல் சில பெண்கள், தம் கணவரின் உறவினர் களைக் கண்டால் முகத்தைச் சுளித்துக் கொள்வார்கள். தம் உறவினர்களைக் கண்டால் முகத்தை விரித்துக் கொள்வார்கள். அவர்களுடன் கலகலப்பாகப் பேசுவார்கள். அவர்களைச் சற்று அதிகமாகவே உபசரிக்கவும் செய்வார்கள். இதைத் தவறு என்று கூறமுடியாது. எனினும் மனித மனங்களின் இயல்பை அறிந்து, நீங்கள் சற்று புத்திசாலித் தனத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இதற்குப் பயந்து கொண்டு சில பெண்கள் தம் பெற்றோர்களோ, தம் சகோதரர்களோ, சகோதரிகளோ,



உறவினர்களோ, தம்மைப் பார்க்க வந்தால், அவர்களுடன் ஒழுங்காகப் பேசவும் மாட்டார்கள்,அவர்களை உபசரிக்கவும் மாட்டார்கள். அந்த அளவு நீங்கள் இருக்க வேண்டியதில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கு ஓர் அறிவுரை கூறிவிட வேண்டும். உங்கள் பெற்றோர், தம் நடு வயதிலோ, தம் முதிய வயதிலோ, உங்களின் உடல் உதவியையும் நாடலாம், உங்களின் பொருள் உதவியையும் நாடலாம். அப்பொழுது, 'நம் கணவர், நம் குழந்தைகள் என்று மட்டும் சிந்தியாமல், 'நம்மைப் பெற்றவர்கள்' என்று சிந்தித்து அவர்களிடம் அன்பாக நடந்து கொள்ளுங்கள்! அவர்களுக்கு ஆதரவாக இருந்து கொள்ளுங்கள்! சில பெண்கள் திருமணம் நடந்து கணவர் வீடு வந்து விட்டபின், குழந்தைகள் பிறந்து விட்டபின், பெற்றவர்கள் என்று இருவர் இருக்கின்றனர் என்பதையும் மறந்து விடுகின்றனர். இப்படி நீங்கள் இராதீர்கள்.

திருமணம் ஆகும் வரை நீங்கள் உங்களின் தாய் தந்தை யருடனும், சகோதர சகோதரிகளுடனும் வாழ்ந்தவர்கள். அவர்களையெல்லாம் விட்டுப் பிரிந்து உங்களைக் கைப்பிடித்த கணவருடன் அவர் வீட்டிற்கு வந்து விடுகிறீர்கள். பிறந்த வீட்டிற்குப் போக வேண்டும், அங்கு உங்கள் தாய் தந்தையரைப் பார்க்க வேண்டும், சகோதர சகோதரிகளுடன் பேச வேண்டும் என்னும் ஆசை உங்களுக்கு இருப்பது இயல்பு. அந்த ஆசையை அடக்கிக் கொள்ளுங்கள்! உங்களின் பிறந்த வீட்டிற்கு அடிக்கடி போக வேண்டும் என்று விரும்பாதீர்கள். ஒரே ஊரிலேயே, ஒரே தெருவிலேயே உங்களின் பிறந்த வீடு இருந்தாலும், அங்கு அடிக்கடி போவதென்றால், உங்கள் கணவரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு, உங்கள் மாமனார், மாமியாரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு போங்கள்! வெளியூராக இருந்தால், அங்கு அதிக நாட்கள் தங்காதீர்கள்! உள்ளூராக இருந்தால், அங்கு அதிக நேரம் தங்காதீர்கள்!

உங்களுக்கு நினைவு தெரிந்தபின் பதினெட்டு ஆண்டுகள் தாம் நீங்கள் உங்கள் வீட்டிலேயே இருக்கிறீர்கள். அப்பொழுது நீங்கள் உங்கள் பெற்றோரின் செல்ல மகளாக இருக்கிறீர்கள். உங்களுக்குத் திருமணம் நடக்கிறது. நீங்கள் உங்கள் கணவரின் வீட்டிற்கு வருகின்றீர்கள். அங்கு நீங்கள் உங்களின் மாமனார் மாமியாருக்கு மருமகளாக ஆகின்றீர்கள். உங்கள் கணவருக்கு மனைவியாக அமைகின்றீர்கள்.உங்கள் குழந்தைகளுக்குத் தாயாக ஆகின்றீர்கள். உங்கள் வாழ்வின் முற்பகுதியை விட, பிற்பகுதிதான் பிரதானமானதாகும். அதனை நீங்கள் செம்மையாகச் செய்வதைப் பொறுத்துத்தான் இருக்கிறது உங்கள் வாழ்வின் சிறப்பு.

## நல்ல மனைவி

உங்களின் மாமனார், மாமியாருக்கு நீங்கள் நல்ல மருமகளாகவும் இருக்க வேண்டும். உங்களின் கணவருக்கு நீங்கள் நல்ல மனைவியாகவும் இருக்க வேண்டும். ஒருபெண்ணை நல்ல மனைவியாக ஆக்குவதில் பிரதானமானது, அவள் தன் கணவரின் திருப்தியைப் பெறும் விதம் நடந்து கொள்வதும் அதிருப்தியைப் பெறாவிதம் நடந்து கொள்வதும் ஆகும்.ஒருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எந்தப் பெண் மிகவும் நல்லவள்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள் அளித்த பதில் இது: ''அவளைக் கண்டு அவளுடைய கணவன் முகம் மலரக் காரணமாயிருப்பவளும், கணவன் இட்ட கட்டளையைப் பின் பற்றி நடப்பவளும், தன் உடலாலும், பொருளாலும் அவனுக்கு மாறுபட்டு நடந்து, அவனுடைய அதிருப்தியைப் பெறாதவளும் தான்.'' அண்ணல் நபி(ஸல்) அவர்களின் அறிவான இந்த பதிலில், ஒரு நல்ல பெண்ணுக்குரிய இலக்கணம் இருக்கிறது.

உங்கள் வாழ்வின் இலட்சியம் உங்கள் கணவரின் திருப்தியைப் பெற வேண்டும் என்பதாகவும், அவரின் அதிருப் தியைப் பெறக் கூடாது என்பதாகவும் இருக்க வேண்டும். உங்கள் கணவர் உங்கள் மீது திருப்தியுற்ற நிலையிலேயே, உங்களின் ஒவ்வொரு கணமும் கழிய வேண்டும், அதிருப்தியுற்ற நிலையில் ஒருகணம் கூடக் கழியக் கூடாது. ஒரு பெண் தன் கணவர் திருப்தியுற்ற நிலையில் இறப்பாளாயின்,

அவள் எங்கு செல்வாள் தெரியுமா? அண்ணல் நபி(ஸல்) அவர்களே கூறுகிறார்கள், கேட்டுக் கொள்ளுங்கள்: ''எந்தப் பெண்ணும், அவளுடைய கணவன் திருப்தியுற்ற நிலையில் இறந்து விடுவாளாயின், அவள் சுவனபதி செல்வாள்.''

இத்தகைய பாக்கியம் கணவரின் திருப்தியைப் பெறுவதில் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? சுவனபதியை வழங்கும் பல நற்செயல்கள் கணவரின் திருப்திக்கு ஈடாக இருப்பனவாகும். ஒரு நாள் ஒரு பெண்மணி அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமூகம் வந்து, தாங்கள், அல்லாஹ்வை நம்பியும், அவர்களை அல்லாஹ்வின் தூதர் என்று நம்பியும் இருந்தாலும் தாங்கள் வீட்டில் அடைபட்டுக் கிடப்பதாயும், கணவர்கள் தம் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ள, அவர்களின் குழந்தைகளை வயிற்றில் சுமப்பதாயும், எனினும் ஆண்கள் நன்மையான காரியங்களில் தங்களை மிகைத்து விடுவதாயும் கூறினார். அந்த நன்மையான காரியங்கள் ஜுமுஆத் தொழுகை, ஜமாஅத் தொழுகை, நோயாளியைக் கண்டு நலம் கேட்டல், ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொள்ளுதல், ஹஜ்ஜுக்கு மேல் ஹஜ்ஜுச் செய்தல், ஜிஹாதுப் போரில் கலந்து கொள்ளுதல் ஆகியவை என்றும், அந்தப் பெண்மணி குறிப்பிட்டார்.

''ஆண்கள் ஹஜ்ஜுக்கோ, ஜிஹாதுக்கோ சென்று விட்டால், அவர்களின் சொத்துக்களை காக்கின்றோம். அவர்களுக்குத் தேவையான துணிகளை நெய்கிறோம். அவர்களின் பிள்ளைகளை வளர்க்கிறோம். எனவே, நன்மையில் நாங்கள் அவர்களுக்குச் சமமாக மாட்டோமா?'' என்றும் அந்தப் பெண்மணி கேட்டார். அவர் சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ''ஒரு பெண் தன் கணவனுடன் இணக்கமாக நடந்து கொள்வது, அவனுடைய திருப்தியைத் தேடிக் கொள்வது, அவன் திருப்தி போல் நடப்பது ஆகியவை மேற்கண்ட நற்காரியங்களின் நன்மைகளுக்குச் சமமாகி விடும்.''



அந்தப் பெண்மணி குறிப்பிட்ட நற்செயல்களில் பிரதானமானது ஜிஹாது ஆகும். அது அல்லாஹ்வுக்காக ஆவியைத் திரணமாக மதித்து ஆடுகளத்தில் நின்று போரிடுவதைக் குறிக்கும். அதன் பலனைப் பெண்களாகிய நீங்கள் உங்கள் இல்லத்தில் இருந்து கொண்டே பெற முடியும். ''எப்படி?'' என்று கேட்கிறீர்களா? அண்ணல் நபி (ஸல்) அவர்களே பதில் கூறுகிறார்கள், கேட்டுக் கொள்ளுங்கள்! ''ஒரு பெண்ணின் ஜிஹாத், அவள் தன் கணவனை மகிழ்விப்பதில் அடங்கி யிருக்கிறது?''

எனவே நீங்கள் உங்கள் கணவர், உங்களை நினைத்து மகிழ்ச்சியுறும் விதம் நடந்து கொள்ள வேண்டும். மகிழ்ச்சியுற வேண்டுமானால், நீங்கள் அவர்மீது அன்பு செலுத்த வேண்டும்; அவருக்குப் பணிந்து நடக்க வேண்டும்; அவருக்கு ஆறுதலாய் இருக்க வேண்டும்; அவர் நலம் காக்க வேண்டும்; அவர் நன்மை நாட வேண்டும்; அவருக்காக இறைஞ்சிக் கொண்டே இருக்க வேண்டும்.

உங்கள் கணவர் உங்களின் முழு அன்பையும் பெற உரிமை பெற்றவர் ஆவார். அவருக்கு அதனை நீங்கள் அணுவளவும் குறைவில்லாமல் வழங்கிவிடவேண்டும். அவ்விதம் வழங்கி விடும் போது, அவரிடம் உங்களுக்குக் குறை எதுவும் தெரியாது, நிறை மட்டுமே தெரியும். மனிதர் என்றால் குறைகளும் இருக்கும். நிறைகளும் இருக்கும். உங்கள் கணவர் வானலோகத்திலிருந்து வந்தவர் அல்லர். எனவே, அவரிடம் சில குறைகள் இருந்தால், சில நிறைகள் இருக்கும். சில நிறைகள் இருந்தால் சில குறைகள் இருக்கும். குறைகளை மறந்து பழக வேண்டும். உங்கள் கணவர் அழகானவராயிருக்கலாம். அல்லது அழகற்றவராயிருக்கலாம்; படித்தவராயிருக்கலாம், அல்லது படியாதவராயிருக்கலாம்; செல்வந்தராயிருக்கலாம், அல்லது ஏழையாயிருக்கலாம்; திறமை மிகுந்தவராயிருக்கலாம், அல்லது திறமை குறைந்தவராயிருக்கலாம்.

கணவர் அழகானவராயிருந்தால், அதற்காக மகிழலாம், அழகற்றவராயிருந்தால் அதற்காக வருத்தப்படக் கூடாது.

மிகவும் அழகானவளாய் ஒரு பெண் இருந்தாள். ஆனால் அவளுக்கு அழகற்ற ஒருவன் கணவனாய் வந்தான். இதை ஒரு பெண் குத்திக் காட்டிய போது அவள் ஆத்திரத்துடன் அவளை வாயை மூடும்படிக் கூறிவிட்டு என்ன சொன்னாள். தெரியுமா? ''என் கணவர் என்ன நன்மை செய்தாரோ அவருக்கு அல்லாஹ் அழகான என்னைக் கொடுத்து மகிழச் செய்திருக்கிறான்.'' இவ்வித மனநிலையே பெண்களுக்கு இருக்க வேண்டும்.

பெரும்பாலான ஆண்களிடம் அழகு அதிகரிக்கும் போது திறமை குறைந்து விடுகிறது. ''எப்படி?'' என்று கேட்கிறீர்களா? அழகானவர்கள் தம் அழகை அலங்கரிப்பதிலே அக்கறை செலுத்துவார்கள். தம் திறமையை வளர்த்துக் கொள்ளத் தவறிவிடுவார்கள். அழகில்லாதவர்கள் தம் அழகில் இருக்கும் குறையைத் தம் திறமையைக் கொண்டு நிறைவு செய்ய முயலுவார்கள். அதில் வெற்றியும் பெறுவார்கள்.

ஆண்களிடம் அழகைவிடத் திறமைதான் அதிகம் இருக்கவேண்டும். அழகு குறைவாக இருந்து திறமை அதிகமாக இருந்தால் பாதகமில்லை. அழகு அதிகமாக இருந்து திறமை குறைவாக இருந்தால் பிரயோசனமில்லை.

அழகு குறையக் கூடியது; அழியக் கூடியது. எனவே குறையக் கூடிய ஒன்றைப் பற்றி, அழியக் கூடிய ஒன்றைப் பற்றி 'இல்லையே!' என்று கவலைப்படுவதில் ஒரு பயனும் இல்லை.

உடலின் அழகை விட, உள்ளத்தின் அழகே மேலானது. உள்ளத்தின் அழகு அழியாது. நோயோ, வயதோ,அதை ஒன்றும் செய்ய முடியாது. அதனால் தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''அழகான முகத்தை விட, அழகான ஆன்மாவே மேலானது'' என்று.

கணவர் படித்தவராக இருந்தால் அதற்காக மகிழலாம். படியாதவராக இருந்தால், அதற்காக வருத்தப்படக் கூடாது. கல்வியைப் பள்ளி சென்றால் தான் பெறமுடியும் என்பதில்லை. நூல்களைப் படிப்பதன் மூலமும் அதைப் பெற முடியும்.



கணவர் செல்வந்தராக இருந்தால், அதற்காக மகிழலாம். செல்வந்தராக இல்லாவிட்டால், அதற்காக வருத்தப்படக் கூடாது. ஒருவர் செல்வந்தராகவே எப்பொழுதும் இருந்து விடுவதில்லை. அதே போல் ஒருவர் ஏழையாகவே எப்பொழுதும் இருந்து விடுவதில்லை. உங்கள் கணவர் ஏழையாயிருந்தால், ஏதாவது ஒரு தொழிலைச் செய்யும்படி அவரைத் தூண்டுங்கள்! அந்தத் தொழிலைப் பிடித்துக் கொண்டிருக்கும்படியும் கூறுங்கள்! விடாமல் பிடித்துக் கொண்டிருந்தால் தொழில் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் கை தூக்கி விட்டுவிடும்.

கணவர் திறமை மிகுந்தவராக இருந்தால், அதற்காக மகிழலாம். திறமை குறைந்தவராக இருந்தால், அதற்காக வருத்தப்படக் கூடாது. அதிகத் திறமை சாலிகளை விட நடுத்தரத் திறமைசாலிகள் தாம் வாழ்வில் உயர்கிறார்கள். வாழ்வில் உயர்ந்து வாகை சூடுவதற்குத் திறமை மட்டும் போதாது. அதற்கு இன்னும் சில தன்மைகளும் வேண்டும். அவைதாம் தன்னம்பிக்கையும், தைரியமும் ஆகும். அவை உங்கள் கணவரிடம் வரவும், வளரவும், ஊக்கம் அளியுங்கள். உற்சாகம் அளியுங்கள்.

மொத்தத்தில் அவரிடம் உள்ள நிறைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிராமல் உங்களிடம் உள்ள குறைகளை அப்புறப்படுத்துங்கள்! அவர், உங்களுக்கு இசைவானவரா என்று பார்த்துக் கொண்டிராமல், நீங்கள் அவருக்கு இசை வானவர்களா எனப் பார்த்து அவருக்கு இசைவானவர்களாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள்!

உங்கள் கணவருக்கு பணிந்து நடந்து கொள்ளுங்கள்! முஸ்லிம்களாகிய நாம் அல்லாஹ் ஒருவனுக்குத் தான் சிரம் பணிய வேண்டும். இந்தத் தடைமட்டும் இல்லாதிருந்தால் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் என்ன செய்திருப்பார்கள் தெரியுமா? அதை அவர்களே கூறுகிறார்கள், கேளுங்கள்! ''ஒருவர் மற்றொருவருக்குச் சிரம்பணிய கட்டளையிடுவதா

யிருந்தால் மனைவி தன் கணவனுக்குச் சிரம் பணிய வேண்டும் என்று கட்டளையிட்டிருப்பேன்.'' மனைவி கணவனுக்குப் பணிந்துநடக்க வேண்டும் என்பதை இதையும் விட அழுத்தமாக எப்படிக் கூற முடியும்?

பணிவு உங்களின் உடலிலும் இருக்க வேண்டும், உள்ளத்திலும் இருக்க வேண்டும். உள்ளத்தில் பணிவு இருந்தால் தான் உடலில் பணிவு ஏற்படும். உங்கள் கணவர் ஒன்றைக் கூறி, அதைச் செய்யச் சொன்னால் அதை அவசியம் செய்ய வேண்டும். ஒன்றைக் குறிப்பிட்டு அதைச் செய்யக் கூடாது என்றால், அதை அறவே செய்யக் கூடாது. ''எங்கள் கணவர் இஸ்லாத்திற்கு முரணான காரியம் ஒன்றைச் செய்யச் சொன்னால் என் செய்வது?'' என்று நீங்கள் கேட்கலாம். அதை நீங்கள் செய்ய வேண்டியதில்லை. உதாரணமாக, உங்கள் கணவர் உங்களைத் தொழ வேண்டாம் என்று தடுத்தால் அந்த விஷயத்தில் அவர் சொல்லை நீங்கள் கேட்க வேண்டாம்! ஆனால் அவர் அதிகப்படியாக நீங்கள் தொழுவதையோ, அதிகப்படியாக நீங்கள் நோன்பு வைப்பதையோ விரும்ப வில்லை என்றால் அவர் விருப்பத்திற்குப் பணிந்து அவற்றைத் தவிர்வதில் தவறவில்லை.

ஒருநாள் சப்வான் இப்னு முஅத்தல் என்னும் தோழர் அண்ணல் நபி(ஸல்) அவர்களின் சமூகத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது அவருடைய மனைவி அங்கு வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தொழுவதை என் கணவர் தடுக்கிறார்,'' என்று கூறினார். அது கேட்டு அவரின் கணவர், ''அவள் தொழும்போது இரண்டு சூராக்கள் (அல்லது நீண்ட சூரா) ஓதி அதிக நேரம் தொழுகிறாள். நான் இளைஞன்'' என்று கூறினார். உடனே அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அந்தப் பெண்மணியிடம், ''நீர் அவ்வாறு தொழ வேண்டாம்!'' என்று சொன்னார்கள். அடுத்து அந்தப் பெண்மணி, ''நான் அதிகப் படியான (நஃபில்) நோன்பு வைப்பதை அவர் தடை



செய்கிறார்'' என்று கூறினார். அதற்கு அவரின் கணவர், ''அவள் அடிக்கடி நோன்பு நோற்கிறாள். நான் பகலில் ஓய்வு கொள்பவன்'' என்று சொன்னார். அது கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அந்தப் பெண்மணியை நோக்கி, ''அவ்வாறு நீர் நோன்பு நோற்க வேண்டாம்!'' என்று கூறினார்கள்.

இன்னொரு சமயம் அவர்கள், ''அவர்கள் முன்னிலையில் அவரின் அனுமதியின்றி மனைவி அதிகப்படியான (நஃபில்) நோன்பு நோற்றல் ஆகாது'' என்று அறிவித்தார்கள்.

தொழுவது, நோன்பு நோற்பது ஆகியவை மிகவும் மேலான வணக்கங்கள் ஆகும். அவற்றையும் கூட நீங்கள் அதிகம் செய்வதை உங்கள் கணவர் தடுப்பாரானால் அவர் சொல்லிற்குப் பணிந்து நீங்கள் அவர் விரும்பும் விதம் நடந்து கொள்ள வேண்டும். இந்த உண்மையைத் தான் அண்ணல் நபி(ஸல்) அவர்களின் இரு உரைகளும் உணர்த்துகின்றன. மேலான வணக்கங்களை அதிகமாகச் செய்வதைக் கூட, உங்கள் கணவர் விரும்பவில்லை என்றால், அவர் சொல்லிற்குப் பணிந்து அவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றிருந்தால், மற்ற விஷயங்களிலெல்லாம் நீங்கள் அவருக்கு எப்படிப் பணிந்து நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணிப் பாருங்கள்!

உங்கள் கணவர் அனாவசியமாக நீங்கள் வெளியே போகக் கூடாது என்று உங்களிடம் கூறியிருந்தால், அவர் சொல்லிற்குப் பணிந்து அப்படியே தான் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். அவர் வீட்டில் இருக்கும் போது அல்லது ஊரில் இருக்கும் போது அப்படி நடந்து கொண்டால் போதும். அவர் வீட்டில் இல்லாத போது, அவர் ஊரில் இல்லாத போது அப்படி நடந்துகொள்ள வேண்டியதில்லை என்பது சில பெண்களின் கொள்கை. இது கணவர் சொல்லை மீறுவதுடன் அவரை ஏமாற்றுவதுமாகும். ஒரு பெண் எப்படி நடந்து கொண்டாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஒருவர் தாம் வெளியூர் புறப்படும் போது தம் மனைவியிடம் தாம் திரும்பும் வரை வீட்டை விட்டு வேறு எங்கும் போகக் கூடாது என்று கூறினார். அவளும் அவ்விதமே செய்வதாக வாக்களித்தாள். அவள் கணவர் வெளியூர் புறப்பட்ட சில நாள்களிலேயே அவளுக்கு ஒரு சோதனை வந்தது. அவளின் தந்தை நோய் வாய்ப்பட்டார். அவரைச் சென்று காண வேண்டும் என்னும் ஆவல் அவள் மனத்தில் எழுந்தது. கணவர் இட்ட கட்டளையும், அதற்குத் தான் அளித்த இணக்கமும் அவளின் நினைவிற்கு வந்தன. இந்நிலையில் என் செய்வது என அறியாது திகைத்த அவள், அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் விஷயத்தைக் கூறி அவர்களின் கருத்தை அறிந்து வருமாறு ஓர் ஆளை அனுப்பி வைத்தாள். அந்த ஆள் வந்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் விஷயத்தைக் கூறினார். அவள், தன் கணவர் இட்ட கட்டளைப்படி தன் வீட்டை விட்டுப் போகக்கூடாது' என்று அவர்கள் கூறினார்கள்.

சில நாட்களில் அவளின் தந்தை இறந்து விட்டார். அவரின் 'மையித்'தையாவது பார்க்க வேண்டும் என்று விரும்பி அவள் மறுபடியும் அண்ணல் நபி(ஸல்) அவர்களிடம் ஆள் அனுப்பினாள். அப்பொழுதும் அவர்கள் தன் வீட்டை விட்டுப் போகக் கூடாதென்றே கூறினார்கள். அதன்படி அவள் தன் வீட்டை விட்டு வெளியே தன் காலை எடுத்து வைக்கவில்லை. அவளின் தந்தை உடல் அடக்கப்பட்டதும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். ''அவர் சுவர்க்கவாதி ஆகிவிட்டார். அவர் செய்த 'அமலா'ல் அல்ல. கணவர் சொல்லை மீறாத மகளைப் பெற்றதால்'' என்று.

இன்னொரு சமயம் அவர்கள் கூறினார்கள், ''ஒரு பெண்ணின் நல்லொழுக்கத்தால் பெற்றோரின் குற்றங்களையும் அல்லாஹ் மன்னித்தருள்வான்'' என்று.

ஒரு பெண்ணின் கணவர் சொல்லை மீறாத் தன்மையும், மற்றும் அவளின் நல்லொழுக்கமும், அவளின் பெற்றோர்



களுக்கே சுவர்க்கத்தைக் கொடுக்கும் போது, அவளுக்கு சுவர்க்கத்தைக் கொடாமல் இருக்குமா? அதைத்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்தச் சொற்கள் உணர்த்துகின்றன. ''ஒரு பெண் தன் ஐந்து (நேரத்) தொழுகையைத் தொழுது, தன் (ரமலான் மாத) நோன்பையும் நோற்று, தன் கற்பையும் காத்து, தன் கணவனுக்கு முற்றிலும் பணிந்து நடந்தால், அவள் தான் விரும்பும் வாயில் வழியாக சுவர்க்கம் புகலாம்.''

கணவர் சொல்லிற்குப் பணிந்து நடப்பதிலுள்ள இந்த அரிய நன்மையை அறியாத சில பெண்கள் தாம், கணவர் ஒன்றை செய்யச் சொன்னால் அதைச் செய்யமாட்டார்கள், ஒன்றைச் செய்யக் கூடாதென்றால் அதைச் செய்வார்கள். இவ்விதம் நீங்கள் ஒருபோதும் இருக்கக் கூடாது.

பெரும்பாலான பெண்களின் குணம் கணவரை எதிர்த்துப் பேசுவது, அவர்களின் கணவர் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் அதனை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள். அல்லாஹ்வை தரிசித்தவர்கள் ஆவார்கள். அவனுடன் வசனித்தவர்கள் ஆவார்கள். அவர்களையே, அவர்களின் மனைவி ஆயிஷா (ரலி) அவர்கள் சில சமயங்களில் எதிர்த்துப் பேசியிருக்கின்றனர். ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா (ரலி) அவர்களைப் பார்த்து, ''உம் ஷைத்தானை அடக்கிக் கொள்ளும்'' என்று கூறினார்கள். அடுத்த கணம் ஆயிஷா (ரலி) அவர்கள் அண்ணல்நபி (ஸல்) அவர்களைப் பார்த்து, ''உங்கள் ஷைத்தானை அடக்கிக் கொள்ளுங்கள்!'' என்று கூறினார்கள். அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள், ''என் ஷைத்தானை எப்பொழுதோ நான் இஸ்லாமாக்கி விட்டேன்'' என்று பதில் அளித்தார்கள்.

இதைப் பார்த்து விட்டு, ''ஆயிஷா (ரலி) அவர்களே அல்லாஹ்வின் தூதர் அவர்களை எதிர்த்துப் பேசியிருக்கிறார்களே. நாங்கள் எல்லாம் சாதாரணப் பெண்கள் தாமே.

நாங்கள் ஏன் எங்கள் கணவரை எதிர்த்துப் பேசக் கூடாது?'' என்று கேட்டு விடாதீர்கள்! அல்லாஹ்வின் தூதர் அவர்களை, அல்லாஹ்வை தரிசித்தவர்களை, அவனுடன் வசனித்தவர்களைக் கூட எதிர்த்துப் பேசக் கூடியவர்களாய்ப் பெண்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு உணர்த்தத் தான் இந்தச் சம்பவம் இங்குக் குறிப்பிடப்படுகிறது.

உங்கள் கணவர் ஒன்றைக் கூறினால், உடனே அதனை செவி தாழ்த்திக் கேளுங்கள்! சில பெண்கள் தம் கணவர் என்னதான் கூறினாலும், அதனை கவனிக்க மாட்டார்கள். எவ்வளவுதான் உரத்துக் கூறினாலும், தம் செவியில் விழாதது போல் நடந்து கொள்வார்கள். இப்படி நீங்கள் இருக்கக் கூடாது.

உங்கள் கணவர் ஒன்றைக் கூறினால், ''ஏன்? எதற்கு?'' என்றெல்லாம் கேட்காதீர்கள். கணவர் வந்து 'எழு' என்று சொன்னதும், 'எங்கு' என்று கேட்காமல் அவருடன் புறப்பட ஆயத்தமானாள் நம் நாட்டில் தோன்றிய பத்தினிப் பெண் கண்ணகி என்று கூறுவர். இப்படித்தான் நீங்களும் நடந்து கொள்ள வேண்டும்.

''எங்கள் கணவர் சொல் ஏற்றுக் கொள்ளத்தக்கதாய் இராவிட்டால் என் செய்வது?'' என்று நீங்கள் கேட்கலாம். அவ்விதம் உங்களுக்குத் தோன்றினால் உடனே அதை எதிர்க்காதீர்கள்! சற்றுத் தாமதித்தோ, கணவருடன் தனித்திருக்கும் போதோ, அதைப் பற்றி இதமாக எடுத்துக் கூறுங்கள்! 'இப்படிச் செய்தால் நலமாயிருக்கும்' என்பது போல் உங்கள் பேச்சு மென்மையாக இருக்கட்டும். அறிவானதாக உங்கள் அபிப்பிராயம் இருந்தால், அதை உங்கள் கணவர் கவனிக்கவே செய்வார். அவ்விதம் நீங்கள் இதமாக எடுத்துக் கூறியும், அவர் உங்கள் சொல்லை ஏற்காவிட்டால், அவர் சொற்படி நடந்து விடுவதே நல்லதாகும்.

சில பெண்களின் குணம் கணவரைவிட உரத்துப் பேசுவது. கணவர் சொல்லைத் தம் சொல் மிகைத்திருக்க



வேண்டும். கணவர் சொல்லைவிடத் தம் சொல் உரத்திருக்க வேண்டும், என்பது இவர்களின் கொள்கை. உங்களிடம் இந்தக் கொள்கை இருக்கக் கூடாது. ஏனெனில் ஷைகு சஅதி(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். ''கணவனின் குரலைவிட, மனைவியின் குரல் பெரிதாகக் கேட்டால், அந்த வீட்டில் மகிழ்ச்சியின் கதவு அடைக்கப்பட்டு விட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்'' என்று.

இந்தப் பெண்கள் இப்படி உரத்துப் பேசுவதற்கு ஒரு காரணம் அவர்கள், தாங்கள் தாம் வீட்டின் அரசி என்று கருதிக் கொள்வதாகும். அவர்கள் தாம் வீட்டின் அரசி என்பதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அங்கு அரசனும் இருக்கிறான் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டாமா? உண்மையில் அவர்களில் பலர் உரத்த குரல் உடையவர்கள் மட்டுமல்ல; தடித்த மனம் உடையவர்களும் ஆவர்.

சில பெண்களின் குணம் கணவரைத் திட்டுவது. உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருந்த காலம் அது. ஒருவர் தம் மனைவியின் அடங்காத் தன்மை, அளவை மீறிப் போய் விடவே, அவளை மணவிலக்குச் செய்துவிட வேண்டும் என்று மனத்தில் தீர்மானித்துக் கொண்டு, கலீபா உமர் (ரலி) அவர்களைக் காண வருகிறார். அப்பொழுது அவர்கள் தம் வீட்டிற்கு வெளியே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். வீட்டின் உள்ளே இருந்து அவர்களை, அவர்களின் மனைவி திட்டும் வசைச் சொற்கள் வந்து கொண்டிருக்கின்றன. பேய்கள் கூட எதிரே வர அஞ்சக் கூடிய கலீபா உமர் (ரலி) அவர்கள், எதுவுமே நிகழாதது போல் அமைதியாக அமர்ந்திருக்கிறார்கள். இதைப் பார்க்கிறார் அந்த மனிதர். 'இங்கும் அதே நிலைதானா?' என்று மனத்திற்குள் எண்ணிக் கொண்டு திரும்புகிறார். தம்மை நோக்கி அவர் வந்ததையும், வந்தவர் எதுவும் சொல்லாமல் திரும்புவதையும் பார்த்து விடுகிறார்கள் கலீபா உமர் (ரலி) அவர்கள். அவரை, அவர்கள் கூவி அழைக்கிறார்கள். அவர்

வருகிறார். தாம் வந்த நோக்கத்தையும், அங்கு நிகழ்ந்ததையும், அதைப் பார்த்து விட்டுத் திரும்புவதையும் அவர் கூறுகிறார். கலீபா உமர் (ரலி) அவர்கள் அவரைப் பார்த்து, ''அவள் என்னை விபச்சாரத்திலிருந்தும் காக்கிறாள். அதனால் தான் இதனைப் பொறுத்துக் கொள்கிறேன்'' என்று சொல்கிறார்கள். எவ்வளவு மன வேதனையுடன் கலீபா உமர்(ரலி) அவர்கள் இப்படிக் கூறியிருப்பார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்!

முற்காலத்தில் கிரேக்க நாட்டில் சாக்ரடீஸ் என்று ஓர் அறிஞர் இருந்தார். அவரும் வீட்டிற்கு வெளியே தான் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரை அவரின் மனைவி வேண்டும் மட்டும் திட்டினாள். அப்படித் திட்டியும் அவளின் ஆத்திரம் தணியவில்லை. ஒரு குடம் நிறையத் தண்ணீர் கொண்டு வந்து அவரின் தலையில் கொட்டினாள். அதைத் தெருவில் சென்ற ஒருவர் பார்த்து விட்டு அது பற்றிக் கேட்டபோது அந்த அறிஞர், ''சற்றுமுன் இடிஇடித்தது. இப்பொழுது மழை பெய்கிறது'' என்று கூறினார். நகைச் சுவையுடன் அவர் இப்படிக் கூறினாலும், அவர் மனம் எத்துணை நைந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்!

சில பெண்கள் தம் கணவரை நேரிடையாகத் திட்டு வார்கள், சில பெண்கள் மறைமுகமாகத் திட்டுவார்கள். ''அல்லாஹ் என்னை விரைவில் எடுத்துக் கொள்!'' என்று இறைஞ்சுவார்கள். இது துறவு மனப்பான்மையுடன் செய்யப்படும் 'துஆ' ஆகாது. 'என் நிலை, இருப்பதைவிட இறப்பதே மேல் என்னும் நிலைக்கு வந்துவிட்டது' என்று சொல்லாமல் சொல்வதாகும் இது. இதைச் சில சமயங்களில் பிறர் செவியில் படும்படியும் பல சமயங்களில் கணவர் செவியில் விழும்படியும் சொல்வார்கள்.

சில பெண்கள் கணவரை மட்டும் திட்டுவதுடன் நிற்க மாட்டார்கள். அவரின் குலத்தை, கோத்திரத்தை எல்லாம் இழுத்தும், பழித்தும் பேசுவார்கள். கணவரின் மனத்தைப்



புண்படுத்த வேண்டுமானால், அவரை மட்டும் திட்டினால் போதாது, அவர் குலத்தை, கோத்திரத்தையெல்லாம் இழுக்க வேண்டும், பழிக்க வேண்டும் என்று எண்ணித்தான் அவர்கள் இப்படிச் செய்கிறார்கள்.

பெண்களிடம் இருக்கும் கூரான ஆயுதம் அவர்களின் நாவு ஆகும். அது என்றுமே மழுங்கியதில்லை என்று கூறுவதுண்டு. அந்தக் கூரான ஆயுதத்தைக் கணவரைத் துன்புறுத்தப் பயன்படுத்தும் பெண்கள் பெறும் நிலையை நீங்கள் அறிந்தால், அது என்றென்றும் மழுங்கியே இருக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். அது பற்றி அண்ணல் நபி(ஸல்) அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? ''எவள் தன் கணவனை நாவால் துன்புறுத்துகிறாளோ, அவளை அல்லாஹ்வும், அவன் தூதரும் சபிக்கின்றனர்.''

பெண்கள் இப்படித் தம் கணவரிடம் கடுமையாக நடந்து கொள்வதற்குக் காரணம், அவர்களுக்குத் தம் கணவர் மீது மதிப்பில்லாததாகும். இறைதூதர்களுக்கு மனைவிகளாக இருந்தும் அவர்களை மதிக்காமலும், அவர்களின் சொற் களுக்குச் செவி கொடுக்காமலும் நடந்துகொண்ட பெண்களும் உண்டு. நபி நூஹ் (அலை) அவர்களின் மனைவி வாயி லாகவும், நபி லூத் அவர்களின் மனைவி வாயிலாவும் தம் கணவர்கள் இறைதூதர்களாயிருந்தும், அவர்களுக்கு மாறுபட்டு நடந்து இறைமுனிவிற்கு இலக்கானார்கள்.

ஷைகு சஅதி அவர்கள் பல நாடுகளிலும் பயணம் செய்து கொண்டு வரும் போது அவர்களைப் பறங்கிக்காரர்கள், திரிப்போலி நகரில் வைத்துப் பிடித்துச் சிறை செய்து விட்டனர். அவர்களின் அவல நிலையை உணர்ந்து ஒருவர் அவர்களை பத்து தீனார் கொடுத்து விடுதலை செய்து நூறு தீனார்களை வழங்கி அவர்களுக்குத் தம் மகளைத் திருமணம் செய்து வைத்தார். அவரின் மகளோ, அவர்களை மதிக்கவும் இல்லை.அவர்களின் சொல்லிற்கு மதிப்பளிக்கவும் இல்லை!

அவர்கள், அவளிடம் அகப்பட்டுக் கொண்டு பட்டபாடு கல்லையும் கரைக்கக் கூடியதாகும். ஒருநாள் அவள், ''பத்து தீனார்களுக்கு என் தந்தையால் விலை கொடுத்து வாங்கப் பட்டவர் தாமே நீர் என்பதை அறிவீரா?'' என்று கேட்டாள். அதற்கு அவர்கள், ''ஆம்! பத்து தீனார்களுக்கு விலைக்கு வாங்கி நூறு தீனார்களுக்கு என்னை உனக்கு விலைப்படுத்தி விட்டான் உன் அப்பன் என்பதை நான் அறிவேன்'' என்று கூறினார்கள்.

ஓர் ஊரில் இறைநேசச் செல்வர் ஒருவர் இருந்தார். அவரை, அவரின் மனைவி ஒரு சிறிதும் மதிப்பதில்லை. ஒரு நாள் அவள் தன் வீட்டின் முற்றத்தில் நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது எவரோ ஒருவர் தன் தலைக்கு மேல் பறந்துசெல்வதுபோல் தோன்றியது. அந்த அற்புதத்தை அவள் தன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த பெண்ணிடம் கூறினாள். அதைக் கேட்டு அந்தப் பெண், ''அது உங்கள் கணவர் தாமே'' என்று கூறியதுதான் தாமதம், அந்த இறைநேசச் செல்வரின் மனைவி அவரைத் தூற்றத் தொடங்கிவிட்டாள். இப்படி நீங்கள் இருக்கக் கூடாது. உங்கள் கணவர் பிறரால் மதிக்கத்தக்கவராய் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவர் உங்களால் மதிக்கப்பட வேண்டும், மரியாதை செய்யப்படவேண்டும்.

சில பெண்களின் குணம் கணவரின் இன்பத்தில் பங்காளி யாய் இருப்பது, அவரின் துன்பத்தில் பங்காளியாய் இருக்க மறப்பது. உங்கள் கணவரின் துன்பத்தை உங்களால் முடிந்த மட்டும் தாங்கி, அவருக்கு ஆதரவாய் இருங்கள். இல்லையேல் ஆறுதலாவது கூறுங்கள்! நீங்கள் கூறும் ஆறுதல் மொழிகள் அவருக்கு எவ்வளவு ஆற்றல் அளிக்கும் தெரியுமா? இறை தூதர்களின் மனைவிமார்கள் பலர் அப்படித்தான் இருந்திருக் கிறார்கள். இறைதூதர்கள் கொடிய பகைவர்களுக்கு மத்தியில் கொள்கைப் பிரச்சாரம் செய்தார்கள். 'நானே இறைவன்' என்று சொன்னவர்களை அவர்கள் எதிர்த்து நின்றார்கள். 'நானே இறைவன்' என்று ஒருவன் கூறுவானானால், அவனிடம்



எவ்வளவு அதிகாரம் இருந்திருக்கும், எத்துணை ஆட்படை இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்! அவர்களைத் தாம் இறைதூதர்கள் எதிர்த்து நின்றார்கள். அவர்களின் ஆபத்து மிக்க வாழ்க்கையில் சோதனை மிகுந்த வாழ்க்கையில் அவர்களுக்கு ஆதரவானவர்களாய், ஆறுதல் கூறுபவர்களாய், அவர்களின் மனைவிமார்கள் இருந்தார்கள். அதனால் தான் மண மக்களை வாழ்த்தும் போது ''நபி இபுராஹீம் (அலை) அவர்களும், அவர்களின் மனைவி சாராவும் போல் வாழுங்கள்! நபி மூஸா (அலை) அவர்களும், அவர்களின் மனைவி சபூராவும் போல் வாழுங்கள்! நபி ஐயூப் (அலை) அவர்களும், அவர்களின் மனைவி ரஹீமாவும் போல் வாழுங்கள்! நபி முகம்மது (ஸல்) அவர்களும், அவர்களின் மனைவி கதீஜா (ரலி) அவர்களும் போல் வாழுங்கள்!'' என்று வாழ்த்தும் வழக்கம் இருந்து கொண்டிருக்கிறது.

நபி ஐயூப் (அலை) அவர்களும், அவர்களின் மனவை ரஹீமா அவர்களும் வாழ்ந்த விதத்தை நீங்கள் அறிந்தால், உங்கள் கண்களில் கண்ணீர் ததும்பும். நபி ஐயூப் (அலை) அவர்களின் உடைமைகள் எல்லாம் நெருப்பில் எரிந்து விடுகின்றன. அவர்களின் உடலிலும் கொடுநோய் பற்றிக் கொள்கிறது. இந்நிலையில் அவர்களை வறுமையும் வாட்டத் தொடங்குகிறது. ஒரு நாள் நபி ஐயூப்(அலை) அவர்கள் பசி தாங்க முடியாமல் தம் அருமை மனைவி ரஹீமா அவர்களைப் பார்த்து, ''உண்பதற்கு ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டிருக்கிறார்கள். '' ஒரு பொருளும் இல்லை'' என்று சொல்ல ரஹீமா அவர்களின் மனம் இடம் கொடுக்கவில்லை. 'என்ன செய்யலாம்?' என்று யோசிக்கிறார்கள். அவர்கள் மனத்தில் ஓர் அருமையான யோசனை உதிக்கிறது. தம்முடைய நீண்ட கூந்தலை வெட்டி விற்று, அதற்கு உணவுப் பொருள் வாங்கி வந்து தம் கணவருக்குச் சமைத்துக் கொடுக்கிறார்கள். நபி ஐயூப்(அலை) அவர்களைப் பற்றியிருந்த கொடிய நோய்

முற்றி அவர்களின் உடலெங்கும் புழுக்கள் நெளிகின்றன. அந்தப் புழுக்களைத் தம் கைகளால் எடுத்தால் அது தம் கணவருக்கு வேதனை அளிக்கலாம் என்று எண்ணி, ரஹீமா அவர்கள் தம் கணவரின் உடலில் ஊர்ந்து அவர்களின் ஊனைத்தின்னும் அந்தப் புழுக்களைத் தம் நாக்கால் நக்கி எடுக்கிறார்கள்.

அண்ணல் நபி(ஸல்) அவர்களுக்கு அவர்களின் அருமை மனைவி கதீஜா (ரலி) அவர்கள் ஆறுதலாய் இருந்த விதத்தை அறிந்தால், நீங்கள் ஆச்சரியம் அடைவீர்கள். நபி இபுராஹீம் (அலை) அவர்களின் மார்க்கம் எது என்று அறிவதற்காகவும், அரபு அவனியைப் பற்றியிருந்த அடர் இருள் அகல வழி யாது என்று அறிவதற்காகவும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து சற்றுத் தொலைவில் இருந்த ஹிரா மலைப் பொதும்பில் நாள் கணக்கில் முகவாய் நெஞ்சில் படத் தலையைத் தாழ்த்திய வண்ணம் இருந்து கொண்டு தவம் செய்வது வழக்கம். அவ்விதம் அமர்ந்திருக்கும் போது தான், ஒரு நாள் இரவு ஒளியால் ஆன உருவத்தில் 'நாமூஸுல் அஃலம்' என்னும் ஜிப்ரயீல் (அலை) அவர்கள், அவர்கள் முன் தோன்றி, அவர்களை இறுக அணைத்து ''ஓதும்!'' என உரைத்து, அவர்களை இறைவன் தன் தூதராய்த் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்று கூறுகிறார்கள். அங்கு அடைந்த அனுபவமும், அறிந்த செய்தியும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நெஞ்சை அதிரச் செய்கின்றன. உடனே அவர்கள் தம் வீட்டிற்கு விரைந்து வருகிறார்கள்.

ஹிரா மலைக்குத் தவம் செய்யச் சென்றிருக்கும் தம் கணவர் எப்பொழுது வருவார் என்னும் ஏக்கத்துடன் ஒவ்வொரு நாள் இளங்காலையிலும், கதீஜா (ரலி) அவர்கள், தம் வீட்டின் மாடத்தில் நின்று அவர்களைப் பார்ப்பது வழக்கம். அன்றும் அவர்கள் அப்படித்தான் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். தம் வீட்டின் கதவு தட்டப்படும் ஒலி கேட்டதும் ஓடோடிச் சென்று கதவைத் திறக்கிறார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உள்ளே நுழைந்து, ''என்னைப் போர்த்தும்!''



என்று கூறுகிறார்கள். கதீஜா (ரலி) அவர்களும், அவர்களைப் போர்த்துகிறார்கள். சிறிது நேரம் சென்றதும் அவர்கள், தாம் ஹிரா மலையில் அடைந்த அனுபவத்தைக் கூறி, ''என்னை இறைவன் தன் தூதுவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறான்'' என்கிறார்கள். அக்கணமே அப்துல்லாஹ்வின் புதல்வரை, அல்லாஹ்வின் தூதர் என்று ஏற்றுக் கொண்டு முதல் முஸ்லிம் என்னும் பெருமைக்கு உரிமைக்காரர் ஆகிறார்கள் கதீஜா (ரலி) அவர்கள்.

ஹிராக் குகையில் பெற்ற அனுபவத்தால் அதிர்ந்த வர்களாய் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இருந்த சமயத்தில், கதீஜா (ரலி) அவர்கள் கூறிய ஆறுதல் மொழிகள், ஆறுதல் மொழிகள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கூறத் தக்கவையாகும். கதீஜா (ரலி) அவர்கள் கூறிய ஆறுதல் மொழிகளை நீங்களும் அறிய விரும்புகிறீர்களா, கேளுங்கள்! ''அபுல் காசிம்! ஏன் பயப்படுகிறீர்கள்? தைரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் இருங்கள்! அல்லாஹ் உங்களுக்கு யாதொரு தீங்கும் செய்ய மாட்டான். நீங்களோ உண்மையாளர், உறவினர்களை ஆதரிப்பவர்கள், இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் பண்புடையவர்கள், சங்கைக் குணமும், சற்குணமும், ஈகைக்குணமும் இரக்க குணமும் உள்ளவர்கள். இத்தகைய உங்களுக்கா இறைவன் தீங்கு செய்வான்? ஒரு போதும் செய்ய மாட்டான். உங்களைப் பெரும் செயல் ஒன்றிற்காகத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறான்.''

எவ்வளவு அன்பு வழிகிறது இந்த ஆறுதல் மொழிகளில் என்பதைக் கவனியுங்கள்! அன்பு ததும்ப தம் பிரிய கணவரை பட்டப் பெயர் கூறி அழைத்து, தைரியத்துடனும், மகிழ்ச்சி யுடனும் இருக்கச் சொல்லி, அவர்களின் அரிய குணங்களை எடுத்துக் கூறி, அத்தகைய அவர்களுக்கு அல்லாஹ் ஒரு தீங்கும் செய்யமாட்டான் என்று உறுதி அளித்து, இறுதியாக அவர்களை ஒரு பெரிய காரியத்திற்காகத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்று அறுதியிட்டுப் பகரும் பாங்கைப் பாருங்கள்!

உங்கள் கணவருக்கு ஏதாவது சங்கடங்கள் ஏற்பட்டு, அவர் அவற்றை உங்களிடம் வந்து கூறினால், நீங்களும் அவருக்கு இப்படித் தான் ஆறுதல் கூற வேண்டும். உங்கள் கணவர் தம் சங்கடங்களைக் கூறி ஆறுதல் பெறுவதற்கு உங்களைவிட நெருக்கமானவர் இன்னொருவர் இருக்க முடியுமா? எனவே, உங்கள் கணவர் வந்து உங்களிடம் தம் சங்கடங்களைக் கூறினால் அவரிடம் அல்லாஹ் அவரின் சங்கடங்களை விட்டும் அவரைக் காப்பான் என்பதில் உறுதியாயிருக்கும்படியும் கூறுங்கள்! ஆனால் பல பெண்கள் அவ்விதம் செய்வதில்லை. அவர் வந்து தம் சங்கடங்களைக் கூறியதும், அவரைப் பார்த்து அவர்கள், ''ஏன் இப்படிச் செய்தீர்கள்? ஏன் அப்படிச் செய்யவில்லை?'' என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு, அவரைக் குத்திக் குதறி விடுகிறார்கள்; அத்துடன் மட்டும் அவர்கள் இருப்பதில்லை. கணவர் வந்து தம் சங்கடங்களைக் கூறியதும், அவர்களின் மதிப்பில் கணவரின் தரம் 'சடக்கு' என்று இறங்கி விடுகிறது. அதன்பின் அவர்கள் தம் கணவரைக் கேவலமாகக் கருதத் தொடங்கி விடுகிறார்கள். 'நாம் பெரிதாக வல்லவா நினைத்துக் கொண்டு வந்தோம். இவ்வளவு தானா இவர்?' என்று எண்ணுவதே அவர்களின் மதிப்பில் கணவரின் தரம் தாழ்ந்து விடுவதற்குக் காரணமாகும்.

கணவர் தம் சங்கடங்களை மனைவியிடம் கூறாததற்கு இது ஒரு காரணம் என்றால், தம் இரகசியங்களை மனைவி மறைக்க மாட்டாள் என்பது மற்றொரு காரணமாகும். மனைவியிடம் இரகசியங்களைக் கூறலாமா, கூறக் கூடாதா என்பது ஒரு பிரச்சினையாகவே இருந்து கொண்டிருக்கிறது. 'கூறலாம்' என்று சிலரும், 'கூறக் கூடாது' என்று இன்னும் சிலரும் கருதுகின்றனர். ''உன் அன்பை மனைவியிடம் காட்டு! உன் இரகசியங்களை உன் அன்னையிடம் கூறு!'' என்று ஒரு பழமொழியும் இருந்து கொண்டிருக்கிறது.

உங்கள் கணவர் தம் இரகசியங்களை உங்களிடம் கூறினால், அவற்றை மறையுங்கள்! அவற்றை வெளிப்படுத்தி



அவரைக் கேவலப்படுத்தி விடாதீர்கள்! அல்லாஹ் அதனால் தான் இவ்விதம் கூறுகிறான்: ''அவர்கள் (பெண்கள்) உங்களுக்கு ஆடையாகும். அதே போன்று நீங்களும் (ஆண்கள்) அவர்களுக்கு ஆடை ஆவீர்கள்'' (2:187) அல்லாஹ்வின் இந்த உதாரணத்தில் உள்ள அழகையும், ஆழத்தையும் நீங்கள் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். ஆடை ஒருவரின் உடம்போடு மிகவும் நெருக்கமாக இருக்கிறது. அதே போன்று கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்க வேண்டும். ஆடை ஒருவரின் உடம்பிற்கு அழகு சேர்க்கிறது. அதே போன்று கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் அழகு சேர்ப்பவர்களாய் இருக்க வேண்டும். ஆடை ஒருவரின் உடம்பைத் தட்பவெப்ப நிலைகளிலிருந்து காக்கிறது. அதே போன்று கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஆடை ஒருவரின் உடம்பில் மறைக்க வேண்டிய பகுதிகளை மறைக்கிறது. அதே போன்று கணவனும் மனைவியும் ஒருவர் இரகசியங்களை ஒருவர் வெளிப்படுத்தி விடாமல் மறைத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் கணவர் வந்து தம் சங்கடங்களைக் கூறினால், அவர் தேடிக் கொண்ட சங்கடங்களை அவரே தீர்த்துக் கொள்ளட்டும் என்று இருந்து விடாதீர்கள்! அவருக்கு ஏற்பட்டவை பொருளாதாரச் சங்கடங்கள் என்றால், அவற்றைப் போக்க உங்களால் இயன்ற உதவியைச் செய்யுங்கள்! அவருக்கு ஏற்பட்டவை வேறுவிதச் சங்கடங்கள் என்றால், அவற்றை நீங்களும் அவருடன் சேர்ந்து அனுபவியுங்கள்! அப்படித்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமை மனைவி கதீஜா (ரலி) அவர்கள் அனுபவித்தார்கள். 'ஒருவன் இறை, அவன் உருவமற்றவன்' என்று கூறியதற்காக அண்ணல் நபி (ஸல்) அவர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் மக்காக் குறைஷிகள் ஒரு பள்ளத்தாக்கில் சிறை வைத்தார்கள். செல்வச் சீமாட்டியான கதீஜா (ரலி) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களை நிழலைப் போல் நீங்காதிருந்து, அவர்களின்

துன்பங்கள் அனைத்திலும் பங்கேற்றார்கள். உண்பதற்கு, உணவுப் பொருள்கள் செல்லக் கூட மக்காக் குறைஷிகள் தடை விதித்து விட்டதால் அவர்கள் தம் கணவருடன் சேர்ந்து பசித்திருந்தார்கள். பட்டினி கிடந்தார்க்ள.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைப் புதல்வி பாத்திமா (ரலி) அவர்களும் இப்படித்தான் இருந்தார்கள். அவர்களின் கணவரான அலீ (ரலி) அவர்களிடம் அதிகம் இருந்தவை வீரமும், அறிவும் என்று தான் நீங்கள் எண்ணிக் கொண்டிருப்பீர்கள். ஆனால் அவர்களிடம் இவற்றையும் விடச் சற்று அதிகமாக இன்னொன்றும் இருந்தது. அது எது தெரியுமா? வறுமை. அலீ (ரலி) அவர்களின் வறுமை மிக்க வாழ்க்கையில் தான் பாத்திமா (ரலி) அவர்கள் அணுவளவும் அதிருப்தி கொள்ளாமல் அகமகிழ்வுடன் வாழ்ந்தார்கள்.

இவ்விதம் தான் நீங்களும் உங்கள் கணவருக்கு ஆதரவாயும், ஆறுதலாயும் இருக்க வேண்டும். அவரின் இன்பத்திலும் பங்கு கொள்ள வேண்டும். அவரின் துன்பத்திலும் பங்கு பற்ற வேண்டும். ஆனால் சில பெண்கள் இப்படி இருப்பதில்லை. அவர்கள், தம் கணவரின் மன அமைதியையும், மனமகிழ்வையும் குலைப்பவர்களாய் இருக்கிறார்கள். தங்கள் சங்கடங்கள் அனைத்திற்கும் தம் கணவர்தாம் காரணம் என்பது அவர்களின் கருத்து. எனவே அவர்கள் எடுத்ததற்கெல்லாம் தம் கணவரைக் குறை கூறு வார்கள், நினைத்ததையெல்லாம் அவரின் குற்றமாக்குவார்கள்.

உங்கள் கணவர் உழைக்காதவராயிருந்தால் அவரை உழைக்கக் கூறுங்கள். ஒரு தொழிலும் செய்யாமல் வீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தால், ஒரு தொழிலைச் செய்யும்படி அவரை ஊக்கப்படுத்துங்கள்! அவருக்கு உதவி தேவைப் பட்டால், அந்த உதவி உங்களால் செய்ய முடிந்ததுதான் என்றால் அதனை அவசியம் செய்யுங்கள்.



அவர் உழைத்தும் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கா விட்டால் இன்னும் ஊக்கமாகவும், இன்னும் அறிவாகவும் உழைக்கக் கூறுங்கள்! அப்படி உழைத்தும் அதிகம் பலன் கிடைக்காவிட்டால், அதற்காக அவரைக் குறை கூறாதீர்கள்! அல்லாஹ் எல்லோருக்கும் ஒரே அளவு 'ரிஸ்க்' அளிப்பதில்லை. ஒருவருக்கு கூடுதலாகக் கொடுக்கிறான். ஒருவருக்குக் குறைவாக அளிக்கிறான். இதை விளக்க அருமையான சம்பவம் ஒன்று இருக்கிறது; ஒரு நாள் அண்ணல் நபி(ஸல்) அவர் களுக்குப் பேரீத்தம் பழங்கள் அன்பளிப்பாக வந்தன. தமக்கு அன்பளிப்பாக வரும் எதனையும் அங்கேயே பங்கிட்டுக் கொடுத்து விடுவது அவர்களின் வழக்கம். எனவே அவர்கள் தம் அருகில் அமர்ந்திருந்த மருகர் அலீ (ரலி) அவர்களிடம் அந்தப் பழங்களைப் பங்கிட்டுக் கொடுக்கும்படி கூறினார்கள். அலீ (ரலி) அவர்கள், ''அல்லாஹ் கொடுப்பது போல் கொடுக்கவா? அல்லாஹ்வின் தூதர் கொடுப்பது போல் கொடுக்கவா?'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள், ''அல்லாஹ் கொடுப்பதுபோல் கொடும்!'' என்று அவர்கள் கூறினார்கள், அடுத்தகணம் அலீ (ரலி) அவர்கள் அங்கிருந்தவர்களுக்குப் பழங்களைக் கொடுக்க ஆரம்பித்தார்கள். ஒருவருக்கு இரண்டு பழங்கள் கொடுத்தார்கள். அடுத்தவருக்கு ஐந்து பழங்கள் கொடுத்தார்கள். அடுத்திருந்தவருக்கு இருபது பழங்கள் கொடுத்தார்கள். அவருக்கு அடுத்திருந்தவருக்கு இருபத்தைந்து பழங்கள் கொடுத்தார்கள். இப்படியே எல்லாப் பழங்களையும் கொடுத்து முடித்து விட்டார்கள். இது அங்கிருந்தவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. ''என்ன அலீ இப்படி ஒருவருக்கு ஒருவிதமாய், மற்றவருக்கு மறுவிதமாய்ச் செய்துவிட்டார்'' என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அண்ணல் நபி(ஸல்) அவர்களும், 'என்ன இப்படிச் செய்துவிட்டீர்?' என்று கேட்பது போல் அலீ (ரலி) அவர்களை ஏறிட்டுப் பார்த்தார்கள். அந்தப் பார்வையின் பொருளை அறிந்து கொண்டு, அலீ (ரலி) அவர்கள்

கூறினார்கள், ''தாங்கள் தாமே அல்லாஹ் பங்கிடுவது போல் பங்கிடச் சொன்னீர்கள். அல்லாஹ் இவ்விதம் தானே பங்கிடுகிறான்?'' என்று.

இது உண்மை இல்லையா? ஒருவர் உழைக்கிறார், இன்னொருவரும் உழைக்கிறார். ஒருவருக்கு அதிகம் கிடைக்கிறது. இன்னொருவருக்குக் குறைவாகக் கிடைக்கிறது. அது அல்லாஹ்வின் நியதி. எனவே உங்கள் கணவர் வஞ்சகமில்லாமல் உழைத்தும், அவருக்குத் தம் உழைப் பிற்கேற்ற ஊதியம் கிடைக்காவிட்டால், அதற்காக அவரைக் குறை கூறாதீர்கள்!

ஒரே திறமையுள்ள இருவர் கூட, ஒரே அளவு சம்பாதிப் பதில்லை. ஓர் உண்மையை உங்களுக்குக் கூறட்டுமா? திறமை குறைவாக உள்ளவர்கள் தாம் திறமை கூடுதலாக உள்ளவர்களை விட அதிகம் சம்பாதிக்கிறார்கள். இதுவெல்லாம் உலகில் வெகு சகஜம்.

எனவே உங்கள் கணவர் குறைவாகச் சம்பாதித்தால், அதற்காக அவரைக் குறை கூறாதீர்கள்! குறிப்பாக அடுத்தவரைச் சுட்டிக்காட்டி, அவரைக் குறை கூறாதீர்கள்! அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கொடுக்கிறான். தான் நாடாதவர்களுக்குக் கொடுக்க மறுக்கிறான். அதை அவனிடம் கேட்க நமக்கு உரிமை கிடையாது. ஒரே தாய் வயிற்றில் பிறந்த இருவரைக் கூட, அவன் ஒரே மாதிரியாக வைத்திருப்பதில்லை. ஒரு தாய் வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களில் ஒருவர் ஒரு நாட்டின் அரசராக இருந்தார். இன்னொருவர் ஒரு வீட்டின் ஊழியராக இருந்தார். ஒரு தாய் வயிற்றில் பிறந்த இரு சகோதரிகளில் ஒருத்தி மாளிகையில் வாழ்வாள். மற்றொருத்தி மண் குடிசையில் வசிப்பாள். இதுவெல்லாம் உங்களுக்குத் தெரியாதது அல்ல.

அடுத்தவரைச் சுட்டிக்காட்டி உங்கள் கணவரைக் குறை கூறினால், என்ன விளைவுகள் ஏற்படும் என்பது உங்களுக்குத் தெரியுமா? மிகச் சிலர் மனைவி இப்படிக் கூறிவிட்டாளே என்று உரோஷப்பட்டு உத்வேகத்துடன் உழைக்க ஆரம்பிப் பார்கள்.மிகப் பலர் மனைவி இப்படிக் கூறியதும், தம் திறமை மீது நம்பிக்கை இழந்து, உண்மையில் நாம் நம் மனைவி கூறுவதுபோல் ஒன்றிற்கும் உதவாதவன்தானோ என்று எண்ணத் தொடங்கிவிடுவார்கள். இந்த எண்ணமே வலுப்பட்டு அவர்கள் தம் திறமை மீது நம்பிக்கை இழந்து, உண்மையிலேயே ஒன்றிற்கும் உதவாதவர்களாய் ஆகிவிடலாம். எனவே நீங்கள் இந்த விஷப் பரீட்சையைச் செய்து பார்க்காதீர்கள்!



நீங்கள் உங்கள் கணவரின் நலம் பேணுபவர்களாயும் இருக்க வேண்டும். நலம் என்பதில் உடலின் நலமும் அடங்கும், உள்ளத்தின் நலமும் அடங்கும். உங்கள் கணவர் உழைப்பவராய் இருக்கிறார். அவர் உழைப்பதால் இழக்கும் வலிமைக்கு ஈடு செய்வது உணவு. அந்த உணவை அவருக்கு ஒழுங்காகவும் சமைத்துக் கொடுங்கள். சுவையாகவும் சமைத்துக் கொடுங்கள்! அவருக்கு ஏற்ற உணவுகளையும் சமைத்துக் கொடுங்கள்! அவற்றை உரிய நேரத்திலும் சமைத்துக் கொடுங்கள்!

சில பெண்களுக்கு உணவை ஒழுங்காகச் சமைத்துக் கொடுக்க வேண்டும், சுவையாகச் சமைத்துக் கொடுக்க வேண்டும் என்னும் அக்கறையே இருப்பதில்லை. அதனால் அவர்கள் உணவை அவசரம், அவசரமாக அரைவேக்காடாயும், கால்வேக்காடாயும் சமைத்து வைத்துவிட்டுப் படுத்து உறங்குவதிலோ, ஊர்க்கதைகள் பேசுவதிலோ குறியாய் இருப்பார்கள். இப்படி நீங்கள் இருக்கக் கூடாது.

உங்கள் கணவரின் உடல் நலனிற்கு ஊறு செய்யும் உணவுகளை நீங்களாகவும் கொடாதீர்கள். அவர் கேட்டாலும் கொடாதீர்கள்! சில பெண்கள் அவர் உடல் நலனிற்கு ஊறு செய்யும் உணவுகளைச் செய்து வைத்துக் கொண்டு, உண்ணும்படிக் கூறுவார்கள். அவர் 'என் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாதே!' என்றால், 'அதெல்லாம் ஒன்றும் செய்யாது,

சும்மா சாப்பிடுங்கள்! ஒரு நாள் சாப்பிடுவதால் எல்லாம் ஒன்றும் ஆகி விடாது' என்பார்கள். மனைவி வற்புறுத்துகிறாளே என்று அவர்களும் அந்த உணவுகளைச் சாப்பிட்டு விடுகிறார்கள், உடம்பிற்குத் தீங்கு ஏற்பட்டு விடுகிறது. உங்கள் கணவர் தம் உடல் நலனிற்கு ஒத்துக் கொள்ளாத உணவுகளைச் செய்து கேட்டால், அவற்றை உண்பதால் ஏற்படும் தீமையை அவரிடம் இதமாக எடுத்துக் கூறி, அவற்றிற்குப் பதிலாக அவர் உடம்பிற்கு ஒத்துக் கொள்ளும் உணவுகளைச் செய்து கொடுங்கள்!

உங்கள் கணவருக்கு ஏற்ற உணவுகளை உரிய நேரத்திலும் சமைத்துக் கொடுங்கள்! அவற்றை உரிய நேரத்திலும் சாப்பிடச் செய்யுங்கள்! சில பெண்கள் உரிய நேரத்தில் சமைத்துக் கொடுக்க மாட்டார்கள்; சில ஆண்கள் உரிய நேரத்தில் கூப்பிட மாட்டார்கள். உங்கள் கணவர் உரிய நேரத்தில் வந்து உணவு வைக்கும்படிக் கூறினால், உடனே உணவை வைத்துக் கொடுங்கள். உங்கள் கணவர் அலுவல் காரணமாக உரிய நேரத்தில் உணவு சாப்பிட வராவிட்டால், அவரை உரிய நேரத்தில் வந்து உணவு சாப்பிட வையுங்கள்! உரிய நேரத்தில் சாப்பிடாதது சில நோய்களுக்குக் காரணமாகும். இதை நீங்களும் நினைவில் வையுங்கள், அவருக்கும் நினைவுப் படுத்துங்கள்!

உடம்பிற்கு ஏற்ற உணவாயிருந்தாலும்,அதை உரிய நேரத்தில் சாப்பிட்டாலும், அதையும் அளவோடுதான் சாப்பிட வேண்டும். சில பெண்கள் அன்பின் காரணமாகத் தம் கணவரை அதிகம் சாப்பிடும்படி வற்புறுத்துவார்கள். நன்கு சாப்பிடும்படிக் கூறுவது உயர்ந்த பண்புதான். ஆனால், அது உங்கள் கணவரின் உடல் நலனிற்குப் பாதகம் பண்ணும் அளவு இருக்கக் கூடாது. அதிகம் உண்பது பல நோய்களுக்குக் காரணமாகும். குறைவான உணவால் இறப்பவர்களை விட, அதிகமான உணவால் இறப்பவர்களே அதிகம் என்று கூறப்படுகிறது.

உங்கள் கணவரின் உடல் நலனிலும் கவனமாய் இருங்கள்! உங்கள் உடல் நலனிலும் கவனமாயிருங்கள்! ஏனெனில்,



உங்கள் கணவர் நலன் உங்கள் நலனில் இருக்கிறது. உங்கள் நலன் உங்கள் கணவர் நலனில் இருக்கிறது. இருப்பதையெல்லாம் கணவருக்குக் கொடுத்துவிட்டுத் தம் வயிற்றைக் காயப்போடும் பெண்களும் உண்டு; இருப்பதையெல்லாம் தாம் தின்று விட்டுத் தம் கணவர் வயிற்றைக் காயப்போடும் பெண்களும் உண்டு. இரண்டாம் வகைப் பெண்களில் ஒருத்தியே முல்லா நஸீருத்தீனின் மனைவி.

ஒருநாள் முல்லா நஸீருத்தீனுக்குக் கறி சாப்பிட வேண்டும் என்னும் ஆசை ஏற்பட்டது. இரண்டு இராத்தல் கறி வாங்கிக் கொண்டு வந்து தம் மனைவியிடம் கொடுத்து, ''நன்கு சமைத்து வை! இதோ வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றார் அவர். அதே விதம் கறியை அவர் மனைவி நன்றாகவே சமைத்தாள். சமைத்தபின் நன்றாக அமைந் திருக்கிறதா என்று கொஞ்சம் எடுத்துச் சாப்பிட்டுப் பார்த்தாள். கறி நன்றாக இருந்தது. எல்லாக் கறியையும் எடுத்துச் சாப்பிட்டு விட்டாள். முல்லா நஸீருத்தீன் கறி சாப்பிட வேண்டும் என்னும் ஆசையுடன் வீட்டிற்கு வந்தார். சாப்பாடு வைக்கும்படி மனைவியிடம் கூறினார். ''கறியை எல்லாம் பூனை தின்று விட்டது'' என்றாள் அவரின் மனைவி. ''எந்தப் பூனை?'' என்று முல்லா நஸீருத்தீன் கேட்டார். ''அதோ! அந்தப் பூனை தான்'' என்று அவள் தன் வீட்டில் வாழும் பூனையைச் சுட்டிக் காட்டினாள். முல்லா நஸீருத்தீன் பூனையைப் பிடித்தார். எடை போட்டார். பூனை, சரியாக இரண்டு இராத்தல் இருந்தது. முல்லா நஸீருத்தீனின் சந்தேகம் வலுத்து விட்டது. 'நாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்த கறி இரண்டு இராத்தல்; பூனையும் இரண்டு இராத்தல்தானே இருக்கிறது. பூனை, கறியைத் தின்றிருந்தால் அதன் எடை கூடியிருக்க வேண்டுமே' என்று எண்ணினார். உடனே தம் மனைவியைப் பார்த்து, ''இது நம் பூனை என்றால் கறி எங்கே? இது தான் கறி என்றால் நம் பூனை எங்கே?'' என்று கேட்டார்.

முதல் வகைப் பெண்கள் போலும் நீங்கள் இருக்கக் கூடாது. இரண்டாம் வகைப் பெண்கள் மாதிரியும் நீங்கள் இருந்துவிடக் கூடாது. உங்கள் கணவருக்கு நியாயமாக நடப்பதாக எண்ணிக் கொண்டு, உங்களுக்கு அநியாயம் செய்து கொள்வது உகந்ததாகாது. உங்கள் கணவரைப் போலவே நீங்களும் குடும்பத்திற்கு அவசியமானவர்கள். அவர் வீட்டிற்கு வெளியே உழைக்கிறார் என்றால், நீங்கள் வீட்டிற்கு உள்ளே உழைக்கிறீர்கள். உழைப்பால் அவரின் வலிமை குறைவது போன்று உங்களின் வலிமையும் குறையும். அதற்கு மருந்தைக் கொண்டு ஈடுகட்டுவதை விட, உணவைக் கொண்டு ஈடு செய்வதே உகந்ததாகும்.

குடும்பத்தில் உங்கள் கணவருக்குச் சில கடமைகள் இருந்தால், உங்களுக்கும் சில கடமைகள் இருக்கவே செய் கின்றன. சில வேலைகளை அவரால்தான் செய்ய இயலும். சில வேலைகளை உங்களால்தான் செய்யமுடியும். எனவே உங்கள் கணவரின் உடல் நலனையும் பாருங்கள்! உங்களின் உடல் நலனையும் பேணுங்கள்!

நீங்களும், உங்கள் உடலுக்கு ஏற்ற உணவை உண்ணுங்கள், அதையும் ஏற்ற அளவு உண்ணுங்கள்! அதிகமான உணவு நோயாகும். அளவான உணவு ஆரோக்கியமாகும். ஆனால் சில பெண்கள் இதை உணர்வதில்லை. சில பெண்கள் உணர்ந் தாலும் பேணுவதில்லை. பெண்களின் உடல் பெருப்பதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் ஒரு காரணம் அவர்கள் நாவைப் பேணாததேயாகும். சில பெண்கள் கருவுற்றிருக்கும் போது அவர்களுக்குச் சில தின் பொருள்கள் மீது ஆவல் அதிகரிக்கும். அடிக்கடி கருவுறும் பெண்கள் இப்படித் தின் பொருள்களை அதிகம் சாப்பிட்டு உடலைப் பெருக்க வைத்துக் கொள் கின்றனர். சில பெண்கள் வயிற்றில் வளரும் குழந்தைக்குச் சத்துத் தேவை என்று அதிகம் உண்கின்றனர். பிரசவம் ஆன பின்பும் இந்தப் பழக்கம் நீங்கி விடாமல் நிலைத்து விடுகிறது.



பெண்கள் பெரும்பாலும் வீட்டில்தான் இருக்கின்றனர். இப்படி இருக்கும் போது ஏதாவது தின் பொருள் செய்யலாம் என்று அவர்களுக்குத் தோன்றுகிறது. அவ்விதமே செய்து விடு கின்றனர். சாப்பிடுகின்றனர். உணவை அளவோடு சமைத்தாலும் சில சமயம் மீந்து விடுகிறது. அதை வீணடிக்கக் கூடாது என்று சில பெண்கள் அதையும் சாப்பிட்டு விடுகின்றனர்.

சிலர் வீட்டில் உண்பதைவிடக் குறைவாக விருந்துகளில் உண்பார்கள், சிலர் வீட்டில் உண்பதை விடக் கூடுதலாக விருந்துகளில் உண்பார்கள். விருந்துகளில் குறைவாக உண்பதற்கு ஒரு காரணம் பலர் மத்தியில் இருந்து உண்பதில் உள்ள அசௌகரியம். விருந்துகளில் கூடுதலாக உண்பதற்கு ஒரு காரணம் விருந்துகளில் பலருடன் சேர்ந்து உண்பதில் உள்ள உற்சாகம். விருந்துகளில் அதிகம் உண்டு விடுவதற்கு இன்னொரு காரணம் விருந்து கொடுப்பவர்கள் செய்யும் உபசரிப்பு. உபசரிப்பது அவர்களின் பண்பை உணர்த்தும். உபசரிக்கிறார்களே என்று நீங்கள் அதிகம் உண்பது உங்களின் எடையை உயர்த்தும். எனவே வீட்டிலும் சரி, விருந்திலும் சரி, அளவோடு உண்ணுங்கள்; அளவோடு உண்டு உடம்பை அழகோடும் வைத்திருங்கள்; ஆரோக்கியத்தோடும் வைத்திருங்கள்!

சில ஆண்கள் தம் உடல் நலனை அதிகம் கவனிக்க மாட்டார்கள், மனைவியின் உடல் நலனை அதிகம் கவனிப் பார்கள். உங்கள் கணவர் தம் உடல் நலனை கவனியாதவரா யிருந்தால், நீங்கள் தாம் அவரின் உடல் நலனில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அவரின் உடம்புக்கு ஏதாவது தொந்தரவு ஏற்பட்டால், உடனே உணவைக் கட்டுப்படுத்திப் பக்குவம் செய்ய வேண்டும். அதற்கு நோய் பணியாவிட்டால், உடனே மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும். சில ஆண்கள் மருத்துவர் சொன்னபடி நடப்பார்கள், சிலர் நடக்க மாட்டார்கள். உங்கள் கணவர் மருத்துவர் சொன்னபடி நடப்பவராயிருந்தால் சரி. நடக்காதவராயிருந்தால் நீங்கள் தாம்

அன்புடன் கூடிய கண்டிப்புடன் மருத்துவர் கொடுத்த மருந்துகளைச் சாப்பிடச் சொல்ல வேண்டும். மருத்துவர் தடுத்த உணவுகளைச் சாப்பிடாமல் தவிர்க்க வேண்டும்.

சில ஆண்கள் தம் உடல் நலனை அதிகம் கவனிப்பார்கள்; மனைவியின் உடல் நலனை அதிகம் கவனிக்க மாட்டார்கள். உங்கள் கணவர் அப்படிப்பட்டவராய் இருந்தால் நீங்களும் உங்களின் உடல் நலனைப் பற்றி அக்கறை இல்லாமல் இருந்து விடக் கூடாது. சில பெண்கள் 'கணவர் தாம் நம்மைக் கவனிக்க வில்லையே. நாம் ஏன் மருத்துவரிடம் போகவேண்டும்?' என்று வீம்பு செய்து கொண்டு, வீட்டிலேயே இருந்து தங்களையே தாங்கள் வருத்திக் கொள்வார்கள். நீங்கள் இப்படி இருக்கக் கூடாது. உடனே மருத்துவரிடம் சென்று உங்களின் உடல் தொந்தரவைக் கூறி மருத்துவம் செய்து கொள்ள வேண்டும்.

உங்கள் கணவரின் உடல் நலத்தைக் காப்பது மட்டும் உங்கள் கடமை அல்ல; அவரின் உளநலத்தைக் காப்பதும் உங்கள் கடமையாகும். உடல் நலமும், உளநலமும் ஒன்றிற்கு ஒன்றும் சம்பந்தம் உள்ளவை. உடல் நலம் கெட்டால் உளநலம் கெடும். உளநலம் கெட்டால், உடல் நலம் கெடும். எனவே, உங்களைக் கொண்டு உங்கள் கணவரின் கவலைகள் நீங்க வேண்டும். உங்களைக் கொண்டு உங்கள் கணவருக்குக் கவலைகள் ஏற்படக் கூடாது. நீங்கள் அவரின் பிரச்சினை களுக்குப் பரிகாரம் புரிபவர்களாய் இருக்க வேண்டும். நீங்களே அவரின் பிரச்சினையாக இருந்துவிடக் கூடாது.

உங்களை நினைத்தும் உங்கள் கணவர் மனம் மகிழ வேண்டும். உங்களைக் கண்டதும், உங்கள் கணவர் முகம் மலர வேண்டும். உங்கள் கணவர் வீட்டில் இருந்து கொண்டே வேலை செய்பவராயும் இருக்கலாம்; வெளியில் சென்று வேலை செய்பவராயும் இருக்கலாம். வெளியில் சென்று வேலை செய்து விட்டு வருபவராயிருந்தால், அவர் உங்களைக் கண்டதும் முகம் மலரும் விதம் நீங்கள் நடந்து கொள்ள



வேண்டும். அவர் உழைத்துக் களைத்து வருகிறார். அத்துடன் அவர் எத்தனையோ பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டும் வருகிறார், தீர்க்காமலும் வருகிறார். பிரச்சினைகளைத் தீர்த்திருந்தால் உடல் களைத்திருக்கும், தீர்க்காதிருந்தால் மனம் கனத்திருக்கும். இந்நிலையில் அவரின் உடல் களைப்பை நீக்கும் விதமும், அவரின் மனக் கனத்தைக் குறைக்கும் விதமும் நீங்கள் இருக்க வேண்டும்; நீங்கள் நடக்க வேண்டும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மக்கா நகரில் இருக்கையில், வெளியில் செல்லும்போது அவர்களின் மனம் கவலையால் நிரம்பி யிருக்கும் என்றும், வீட்டிற்குத் திரும்பியதும் அவர்களின் கவலைகள் நீங்கி விட்டிருக்கும் என்றும் அவ்விதம் நீங்குவதற்குக் காரணம் அவர்களின் அருமை மனைவி கதீஜா (ரலி) அவர்கள்தாம் என்றும் கூறுவர்.

இவ்விதம் மனைவி இல்லாததால் தான் சிலர் அலுவல கத்திலோ, வணிக நிலையத்திலோ, வேலை முடிந்த பின்பும் வீட்டிற்கு வர அஞ்சுகிறார்கள். கணவர் வீட்டிற்குள் காலை வைத்ததுமே சில மனைவிமார்கள், அவரிடம் அன்று தாம் பட்ட கஷ்டங்களைப் பற்றியும், அன்று குழந்தைகள் பண்ணிய அடங்களைப் பற்றியும் கூறத் தொடங்கி விடுகிறார்கள். இது தான் ஆண்கள் வேலை முடிந்ததும் வீட்டிற்கு வர அஞ்சுவதற்குக் காரணமாகும். இந்தப் பெண்கள் போல் நீங்கள் இருக்கவே கூடாது. உங்கள் கணவர் தம் களைப்பையெல்லாம் நீக்கிக் கொள்ளவும், தம் கவலைகளையெல்லாம் போக்கிக் கொள்ளவும், வீட்டை நோக்கி ஆவலுடன் ஓடோடி வரும் விதம் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். ''வீடே உலகில் மிகவும் சிறந்த இடம்' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியது போன்று, உங்கள் வீடே உங்கள் கணவருக்கு உலகிலேயே மிகவும் சிறந்த இடமாக இருக்க வேண்டும். ''தன் இல்லத்தில் இன்பம் காண்பவனே மகிழ்ச்சி நிறைந்தவன்'' என்று ஓர் அறிஞர் கூறியது போன்று உங்கள் இல்லத்திலே உங்கள் கணவர் இன்பம் காணவேண்டும்.

உங்கள் கணவர் உள்ளூரில் ஊழியமோ, வாணிபமோ செய்பவராய் இருக்கலாம்; அல்லது அயல்நாட்டில் ஊழியமோ, வாணிபமோ செய்பவராய் இருக்கலாம். அயல் நாட்டில் ஊழியமோ, வாணிபமோ செய்பவராயிருந்தால், அவருக்கு ஊரில் நடக்கும் சண்டைகளைப் பற்றியும், குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களைப் பற்றியும் சில பெண்கள் எழுதுவார்கள். அவரும் அந்தச் சண்டைகளில் கலந்து கொள்வார். குழப்பங்களில் பங்கு கொள்வார். அங்கிருந்து கடிதங்கள் பறந்து வரும். இங்கிருந்து கடிதங்கள் பறந்து செல்லும். இவ்வித நிலையை நீங்கள் ஒரு போதும் உண்டு பண்ணாதீர்கள்! இது உங்கள் கணவர் வேலையில் செலுத்த வேண்டிய கவனத்தை, வாணிபத்தில் செலுத்த வேண்டிய அக்கறையைச் சிதைப்பதாகும். மேலும் இது அவரின் மன அமைதியையும் மன மகிழ்ச்சியையும் கெடுப்பது மாகும். எனவே அவருக்கு இங்குள்ள நல்ல செய்திகளை மட்டும் எழுதுங்கள்; மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயங்களை மட்டும் எழுதுங்கள். அது பெரிய விஷயமாக இருக்க வேண்டும் என்பதில்லை. சிறிய விஷயமாயிருந்தாலும் போதும். இப்படிச் செய்வது, அவர் அங்கு மன அமைதி யோடும், மன மகிழ்ச்சியோடும் வேலை செய்ய உதவும்.

உங்கள் கணவர் உள்நாட்டில் இருந்தாலும் சரி, வெளிநாட்டில் இருந்தாலும் சரி, அவர் மனம் புண்படும் விதம் நடந்து கொள்ளாதீர்கள்! கணவன் மனைவி என்றிருந்தால், சிறு சிறு மனத் தாபங்கள் வரத்தான் செய்யும். அவற்றைப் பெரிது படுத்தி விடாதீர்கள்! ஒன்றை அவர் கூறுவார். அதை நீங்கள் மறுப்பீர்கள். ஒன்றை நீங்கள் கூறுவீர்கள். அதை அவர் மறுப்பார். பெரும்பாலான மனத் தாபங்களுக்கு இதுதான் காரணம். இயன்ற மட்டும் அவர் கூறுவதற்கு இணங்கிப் போய் விடுங்கள். 'நாம் இணங்கிப் போவதா? நாம் இறங்கிப் போவதா?' என்று எண்ணாதீர்கள்! இந்த மனப்போக்கு



பொல்லாததுமாகும். பல பெண்களின் வாழ்வு பாழாகக் காரணமாக இருந்ததுமாகும்.

சில பெண்கள் சிறிய விஷயங்களுக்கெல்லாம் ''உங்களை விட்டுப் போய்விடப் போகிறேன்'' என்பார்கள்; ''உங்களை விட்டுப் போய்விட்டால், என்னால் பிழைத்துக் கொள்ள முடியாதா?'' என்று கேட்பார்கள். இப்படி அவர்கள் பேசுவதற்கு ஒரு காரணம் கணவருடன் தான் வாழவேண்டும் என்பதில் உள்ள தளர்வு, மறு காரணம் கணவர் மனத்தைப் புண்படுத்த வேண்டும் என்னும் உள்ள உணர்வு. இப்படிப் பேசுவது நல்லதாகாது. இது ஊன்றப்பட்டிருக்கும் கம்பம் ஒன்றைப் பிடித்து அசைப்பது போலாகும். அடிக்கடி அசைக்கப்படும் கம்பம் ஒருநாள் விழுந்து விடலாம். எனவே, இந்தப் பிழையை ஒருபோதும் செய்யாதீர்கள்!

இப்படிப் பேசிவிட்டுச் சில பெண்கள் கணவர் வீட்டி லேயே இருந்து கொண்டிருப்பார்கள். சில பெண்கள் பிறந்த வீட்டிற்குப் போய்விடுவார்கள். இப்படிப் போகிறவர்கள், கணவரால் அழைக்கப்பட்டோ,தாமாகவோ சில நாட்களில் கணவர் வீட்டிற்கு வந்து விடுவதுண்டு. இப்படிச் செய்யும் பெண்களுக்குப் புகுந்த வீட்டிலும் மதிப்பிருக்காது, பிறந்த வீட்டிலும் மதிப்பிருக்காது. ''ஆமாம், ஒரு சொல் பொறுக்க மாட்டாள், கிளம்பி விடுவாள்'' என்று புகுந்த வீட்டாரும், ''ஆமாம், ஒரு சொல்லை சகித்துக் கொள்ள மாட்டாள், வந்து விடுவாள்' என்று பிறந்த வீட்டாரும் இந்தப் பெண்களைப் பற்றிப் பேசுவார்கள்.

இப்படிப் பிறந்த வீட்டிற்குப் போய் இருந்து கொண்டு சில பெண்கள், ''கணவர் வீட்டிற்குப் போகவே மாட்டேன்'' என்பார்கள். சில பெண்கள் 'கணவர் வந்து அழைக்கட்டும் போவோம்' என்று அவரை எதிர்பார்த்திருப்பார்கள். அவர்கள் தம் பிடிவாதத்தை விடாவிட்டாலோ, அவர்களின் கணவர் தம் பிடிவாதத்தை விடாவிட்டாலோ, அவர்கள் பிறந்த வீட்டி

லேயே தங்க நேர்ந்து விடுவதுண்டு. இந்தப் பிழையை நீங்கள் நினைத்துக் கூடப் பாராதீர்கள்.

என்னதான் மனத்தாபங்கள் ஏற்பட்டாலும், கணவரை விட்டுப் பிறந்த வீட்டிற்குப் போகாதீர்கள்! கணவருடன் இருப்பதே உங்களுக்கு அழகும் ஆகும், பாதுகாப்பும் ஆகும். ஆண் துணையின்றி ஒரு பெண் இருப்பது எவ்வளவு ஆபத்தான காரியம் தெரியுமா? அதனால்தான் ஓர் அறிஞர் கூறினார், ''கணவனை விட்டுப் பிரிந்திருக்கும் பெண், நீரை விட்டுப் பிரிந்திருக்கும் மீனுக்கு நிகராவாள்'' என்று.

இத்தகைய பெண்களுக்கு இவ்வுலக வாழ்வு மட்டும் கெட்டுப் போகாது, அவ்வுலக வாழ்வும் கெட்டுப் போய்விடும். அவர்களின் வணக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படா விட்டால், அவர்கள் வானவர்களால் சபிக்கப்பட்டால், அவர்களின் அவ்வுலக வாழ்வு சிறப்பாய் அமையும் என்று எப்படிக் கூறமுடியும்? அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''கணவன் மீது கோபம் கொண்டிருக்கும் நிலையில் இரவைக் கழிக்கும் ஒரு பெண்ணின் நஃபிலான தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது'' என்று ஒரு சமயமும், ''கணவனுடன் கோபித்துக் கொண்டு ஒரு பெண் ஓர் இரவைத் தனியாகக் கழிப்பாளாயின் அவளை வானவர்கள் சபிக்கிறார்கள்'' என்று இன்னொரு சமயமும் கூறியிருக்கின்றனர்.

'கணவன் மீது கோபம் கொண்டுள்ள பெண்ணின் நிலை இதுவென்றால், கணவரின் கோபத்திற்கு ஆளான பெண்ணின் நிலை எது?' என்று கேட்கலாம். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மூவரைக் குறிப்பிட்டு, 'அவர்களின் தொழுகை அவர்களின் செவிகளை விட்டும் அப்பால் செல்லாது' என்று கூறினர். அவர்களில் ஒருவர் கணவனின் கோபத்திற்கு ஆளாகியிருக்கும் பெண்.

இதையெல்லாம் அறியாமல் சில பெண்கள் தம் கணவருடன் கோபித்துக் கொள்ளவும் செய்கிறார்கள், கணவரை



விட்டுப் பிரிய வேண்டும் என்றும் பேசுகிறார்கள். இப்படிச் செய்வது அவர்கள் தங்களின் இம்மை வாழ்வை மட்டுமல்ல, தங்களின் மறுமை வாழ்வையும் பாழ்பண்ணிக் கொள்வதாகும். அதற்கு ஆதாரமாக அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்தச் சொற்கள் இருக்கின்றன.; ''எந்தப் பெண்ணாவது காரணமின்றித் தன் கணவனிடமிருந்து திருமணத் தொடர்பை நீக்கிக் கொள்ளக் கோருவாளாயின், அவள் சுவனபதியின் நறு மணத்தையும் நுகர மாட்டாள்.'' இந்தச் சொற்களை மட்டும் மனத்தில் கொண்டால், என்ன தான் சண்டை ஏற்பட்டாலும் சமாதானம் ஏற்பட்டுவிடும். என்னதான் மனத்தாபம் ஏற்பட்டாலும் மனமகிழ்ச்சி ஏற்பட்டு விடும்.

இப்படி மட்டும் இருந்து விட்டால் போதாது. நீங்கள் உங்கள் கணவரின் நன்மையை நாடுபவர்களாயும் இருக்க வேண்டும். நீங்கள் அவரின் இவ்வுலக வாழ்க்கை சிறப்பாய் அமையவும் வழி செய்ய வேண்டும், அவரின் அவ்வுலக வாழ்க்கை சிறப்பாய் அமையவும் வழி காண வேண்டும். முதலாவதாக நீங்கள் உங்கள் குடும்பத்தை ஒழுங்காக நடத்தப் பழகிக் கொள்ள வேண்டும். ஒழுங்காக நடத்துவதில் அடங்கும்' சிக்கனமாக நடத்துவது. சில குடும்பங்களில் கணவர் ஊதாரிச் செலவு செய்பவராயிருப்பார். மனைவி அப்படி இருக்க மாட்டாள். சில குடும்பங்களில் மனைவி ஊதாரிச் செலவு செய்பவளாயிருப்பாள், கணவர் அப்படி இருக்கமாட்டார். உங்கள் கணவர் ஊதாரிச் செலவு செய்பவராயிருந்தால், குடும்ப வருவாயை அவரிடம் இதமாக எடுத்துக் கூறி, செலவுகளை மட்டுப்படுத்தச் செய்யுங்கள்! நீங்கள் ஊதாரிச் செலவு செய்பவர்களாயிருந்தால், குடும்ப வருவாயை மனத்திற் கொண்டு உங்கள் செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்!

உணவில், உடையில், பாத்திரங்களில், ஆடம்பரச் சாமான் களில் தாம் பெரும்பாலான பெண்கள் அதிகம் செலவிடு

கின்றனர். நீங்கள் உங்கள் வாய்க்கு ஏற்ற உணவை அல்ல, வருவாய்க்கு ஏற்ற உணவைத்தான் சமைக்க வேண்டும். சிலருக்கு வருவாய்க்கு உட்பட்ட உணவு உண்ண பிடிக்காது. வருவாய்க்கு மேற்பட்ட உணவுதான் பிடிக்கும். அவர்கள் 'சமையற்கட்டு பெருத்துவிட்டால், வீடு சிறுத்து விடும்!' என்பதை உணர வேண்டும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு இல்லாவிட்டால், அது கடனில் கொண்டு போய் விட்டு விடும்; கஷ்டத்தில் கொண்டு போய் நிறுத்தி விடும். எனவே, இந்த விஷயத்தில் நீங்கள் தாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் உணவுப் பொறுப்பு உங்கள் வசம் தான் இருக்கிறது.

சில வீடுகளில் உணவுகளை உண்பதால் கூட அல்ல, உணவுகளை வீணாக்குவதால் தான் அதிகம் செலவு ஆகிறது. எனவே நீங்கள் அளவிற்கு அதிகமாகச் சமைத்தும், வீணாக்கக் கூடாது, சமைப்பதை உண்ணாமலும் வீணாக்கக் கூடாது. சில வீடுகளில் காலை உணவை அதிகம் செய்து விடுவார்கள். அது மீந்து விடும். அதைப் பகல் சாப்பாட்டுடன் சேர்த்துச் சாப்பிடுவார்கள். இதனால் பகல் சாப்பாடு மீந்து விடும். அதை இரவுச் சாப்பாட்டுடன் சேர்த்துச் சாப்பிடுவார்கள். இதனால் இரவுச் சாப்பாடு மீந்து விடும். அதை அடுத்த நாள் காலையில் சாப்பிடுவார்கள். உணவை அளவாகச் சமைக்க வேண்டும். அப்படி மீந்து விட்டால், அதற்கு ஏற்றாற் போல் அடுத்த வேளைச் சாப்பாட்டைக் குறைத்துச் சமைத்து சரிகட்டி விட வேண்டும். உணவுகள் மீந்து விடுவதற்கு முக்கியமான காரணம், பற்றாமல் போய்விடுமோ என்னும் பயம். சற்று அக்கறையுடன் கவனித்தால் ஒரு நாளைக்கு எவ்வளவு சமைக்க வேண்டும் என்பது உங்களுக்கு விளங்காமல் போகாது. சுவையான கறிகள் செய்யும்போது உணவைக் கொஞ்சம் கூடுதலாகச் சமைக்க வேண்டும். சுமாரான கறிகள் செய்யும் போது, உணவைக் கொஞ்சம் குறைவாகச் சமைக்க வேண்டும். எவருக்காவது திடும் என உடல் அசௌகரியம் ஏற்பட்டாலோ, எவராவது உணவு உண்ணாமல் விட்டாலோ, உணவு மீந்து விடலாம். அது



என்றைக்கோ ஒரு நாள் நிகழ்வது, அதைத் தவிர்க்க இயலாது.

உடை விஷயத்திலும் சில பெண்கள் ஊதாரித்தனம் செய்கின்றனர். தங்கள் கணவரின் வருவாய் என்ன, அவர் வருவாயில் எந்த அளவு உடைக்குச் செலவிடலாம் என்றெல்லாம் அவர்கள் பார்ப்பதில்லை. தங்கள் கணவரின் வருவாய்க்கு மேற் பட்ட ஆடைகள் வாங்கத்தான் அவர்களுக்கு ஆசை ஏற்படுகிறது.

உணவுக்குத் தெவிட்டும் குணம் உண்டு. ஆடைக்கு அந்தக் குணம் இல்லை. எனவே, சில பெண்களுக்கு ஆடைகள் அதிகமாக, ஆக, ஆடைகள்மேல் அவர்களுக்கு இருக்கும் ஆசையும் அதிகமாகிறது. அவர்கள் அணிந்து பார்க்க ஆசைப் படுவதில்லை, அடுக்கிப் பார்க்கத்தான் ஆசைப்படுகிறார்கள். தங்களிடம் இருக்கும் ஆடைகள் அவர்களின் கண்களில் படுவதில்லை. அடுத்த வீட்டுப் பெண்ணிடம் இருக்கும் ஆடைகள் தாம் அவர்களின் கவனத்திற்கு வருகின்றன. 'அவளிடம் அத்தனை சேலைகள் இருக்கின்றனவே, நம்மிடம் இத்தனை சேலைகள் தாமே இருக்கின்றன' என்பது போன்றே அவர்களின் சிந்தனைப் போக்கு இருக்கிறது.

இரு பெரு நாட்களின் போது, அவசியம் புத்தாடை வாங்குங்கள்! இஸ்லாமியப் புத்தாண்டின் போது, அவசியப் பட்டால் வாங்குங்கள்! இடையில் ஏதாவது தேவைப்பட்டால் வாங்குங்கள்! ஆசைப்படும் போதெல்லாம் வாங்காதீர்கள்! அடுத்த வீட்டுப் பெண் வாங்கும் போதெல்லாம் வாங்காதீர்கள். வெளியே செல்லும் போதெல்லாம் வாங்காதீர்கள்! வெளியூர் செல்லும் போதெல்லாம் வாங்காதீர்கள்!

சில பெண்களுக்கு அழகான ஆடைமீது இருப்பதை விட, அதிக விலையுள்ள ஆடைமீதுதான் ஆசை அதிகம் இருக்கும். அவ்வித ஆசை உங்களுக்கு வேண்டாம்! ஆண்டிற்கு ஒரு முறையே உடுத்தக்கூடிய அளவு அதிக ஆடைகளும், ஆயுளில்

ஓரிரு முறைகளே உடுத்தக்கூடிய அளவு விலை உயர்ந்த ஆடைகளும் உங்களுக்கு வேண்டியதில்லை.

பாத்திரங்களில் உங்களின் ஆசையை அதிகம் வைக்க வேண்டாம்! தேவைக்குக் குறைவான பாத்திரங்களே உங் களிடம் இருந்தால், அவசியமானவற்றை வாங்குங்கள்! தேவைக்கு அதிகமான பாத்திரங்கள் உங்களிடம் இருந்தால், இன்னும் வாங்க வேண்டும் என்று விரும்பாதீர்கள்! சில வீடுகளில் புழங்குவதற்கே பாத்திரங்கள் இராது. சில வீடுகளில் புழங்கப்படாமலேயே பல பாத்திரங்கள் இருக்கும். அப்படியும் இருக்கக் கூடாது. இப்படியும் இருக்கக் கூடாது.

ஆடம்பரப் பொருள்கள் மீது நீங்கள் ஆசை வைக்காதீர்கள்! அது பெரும்பாலும் கஷ்டத்திலும், கடனிலும் கொண்டு போய் விட்டு விடும். ஒரு பொருளை வாங்க வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றினால், அது அவசியம்தானா என்று சிந்தியுங்கள்! அவசியம்தான் என்று தோன்றினாலும், அது உங்கள் கணவரின் வருவாய்க்குள் கட்டப்படுமா என்று பாருங்கள். அதன்பின் அதனை வாங்குவதா, வாங்கக் கூடாதா என்று முடிவு செய்யுங்கள்! இன்னொருவர் ஒரு சாமானை வாங்கியிருந்தால், அதனை நீங்களும் வாங்க வேண்டும் என்பதில்லை. இதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்! உங்களுக்குத் தேவையானவற்றைத் தான் நீங்கள் வாங்க வேண்டும். பிறருக்குத் தேவையானதை நீங்கள் வாங்க வேண்டியதில்லை. எந்தப் பொருளை வாங்குவது என்பதைப் பெரும்பாலான பெண்கள் அவசியத்தைக் கொண்டு தீர்மானிப் பதில்லை, அடுத்த வீட்டுப் பெண் வாங்கியிருப்பதைக் கொண்டு தான் தீர்மானிக்கின்றனர். 'அவர்கள் வாங்கி இருக்கிறார்கள். நாமும் வாங்க வேண்டும்' என்பதே அவர்களின் கொள்கை யாயிருக்கிறது. இது நல்ல கொள்கை அல்ல.

சில பெண்கள் எவ்வளவு பெரிய பொருளையும் பிறரை அனுப்பியே வாங்க விடுவார்கள். சில பெண்கள் மிகச் சிறிய



பொருளை வாங்கவும் தாங்களே கிளம்பி விடுவார்கள். இந்த இரண்டாம் வகைப் பெண்களாய் நீங்கள் இராதீர்கள்! கடை வீதிகளில் உங்களின் கண்களை இழுத்து,கருத்தை மயக்கும் பொருள்கள் நிறைந்திருக்கும். அவற்றை நீங்கள் அவசிய மில்லாமல் வாங்கிவிடலாம். மேலும் கடைவீதிகள் நல்ல இடங்களும் அல்ல. ''திண்ணமாக, அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்பான இடங்கள் கடைவீதிகள் ஆகும்'' என்று ஒரு சமயமும், ''திட்டமாக அது (கடைவீதி) ஷைத்தானுடைய களமாகும். அங்கு தான் அவனுடைய கொடி நாட்டப்பட் டுள்ளது'' என்று இன்னொரு சமயமும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றனர். உலக இறுதி நாளின் அடையாளங் களில் ஒன்று கடைவீதிகளில் பெண்கள் அதிகம் காணப்படுவதாகும்.

நீங்களும் கடைவீதிகளுக்கு அடிக்கடி போகாதீர்கள். உங்கள் கணவரையும் கடைவீதிகளுக்கு அடிக்கடி அனுப்பி வைக்காதீர்கள்! நீங்கள், 'அது வேண்டும், இது வேண்டும்' என்று கேட்பதால் தான் அவர் அடிக்கடி கடைவீதிகளுக்குப் போக நேர்கிறது.நீங்கள் கேட்பவற்றையெல்லாம் வாங்கித் தராவிட்டால் வருத்தம் வருகிறது. வருத்தம் வருகிறதே என்று வாங்கித் தர வேண்டுமானால், அவர் எவரிடமாவது கடன் வாங்க வேண்டும் அல்லது தவறான வழி எதிலாவது அவர் பொருள் ஈட்ட வேண்டும். இரண்டும் தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

பொருள் ஈட்டுவதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. ஒன்று, வசதியாக வாழ்வது. மற்றொன்று கௌரவமாக வாழ்வது. தவறான முறையில் பொருள் ஈட்டினால் வசதி வந்து விடுகிறது. ஆனால் கௌரவம் போய் விடுகிறது. இதனை அந்தக் காலத்துப் பெண்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் பொருள் ஈட்டுவதற்காகப் புறப்பட்டுப் போகும் தம் கணவரிடம் இப்படித் தான் கூறுவார்களாம்: ''ஆகாத வழிகளில் பொருள் ஈட்டுவது பற்றி எச்சரிக்கிறோம். வறுமையையும், சோதனை

யையும் பொறுத்துக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்; ஆனால் நரகில் வேதனைப்பட நாங்கள் தயாராக இல்லை.''

பெரும்பாலான பெண்கள் கணவர் உழைக்க வேண்டும், தாம் உண்ண வேண்டும் என்றே விரும்புகின்றனர். 'கணவர் அளவு அல்லவாயினும் நாமும் சிறிதளவாவது உழைக்க வேண்டும்' என்னும் எண்ணம் பெண்களிடம் இருப்பதில்லை. உங்கள் கணவர் சம்பாதிப்பது உங்களுக்குப் போதுமான தாயிருந்தால் பிரச்சினை இல்லை. போதாவிட்டால் நீங்களும் கொஞ்சம் உழைப்பது உகந்ததல்லவா? அவசியப்பட்டால் வெளியில் சென்று, இல்லையேல் வீட்டிற்கு உள்ளே இருந்து கொண்டு நீங்களும் உழைக்கலாம். பெண்கள் நூல் நூற்பதை ஆயிஷா (ரலி) அவர்கள் சிலாகித்திருக்கின்றனர். ''ஒரு பெண் நூல் நூற்பதால் ஏற்படும் கைராட்டையின் சப்தம், இறைவனுக்காகப் போர் புரிவோர் போர்க்களத்தில் எழுப்பும் 'தக்பீர்' முழக்கத்திற்குச் சமமானது'' என்று அவர்கள் கூறியிருக்கின்றனர். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பெண்கள் பலவித தொழில்கள் செய்துள்ளனர். ஜைனப் (ரலி) அவர்கள் தோலைப் பதனிட்டு அதற்கு வண்ணம் ஏற்றி விற்பனை செய்தனர். அஸ்மாஃ (ரலி) அவர்கள் மதீனாவில் விவசாயம் செய்தனர். ரபீதா என்னும் பெண்மணி மதீனாவில் மருத்துவமனை ஒன்று வைத்திருந்தார்.

சிலர் வசதியாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். சிலர் வறுமையால் வாடிக் கொண்டிருப்பார்கள். இந்த இருவகை யினரின் வாழ்க்கையும் நிலையானதல்ல. இருந்த வசதியும் போகலாம். வாட்டிய வறுமையும் விலகலாம். வறுமை விலகினால் நல்லதுதான். வசதி போய்விட்டால் என் செய்வது? இவ்வித நிலையில்தான் பெண்களாகிய நீங்கள் உங்கள் கணவருக்குக் கை கொடுக்க வேண்டும். கணவன், மனைவி இருவரும் ஒற்றுமையுடன் உழைத்தால், கஷ்டத்தை ஒழித்துக் கட்டலாம். அப்பொழுது 'உழைக்க வேண்டியவர் கணவர் தாம், நாம் அல்ல' என்று மனைவி ஒதுங்கி இருந்து விட்டாளானால், அந்தக் குடும்பம் அதோகதியாகி விடும் என்பதில் ஐயமில்ல.



சிலர் நல்ல உடல் நலத்துடன் உழைத்துச் சம்பாதித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு திடும் என உடல் நலம் கெட்டு விடுவதும் உண்டு. மெதுவாக உடல் நலம் கெடுவதும் உண்டு. சில பெண்கள் கணவர் உடல் நலத்துடன் இருந்து சம்பாதித்துத் தரும் வரைதான் அன்பாக நடந்து கொள்வார்கள். கணவரின் உடல்நலம் குன்றி, சம்பாத்தியம் குறைந்து விட்டாலோ, நின்று விட்டாலோ, அவரை அலட்சியப்படுத்த ஆரம்பித்து விடுவார்கள். இது நன்றி கொன்ற செயலாகும். இப்பொழுதுதான் அவர்கள் கணவர் மீது அதிக அன்பு செலுத்த வேண்டும், அனுதாபம் காட்ட வேண்டும். ''நாங்கள் உடல் நலத்துடன் இருந்து அவருக்கு ஊழியம் செய்யும் வரைதான் அவர் அன்பாக நடந்து கொள்கிறார். நாங்கள் உடல் நலம் இழந்து அவருக்கு ஊழியம் செய்ய முடியாமல் போய்விட்டால் அவர் எங்களை அலட்சியப்படுத்த ஆரம்பித்து விடுகிறாரே'' என்று பெண்கள் கேட்கலாம். அதுவும் நன்றி கொன்ற செயல் என்பதில் ஐயமில்லை.

ஒருவர் உடல் நலத்துடன் இருந்து ஊழியம் செய்து கை நிறையச் சம்பாதித்துக் கொண்டிருந்தார். அவரின் உடல் நலம் குறையத் தொடங்கியது. ஊறுபட்ட உடல் நலத்துடன் அவர் உழைத்தால், அவர் உடல்நலம் மேலும் கெடும் என்று அவர் மனைவி எண்ணினார். அவர், அவருக்கு என்ன எழுதினார் தெரியுமா? '' உடனே வேலையை விட்டு வாருங்கள்! நான் உழைத்து உங்களைக் காப்பாற்றுகிறேன்.'' நோயின் முறிப்பாலோ, தொழிலில் இழப்பாலோ கணவருக்குக் கஷ்டம் வரும் போது, அவருக்கு உதவ மனைவி இப்படித்தான் முன் வர வேண்டும்.

பெரும்பாலான பெண்களின் குணம் கணவர் ஈட்டுவதை எல்லாம் தங்களிடம் கொண்டு வந்து தந்து விட வேண்டும்,

ஆனால் தங்களிடம் கணக்குக் கேட்கக் கூடாது என்று விரும்புவது. அத்தகைய பெண் ஒருத்தி அரபு நாட்டிலும் இருந்தாள். அவளை மணக்க இருவர் விரும்பினர். ஒருவர் அறிஞர், மற்றொருவர் இளைஞர். அவர்கள் இருவரையும் பார்த்து அவர்கள் பேசுவதைக் கேட்ட பிறகு தான் அவர்களில் ஒருவரைத் தான் தேர்ந்தெடுக்க முடியும் என்று அவள் கூறினாள். அதற்காக அவர்கள் இருவரையும் அவள் தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தாள். அவ்வாறே அவர்கள் இருவரும் அவள் வீட்டிற்குச் சென்றார்கள்.

அறிஞர் அந்த இளைஞரைப் பார்த்து, ''நீர் ஈட்டிக் கொணரும் பொருளை எவரிடம் கொடுப்பீர்?'' என்று கேட்டார். ''மனைவியிடம் தான் கொடுப்பேன்! ஆனால் கொடுக்கும் பணத்திற்குக் கணக்குக் கேட்பேன்'' என்றார் அந்த இளைஞர். திரை மறைவிலிருந்து கொண்டு, இதனை அந்த இளம் பெண் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அடுத்து அந்த இளைஞர், அறிஞரைப் பார்த்து, ''நீர் ஈட்டிக் கொணரும் பொருளை எவரிடம் கொடுப்பீர்?'' என்று கேட்டார். அந்தப் பெண்ணை அடையத் தம்முடன் போட்டியிடுபவன் இளைஞன் என்பதை உணர்ந்து கொண்டு அறிஞர், ''நான் ஈட்டிக் கொணரும் பொருளையெல்லாம் மனைவியிடம் கொடுப்பேன். ஆனால் கணக்குக் கேட்க மாட்டேன்'' என்று கூறினார். இதைக் கேட்டதும் திரை மறைவிலிருந்த அந்தப் பெண் இளைஞரை வேண்டாம் என்று கூறிவிட்டு, அறிஞரையே மணப்பதாக அறிவித்தாள். இந்த அறிஞர் யார் தெரியுமா? முகீரா பின் ஷுஃபா என்னும் நபித்தோழர்.

உங்கள் கணவர் தாம் ஈட்டுவதை உங்களிடம் தர வேண்டும் என்று விரும்புங்கள்! அதில் தவறில்லை. ஆனால் அந்தப் பணத்திற்குக் கணக்குக் கேட்கக் கூடாது என்று விரும்பாதீர்கள், அது தவறு. அந்தப் பணத்தை சிக்கனமாகச் செலவிடுங்கள், சேமியுங்கள்! உங்கள் கணவர் கஷ்டப்பட்டு ஈட்டிக் கொண்டு வந்து தரும் பணத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களுடையதாகும். இதைத்தான் அறிஞர் பெர்னார்ட் ஷா இப்படிக் கூறுகிறார்: ''கணவன் சம்பாதிக்கலாம். ஆனால் மனைவிதான் அவன் சம்பாதிப்பதைக் காப்பாற்ற வேண்டும்.''



பெரும்பாலான பெண்களின் குணம் கணவர் கொண்டு வந்து கொடுக்கும் பணத்தையெல்லாம் செலவிட்டு விடுவது. கணவர் மனைவியிடம் தாம் ஈட்டியதைக் கொண்டு வந்து கொடுத்து மனைவி ஏதாவது மீதம் பண்ணி வைத்திருப்பாள் என்று எண்ணுகிறார். ஏதாவது தேவை ஏற்பட்டு மனைவியிடம் வந்து, ''பணம் இருக்கிறதா?'' என்று கேட்கிறார். ''என்னிடம் ஏது பணம்?'' என்று மனைவி கூறிவிடுகிறாள். ''அவ்வளவையுமா செலவழித்து விட்டாய்?'' என்று ஏக்கத்துடனும், ஏமாற்றத்துடனும் கணவர் கேட்டால், 'அது வாங்கினேன், இது வாங்கினேன்'' என்று கூறிவிடுகிறாள். இப்படி நீங்கள் இருக்கவே கூடாது. உங்கள் கணவர் வந்து, பணம் கேட்டால், ''எவ்வளவு வேண்டும்? கூறுங்கள்! தருகிறேன்'' என்று நீங்கள் சொல்ல வேண்டும்.

அயல் நாடுகளில் ஊழியமோ, வாணிபமோ புரிபவர்கள், தம் மனைவிமார்கள் பற்றிக் கூறும் குறை,அவர்களின் மனைவிமார்கள் தாம் அனுப்பும் பணத்தையெல்லாம் செலவிட்டு விடுகின்றனர் என்பதுதான். ''பெண் கையில் கொடுத்த பொருள் தங்காது, ஆண் கையில் கொடுத்த குழந்தை வாழாது'' என்னும் பழமொழிக்குப் பொருத்தமாகவே அந்தப் பெண்கள் நடந்துகொள்கின்றனர். அயல் நாட்டில் இருக்கும் உங்கள் கணவர் அனுப்பும் பணத்தைச் சிக்கனமாகச் செலவிட்டு சேமியுங்கள்! உங்கள் கணவர் ஊருக்கு வரும் போது, அந்தப் பணத்தை எடுத்து அவரிடம் கொடுங்கள்! இவ்விதம் நீங்கள் செய்தால், உங்கள் கணவர் எவ்வளவு சந்தோஷப்படுவார் தெரியுமா? அவர், 'ஏதாவது பணம் மீதம் பண்ணி வைத்திருக்

கிறாயா?' என்று கேட்கும் போது, 'ஒன்றுமில்லை' என்று நீங்கள் கையை விரித்தால் அவர் எவ்வளவு ஏமாற்றம் அடைவார். அறிவீர்களா?

உங்கள் கணவர் அயல் நாடுகளில் காலமெல்லாம் கஷ்டப் படவேண்டும் என்பதுதான் உங்கள் ஆசையா? அவர் ஊருக்கு வந்து ஓய்வு எடுக்க வேண்டாமா? அப்பொழுது நீங்கள் சேமித்து வைத்திருக்கும் பணம் எப்படிக் கைகொடுக்கும், எண்ணிப் பாருங்கள்! வயதானபின் உங்கள் கணவர் ஊருக்கு வந்து ஓய்வு கொள்ள வேண்டாமா? அப்பொழுது அவர் அனுப்பிய பணத்தில் மீதம் செய்து, வருவாய் வரக்கூடிய சொத்துக்கள் வாங்கியிருந்தால், எப்படி வசதியாயிருக்கும்! சிந்தித்துப் பாருங்கள். இதுவரை அவர் அனுப்பிய பணத்தை யெல்லாம் செலவிட்டு விட்டு வெறுங்கையுடன் நீங்கள் இருந்தால், இனி மேலும் அவ்வாறு இராதீர்கள்! உங்கள் கணவர் அயல் நாட்டில் கஷ்டப்பட்டுச்சம்பாதித்த வியர்வைப் பணம் அது; இரத்தப் பணம் அது என்பதை எண்ணிப் பார்த்துச் சேமியுங்கள்!

அயல் நாடுகளில் பணம் தெருக்களிலெல்லாம் கொட்டிக் கிடக்கிறது என்றும், அதை உங்கள் கணவர் அள்ளிக் கொண்டு வருகிறார் என்றும் எண்ணிக் கொள்ளாதீர்கள்! அயல் நாடுகளில் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத தட்பவெப்ப நிலையில், பழக்கமில்லாச் சூழ்நிலையில், பழக்கமில்லா மக்களிடம், பழக்கமில்லா மொழி பேசுபவர்களிடம் பணி புரிந்து அல்லது வாணிபம் புரிந்து அவர் ஈட்ட வேண்டியதிருக்கிறது! நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பால், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உங்களையெல்லாம் விட்டுப் பிரிந்திருந்து கொண்டு சம்பாதிக்க வேண்டியதிருக்கிறது. அவர் அனுப்பும் பணத்தைச் செலவிடும்போது இவையெல்லாம் மனத்திற் கொள்ளுங்கள்!

அவரின் நன்மையை நாடுவது என்பதில், அவரின் இவ்வுலக வாழ்க்கைக்கு உதவுவது மட்டும் அடங்காது,



அவரின் அவ்வுலக வாழ்க்கைக்கு உதவுவதும் அடங்கும். அல்லாஹ்வும் தன் திருமறையில் இவ்விதம் கூறுகிறான்: ''முஃமினான ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் பாதுகாப்பாளராகவும், உதவியாளராகவும் இருக்கிறார்கள். அவர்கள் நல்லதைச் செய்யத் தூண்டுவார்கள். கெட்டதைத் தடுப்பார்கள். தொழுகையை நிலை நிறுத்துவார்கள், ஜகாத் கொடுப்பார்கள். இறைவனையும், இறை தூதரையும் பின்பற்று வார்கள். இத்தகையவர்களுக்குத்தான் இறைவன் கருணை காட்டுவான்.'' *(9:71)*

எல்லோரிடமும் ஈமான் என்னும் இறை நம்பிக்கை இருக்கவே செய்கிறது. ஆனால் அந்த நம்பிக்கைக்கேற்ற வாழ்க்கைதான் இருப்பதில்லை. உங்கள் கணவரிடம் அந்த நம்பிக்கைக்கேற்ற வாழ்க்கை இல்லாவிட்டால் அவ்வித வாழ்க்கை அவரிடம் அமைய உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்!

உங்கள் கணவர் ஐவேளையும் தொழுபவராக இருந்தால், பிரச்சினை இல்லை. அவர் ஐவேளையும் தொழாதவராக இருந்தால் அவரைத் தொழ வைக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையதாகும். தொழாமல் இருப்பதற்கு அல்லாஹ் அனுமதித்திருக்கும் வயது ஒன்பதுதான் என்பதை அவரிடம் இதமாக எடுத்துரைத்து, அவரை முதலில் ஜும்ஆத் தொழுகைக்கு அனுப்பி வையுங்கள்! வெள்ளிக்கிழமை அன்று ஜும்ஆத் தொழுகை என்று ஒன்று இருப்பதே சிலருக்கு நினைவிருப்பதில்லை. அவர்களில் ஒருவராய் உங்கள் கணவர் இருந்தால், வெள்ளிக்கிழமை பிறந்ததும், அன்று ஜும்ஆத் தொழுகை இருப்பதை அவருக்கு நினைவுபடுத்தி விடுங்கள்! அவர் அலுவலகத்திலோ, வணிக நிலையத்திலோ, அந்த நேரத்தில் இருப்பவராயிருந்தால் அவரிடம் ஜும்ஆத் தொழுகையில் அவசியம் கலந்து கொள்ளும்படிச் சொல்லி அனுப்புங்கள்! ஜும்ஆத் தொழுகையை எந்த வேலைக் கிடையிலும் நிறைவேற்றத் தவற வேண்டாம் என்று அவரை

வேண்டிக் கொள்ளுங்கள்! ஒரு நூறு ஜும்ஆத் தொழுகைகளை ஒன்றுகூடத் தவறாமல் நிறைவேற்றினால், அவருக்கு ஒரு ஹஜ்ஜுச் செய்த பலன் கிடைக்கும் என்று சொல்லி வையுங்கள்! இது அவருக்கு ஜும்ஆத் தொழுகையைத் தவறாமல் நிறைவேற்றும் ஆர்வத்தை உண்டு பண்ணும்.

இதன்பின் ஐவேளைத் தொழுவதன் அவசியத்தை அவரிடம் எடுத்துக் கூறி, அவரை ஐவேளையும் வீட்டிலாவது தொழச் செய்யுங்கள்! அவர் இளங்காலையில் எழாதவரா யிருந்தால் அவரிடம் பஜ்ருத் தொழுகையின் சிறப்பை எடுத்துக் கூறி, அவரை எழச் செய்யுங்கள்! அதன்பின் மற்ற வேளைத் தொழுகைகளையும் வேளை தவறாமல் தொழத் தூண்டுங்கள்! 'பாங்கு' கூறப்பட்டதும் கையில் இருக்கும் வேலையை வேகமாக முடித்துக் கொண்டு தொழுவதற்கு ஆயத்தமாகுமாறு கூறுங்கள்! 'கையில் இருக்கும் வேலையை முடித்துக் கொள்வோம்' என்று இருந்து விடும்போதுதான் 'வக்து' போய் விடுகிறது, தொழுகை 'களா'வாகி விடுகிறது. அண்ணல் நபி (ஸல்) அவர்களும் அரசர்க்கரசர்களும் போர்க்களங்களில் வைத்துக்கூட 'வக்து' தவறாமல் தொழுது இருக்கிறார்கள் என்பதை அவரிடம் எடுத்துக் கூறுங்கள்!

உங்கள் கணவர் நோன்பு வைப்பவராயிருநதால் கவலை இல்லை. அவர் நோன்பு வைக்காதவராய் இருந்தால் அவசியம் அவரிடம் ரமலான் மாதத்து முப்பதுநோன்புகளையும் வைக்கக் கூறுங்கள்! ஒரு சமயம் அபூ உமாமா (ரலி) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹுத் தஆலா எனக்கு நற்கூலி அளிக்கத் தக்க ஒரு செயலைச் செய்துவர என்னைப் பணியுங்கள்!'' என்று கேட்டபோது, ''நோன்பைக் கடைப்பிடித்து வாரும்! ஏனெனில் அதற்கு நிகரான எந்த வணக்கமும் இல்லை'' என்று அவர்கள் கூறினர். இதனையும் உங்கள் கணவரிடம் சொல்லுங்கள்!



இன்னொரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினர்: ''மனிதர்களின் ஒவ்வொரு நற்செயலும் அல்லாஹ்விடம் சிறிதளவாவது பெருகி விடுகிறது. ஒரு நற்செயல் பத்திலிருந்து எழுநூறு மடங்கு வரை பல்கிப் பெருகுகிறது. எனினும் அல்லாஹ், 'நோன்பு மட்டும் இதற்கு விதிவிலக்கு, அது என் விருப்பத்திற்கு உட்பட்டது. எவ்வளவு அதிகமாக நான் விரும்புகிறேனோ, அவ்வளவு அதிகமாக அதற்குப் பிரதிபலன் அளிப்பேன்' என்று கூறுகிறான்.'' இதையும் உங்கள் கணவரிடம் சொல்ல மறக்காதீர்கள்!

மற்றொரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்விதம் கூறினார்கள்: ''ரையான் என்று கூறப்படும் ஒரு தலைவாசல் சுவனபதியில் இருக்கிறது. நோன்பாளியைத் தவிர்த்து வேறு எவரும் அதன் வழியாகச் சுவனபதியில் நுழைய மாட்டார்கள். அவர்கள் அதனுள் நுழைந்ததும் அது அடைக்கப் பட்டு விடும். பிறகு அதன் வழியே எவரும் செல்ல மாட்டார்கள்.'' இதையும் உங்கள் கணவரிடம் சொல்லத் தவறாதீர்கள்!

ரமலான் மாத நோன்பின் மாண்பை உணர்ந்தவர்கள், ஆண்டு முழுவதும் ரமலான் மாதமாக இருக்கக் கூடாதா என்று எண்ணு வார்கள். இவ்வளவு சிறப்பிற்குரிய ரமலான் மாத நோன்பை, உங்கள் கணவர் இழந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

அவர் வயிறு ஏற்றுக்கொள்ளும் உணவுகளை அவர் நோன்பு வைப்பதற்கும், நோன்பு திறப்பதற்கும் செய்து கொடுங்கள்! அதில் சங்கடப்படாதீர்கள்! ரமலான் மாத நோன்பு வைப்பது எவ்வளவு பாக்கியமானது என்பதை அறிந்த நீங்கள், இந்த விஷயத்தில் உங்கள் கணவருக்கு உதவாமல் இருக் கலாமா? நீங்கள் உதவினீர்களே யானால் அந்த பாக்கியத்தில் ஒரு சிறு பங்காவது உங்களுக்கும் கிடைக்கலாம் அல்லவா? ''நோன்பாளிக்கு நோன்பு திறக்க ஏற்பாடு செய்து கொடுப் பவருக்கும், நோன்பாளிக்குக் கிடைக்கும் பயனைப் போன்று கிடைக்கும்'' என்று அண்ணல்நபி (ஸல்) அவர்களும் கூறியிருக்கின்றனர்.

உடல் நலமும் பொருள் வசதியும் உள்ள ஒவ்வோர் ஆணும் பெண்ணும், தன் ஆயுளில் ஒரு முறையாவது ஹஜ்ஜுச் செய்ய வேண்டியது அவசியமாகும். உங்கள் கணவர், உடல் நலமும், பொருள் வசதியும் உள்ளவராக இருந்தால், அவரை ஹஜ்ஜுக்குப் போகும்படித் தூண்டுங்கள்! அவர் தம்முடன் உங்களையும் அழைத்துக் கொண்டு போகும்படிக் கோருங்கள்! சில குடும்பங்களில் ஆண்கள் ஹஜ்ஜுச் செய்வது பெண்களின் தூண்டுதலால்தான். அத்தகைய பெண்ணாய் நீங்களும் இருங்கள்! மக்காவிலுள்ள கஃபாவை ஒரு குறிப்பிட்ட தடவை சுற்றினால் ஒருவரின் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டு, அவர் அன்று பிறந்த பாலகர் போல ஆகிவிடுவார் என்று சொல்லப்படுகிறது. இதை உங்கள் கணவரிடம் கூறுங்கள்.

ஜகாத் கொடுக்கவும் உங்களின் கணவரைத் தூண்டுங்கள்! அது வருமான வரி அல்ல, சொத்துவரி. சிலர் தொழுவார்கள், நோன்பு வைப்பார்கள் ஹஜ்ஜுக்கும் கூட ஒரு முறை சென்று வந்து விடுவார்கள். ஆனால் ஜகாத் மட்டும் கொடுக்க மாட்டார்கள். ஜகாத் என்பது அல்லாஹ்வுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கடனாகும். அந்தக் கடனைக் கொடுத்தால் உங்களிடம் உள்ள பணம் குறைந்து விடும் என்றும் எண்ணாதீர்கள்; ஜகாத் கொடுக்காமல் உங்களிடம் உள்ள பணத்தைப் பெருக்கிவிடலாம் என்றும் கருதாதீர்கள்! கண் மூடிக் கண் திறப்பதற்குள் ஒருவரிடம் இருக்கும் செல்வத்தைப் பெருக்கவும் அல்லாஹ்வால் இயலும், பறிக்கவும் அல்லாஹ்வால் முடியும். இதை மனத்திற்கொண்டு, ஜகாத் கொடுக்காதவராய் உங்கள் கணவர் இருந்தால் ஜகாத் கொடுக்க அவரைத் தூண்டுங்கள்! உங்கள் கணவர் ஜகாத் கொடுப்பவரா யிருந்தால் அவர் வழியில் குறுக்கே நிற்காதீர்கள்.

ஜகாத் கொடுப்பதுடன் நில்லாமல் உங்கள் கணவரை சதகாவும் கொடுக்கத் தூண்டுங்கள்! சில குடும்பங்களில் கணவர் தாராளமானவராக இருப்பார்; மனைவி அப்படி இருக்க



மாட்டார். அரிதாகவே கணவர் மனைவி இருவரும் தாராளமானவர்களாக இருப்பார்கள். அப்படி இருந்த இருவரை நீங்கள் அறிவீர்களா? அதனை அல்லாமா முகம்மது பின் உமர் அல் வாக்கிதி (ரஹ்) அவர்களே கூறுகிறார்கள். கேளுங்கள்!

''நான் ஒரு முக்கியமான வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போது பெருநாள் வந்தது. பெரு நாளுக்கு என்று நான் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. கையில் பணமும் இல்லை. என்ன செய்வதென்று யோசித்தேன். என் வணிக நண்பர் ஒருவரிடம் சென்று கடன் கேட்டேன். அவர் உடனே ஒரு பணப் பையைக் கொண்டு வந்து கொடுத்தார். அவருக்கு நன்றி சொல்லிவிட்டு, பணப்பையுடன் வீட்டிற்கு வந்தேன்.

''நான் வீடு வந்து சேர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் என் வீட்டின் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. கதவைத் திறந்தேன். வெளியே என் நண்பர் ஒருவர் நின்று கொண் டிருந்தார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிறந்த ஹாஷிம் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரை உள்ளே அழைத்துச் சென்று, அமர வைத்து, அவர் வந்த காரணத்தை அன்போடு கேட்டேன். அவர் தாம் வறுமை நிலையில் இருப்பதாயும், தமக்கு ஏதாவது பணம் தந்து உதவ வேண்டும் என்றும் கூறினார். எனக்குத் தலை சுற்றியது. உள்ளே சென்று என் மனைவியிடம் ஆலோசனை கேட்டேன். 'நான் கடனாக வாங்கி வந்த பணத்தில் பாதியை அவருக்குக் கொடுத்து விடலாம்' என்னும் என் கருத்தைக் கூறினேன். அதற்கு என் மனைவி சம்மதிக்கவில்லை. 'நீங்கள் மிகவும் சாதாரண நிலையில் இருக்கும் போதே உங்கள் நண்பர் ஓர் இலட்சம் திர்ஹம் உடனே கடனாகத் தந்தார். இப்பொழுது உங்களைத் தேடி வந்திருப்பவர் யார்? உங்களுடைய உற்ற நண்பர், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிறந்த ஹாஷிம் குடும்பத்தைச் சேர்ந்தவர். அத்தகையவர் வந்து கேட்கும் போது, பாதிப் பணம் கொடுக்கலாம் என்று கூறுகிறீர்கள், அது அழகல்ல. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து அந்தப்

பணப்பையை அப்படியே அவருக்குக் கொடுத்து விடுங்கள்!' என்றாள் என் மனைவி. மனைவியின் முகத்தை வியப்போடு பார்த்தவண்ணம் வெளியே வந்தேன். பணப்பை கைமாறியது. என் ஹாஷிம் நண்பர் மகிழ்ச்சியோடு விடைபெற்றார்.

''எனக்கு உதவி செய்த வணிக நண்பரிடம் அப்பொழுது இருந்ததெல்லாம் அந்த ஓர் இலட்சம் திர்ஹங்கள் தாம். வாக்கிதிக்கு நான் இந்தப் பணத்தைக் கொடுத்து விட்டாலும் வேறு நண்பரிடம் பணம் வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணித் தான் அவர் எனக்குத் தந்திருப்பார் போலும். அவருக்கு இப்பொழுது தேவை ஏற்படவே எவரிடமாவது கேட்டுப் பார்க்கலாம் என்று வெளியே கிளம்பினார். தற்செயலாக அவர் என்னுடைய ஹாஷிம் குடும்ப நண்பரைச் சந்தித்தார். 'பெருநாள் செலவுக்குக் கொஞ்சம் பணம் கடனாகக் கிடைக்குமா?' என்று அவரிடம் கேட்டார். ஹாஷிம் குடும்ப நண்பர் ஒரு கணமும் தயங்காமல், தம் வறுமையைப் பற்றியும் எண்ணிப் பாராமல் அப்படியே அந்தப் பணப்பையை அவரிடம் கொடுத்து விட்டார்.

''வீடு திரும்பிய வணிகர் தம் கையிலிருந்த பையை உற்றுப் பார்த்தார். 'இது நம்முடைய பையாயிற்றே' என்று திகைத்தார். முடிப்பை அவிழ்த்துப் பணத்தை எண்ணிப் பார்த்தார். அவர் வைத்த தொகை அப்படியே இருந்தது. என்ன நடந்திருக்கும் என்ற அறிந்து கொள்வதற்காக, அவர் நேராக என்னிடம் வந்தார். நான் நடந்ததைச் சொன்னேன். பிறகு நாங்கள் மூவரும் அந்தப் பணத்தைப் பங்கு போட்டுப் பெருநாளைக் கொண்டாடினோம்.

''இந்தச் செய்தி எப்படியோ கலீபா அல்மாமூனின் செவியை எட்டிவிட்டது. அவர் எங்கள் மூவரையும் அழைத்து ஆளுக்கு 2000 தீனார் அன்பளிப்பாகக் கொடுத்தார். 'உங்கள் மூவரையும் விட அன்பளிப்புப் பெறத் தகுதியுள்ளவர் முகம்மது பின் வாக்கிதியின் மனைவியே ஆவார். அவருடைய தூண்டுதல் இல்லை என்றால் இந்த நற்செயல் நடந்திருக்காது.



அவரின் குணப்பண்பு குன்றின் மேலிட்ட விளக்குப் போல் ஒளிர்கிறது' என்று கூறிப் பாராட்டி, என் மனைவிக்கு 4000 தீனார் அன்பளிப்புச் செய்தார்.''

முகம்மது பின் உமர் அல் வாக்கிதியின் மனைவி போன்று, நீங்கள் இருப்பதை எல்லாம் அள்ளிக் கொடுக்க வேண்டிய தில்லை. இருப்பதில் ஒரு சிறிதளவாவது கொடுக்குமாறு உங்கள் கணவரைத் தூண்டுங்கள்! உங்களுக்கு அல் மாமூனின் வெகுமதி கிடைக்கா விட்டாலும் அல்லாஹ்வின் வெகுமதி அவசியம் கிடைக்கும்.

ஐந்து கடமைகளையும் வலியுறுத்துவதுடன் நின்று கொள்ளாதீர்கள்! இஸ்லாம் உவக்கக் கூடிய உயர் பண்புகளும், பழக்க வழக்கங்களும் உங்கள் கணவரிடம் ஏற்படவும் உங்களால் முடிந்த மட்டும் முயலுங்கள்! ஆண்கள் தாடி வைப்பது நபியின் 'சுன்னத்'. அதாவது நபியின் வழிமுறை யாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்களை முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டபின், அவர்கள் வற்புறுத்திய நெறிகளையும், வாழ்ந்து காட்டிய முறைகளையும் கடைப்பிடிப்பது அவசியமில்லையா? பெரும்பாலான ஆண்கள் தாடி வைக்காததற்கு ஒரு காரணம், அது வயதைக் கூட்டிக் காட்டும் என்பது. மறுகாரணம் மனைவி விரும்ப மாட்டாள் என்பது. உங்கள் கணவர் தாடி வைக்க விரும் பினால், அதைத் தடுக்காதீர்கள்! அவர் தாடி வைத்துவிட்டு எடுக்க விரும்பினால் அதை அனுமதிக்காதீர்க்ள!

உங்கள் கணவரிடம் இஸ்லாம் வெறுக்கக் கூடிய பண்புகளோ, பழக்க வழக்கங்களோ இருந்தால் அவற்றைப் பக்குவமாக அவரிடமிருந்து அகற்ற முயலுங்கள்! எடுத்த எடுப்பில் அவரைக் குறைகூறத் தொடங்கி விடாதீர்கள்! அன்பினால் இதைச் சாதிக்க வேண்டும். அடித்துச் சாதிப்பதற்கு உங்கள் கணவர் ஒன்றும் குழந்தை அல்ல. 'நானே அல்லாஹ்' என்று கூறிய ஃபிர்அவ்னிடம் கூட இதமாகப் பேசும்படி

அல்லாஹ் நபி மூஸா (அலை) அவர்களுக்கு அறிவுறுத்தினான். எனவே கண்டிக்கும் விதத்தில் பேசிக் காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள்! நீங்கள் கண்டிக்கும் விதம் பேசிவிட்டால், 'இவள் என்ன சொல்வது? நாம் என்ன கேட்பது?' என்று உங்கள் கணவர் எண்ணத் தொடங்கிவிடுவார், எனவே இதமாகவும், பதமாகவும் அவரிடம் உள்ள குறையை எடுத்துக் கூறி அதனை விட்டுவிடும்படி வேண்டிக் கொள்ளுங்கள்! ஓரிருமுறை வேண்டிக் கொண்டதும் திருந்திக் கொள்பவர்களும் உண்டு, பலமுறை வேண்டிக் கொண்ட பின்பும் திருந்திக் கொள்ளாதவர்களும் உண்டு. எனவே பலமுறைவேண்டிக் கொண்ட பின்பும் அவர் திருந்தாவிட்டால் மனம் வருந்தாதீர்கள்! அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்த அரிய உரையை மனத்திற் கொண்டு பொறுமையோடு இருங்கள். ''எவள் ஒருத்தி தன் கணவரின் கெட்ட குணங்களைச் சகித்துக் கொள்வாளோ, அவளுக்கு ஃபிர்அவ்னுடைய மனைவி ஆஸியா அவர்களுக்கு அளித்த நன்மை போன்று அளிக்கப்படும்.''

பொதுவாக உங்கள் கணவருக்கு நன்மைகள் விளைய வேண்டும் என்றும், குறிப்பாக, அவரின் ஆகாக் குணங்கள், பழக்கங்கள் அகல வேண்டும் என்றும் ஒவ்வொரு வேளைத் தொழுகைக்குப் பிறகும் அல்லாஹ்விடம் இறைஞ்சுங்கள்! உங்களுக்காக நீங்கள் இறைஞ்சும் ஒவ்வொரு சமயமும், உங்கள் கணவருக்காகவும் இறைஞ்சுங்கள்!

இவ்விதம், நீங்கள் உங்கள் கணவருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் அவசியம் செய்ய வேண்டும். அதில் அலட்சியமாயிருந்து விடக் கூடாது. ஏனெனில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இப்படிக் கூறியிருக்கிறார்கள்: ''ஒரு பெண் தன் கணவருக்குரிய கடமைகளை நிறைவேற்றாத வரையில் (அவள்) அல்லாஹ்வுக்குரிய கடமைகளை நிறைவேற்றியவள் ஆக மாட்டாள்.''

# நல்ல பெண்மணி

**ந**ல்ல மனைவியாக இருக்கும் நீங்கள், நல்ல பெண் மணியாகவும் இருக்க வேண்டும். ஒரு நல்ல பெண்மணியை உருவாக்குபவை நல்ல நம்பிக்கைகள், நல்ல ஒழுக்கங்கள், நல்ல பழக்கங்கள், நல்ல பண்புகள் ஆகியவை ஆகும்.

முதலில் உங்களிடம் ஈமான் என்னும் இறை நம்பிக்கை உறுதியாக இருக்க வேண்டும். ஆனால், சில பெண்களிடம் இந்த இறை நம்பிக்கை அத்துணை உறுதியாக இருப்பதில்லை. அதனால் தான் அவர்கள், இறைவன் ஒருவன், அவன் எல்லாம் வல்லவன் என்று நம்பினாலும், அவ்வித நம்பிக்கை அவர்களிடம் இருக்கிறது என்று கூறும் விதம் நடந்து கொள்வதில்லை. அதனால் தான் அவர்களிடம் மூடத்தனமான நம்பிக்கைகளும், அறிவீனமான பழக்க வழக்கங்களும் இருக்கின்றன. ''அப்படி என்ன எங்களிடம் மூடத்தனமான நம்பிக்கைகள் இருக்கின்றன; அறிவீனமான பழக்க வழக்கங் கள் இருக்கின்றன?'' என்று நீங்கள் கேட்கலாம். அவை உங்களிடம் இல்லாமலிருக்கலாம். சில பெண்களிடம் இருக்கின்றன என்பதையாவது நீங்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அவை எவை என அறிய ஆவலுறுகிறீர்களா? கேளுங்கள்!

சில முஸ்லீம் பெண்கள், சில மாதங்களையும், சில நாட்களையும், சில நேரங்களையும் கெட்டவையாகக் கருதுகின்றனர். ஸஃபர் மாதத்தை பீடை பிடித்த மாதம் என்றும்,

அதில் வரும் கடைசிப் புதன்கிழமையைப் பீடை பிடித்த நாள் என்றும் நம்புகின்றனர். இம்மாதத்தில் சில கெட்ட காரியங்களும், சில நல்ல காரியங்களும் நடந்திருக்கின்றன என்பது உண்மை. நபி ஆதம் (அலை) அவர்களையும், ஹவ்வா அவர்களையும் அல்லாஹ் பூமிக்கு அனுப்பி வைத்தது இம்மாதத்தில் தான் என்றும், நபி ஹூத் (அலை) அவர்களின் காலத்து மக்களை அல்லாஹ் பெரும் புயல் எழுப்பி அழித்தது இம்மாதத்தில் தான் என்றும் கூறுகின்றனர். ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், கஸ்வத் - வத்தான் போருக்குப் படை நடத்திச் சென்றது இம் மாதத்தில்தான் என்றும், அலீ (ரலி) அவர்களுக்கும் பாத்திமா (ரலி) அவர்களுக்கும் திருமணம் நடந்தது இம்மாதத்தில் தான் என்றும் சொல்கின்றனர். நபி ஹூத் (அலை) அவர்களின் காலத்தில் எழுந்த புயல் இம்மாதத்தின் இறுதிப் புதனுக்கு முன்னிருந்த புதனில் தொடங்கி இறுதிப் புதன் வரை வீசியது என்று கூறப்படுகிறது. இம்மாதத்தின் இறுதிப் புதன் அன்றுதான் சுவன நீர் மற்ற நீர்களுடன் கலக்கிறது என்றும், நோய்வாய்ப்பட்டிருந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இந்நாளில்தான் நலம் பெற்று, குளித்து விட்டுப் பயணம் செய்தனர் என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் இம்மாதத்தில் தீமையும் நடந்திருக்கிறது, நன்மையும் நடந்திருக்கிறது. இம்மாதத்தின் இறுதிப் புதனில் தீமையும் நடந்திருக்கிறது. நன்மையும் நடந்திருக்கிறது. தீமை மட்டுமே நடந்தது, நன்மை நடக்கவில்லை என்று எவரும் கூற முடியாது. எனவே நல்ல காரியங்கள் செய்ய ஏற்ற மாதம் அல்ல ஸஃபர், ஏற்ற நாள் அல்ல இறுதிப் புதன் என்று கொள்வதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

முந்தைய நபிமார்களின் காலத்தில் அவர்களின் போதனைகளைக் கேட்காததால் சில சமூகங்கள் மீது அல்லாஹ்வின் சாபம் ஏற்பட்டு, அவற்றிற்கு வேதனைகளும், சோதனைகளும் வந்தன. அந்தச் சமூகங்களுக்கு வேதனைகளும், சோதனைகளும் எந்த நாட்களில் வந்தனவோ, அந்த நாட்களைக் கெட்ட



புறம் பேசுவதும், அவதூறு கூறுவதும் பெரும் தவறுகள் ஆகும். ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''புறம் பேசுதல் என்றால் என்ன என்று நீங்கள் அறிவீர்களா?'' என்று தம் தோழர்களைப் பார்த்துக் கேட்டனர். ''அல்லாஹ்வும், அவன் தூதரும் தான் மிகவும் அறிந்தவர்கள்'' என்று தோழர்கள் பதில் கூறினார்கள். ''உங்களில் ஒருவர், தம் சகோதரர் வருத்தப் படும்படியான ஒன்றைக் கூறுவதுதான்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர். அப்பொழுது ஒருவர், ''நான் கூறுவது என் சகோதரரிடம் உண்மையில் இருக்குமாயின், அது பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?'' என்று வினவினார். ''நீர் கூறியது, அவரிடம் இருக்குமாயின் நிச்சயமாக, நீர் அவரைப் பற்றிப் புறம் பேசியவராவீர். அன்றி, நீர் கூறியது அவரிடம் இல்லையாயின் நிச்சமாக நீர் அவர் மீது அவதூறு கூறியவராவீர்!'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

ஒரு முறை ஆயிஷா (ரலி) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மற்றொரு மனைவியான சபிய்யா (ரலி) அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு, ''அவர் குட்டையாக இருப்பதே தாங்கள் குறை காணப் போதுமான காரணமாயிற்றே'' என்றார்கள். அதைக் கேட்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''ஆயிஷாவே! நீர் கூறிய வார்த்தை, கடலில் கலக்கி விடப்படுமாயின், மெய்யாகவே அது கடலை அழுக்கடையச் செய்து விடும்'' என்று கூறினர். ''நான் ஒருவரின் நிலையை உள்ளது உள்ளபடியே (தானே) தங்களிடம் எடுத்துக் கூறினேன்'' என்று ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியபோது, ''நிச்சயமாக, நான் ஒருவரின் நிலையை உள்ளது உள்ளபடியே எடுத்துரைப்பதையும் விரும்ப மாட்டேன், (அதற்குப் பகரமாக) எவ்வளவு பொருள் கிடைத்தாலும் சரியே'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தனர்.

நாம் உலகில் வாழ்வதன் நோக்கமே சுவனத்தை அடைய வேண்டும் என்பது தான். அந்தச் சுவனத்தை நமக்கு இல்லாமல்

அதில் வரும் கடைசிப் புதன்கிழமையைப் பீடை பிடித்த நாள் என்றும் நம்புகின்றனர். இம்மாதத்தில் சில கெட்ட காரியங்களும், சில நல்ல காரியங்களும் நடந்திருக்கின்றன என்பது உண்மை. நபி ஆதம் (அலை) அவர்களையும், ஹவ்வா அவர்களையும் அல்லாஹ் பூமிக்கு அனுப்பி வைத்தது இம்மாதத்தில் தான் என்றும், நபி ஹூத் (அலை) அவர்களின் காலத்து மக்களை அல்லாஹ் பெரும் புயல் எழுப்பி அழித்தது இம்மாதத்தில் தான் என்றும் கூறுகின்றனர். ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், கஸ்வத் - வத்தான் போருக்குப் படை நடத்திச் சென்றது இம் மாதத்தில்தான் என்றும், அலீ (ரலி) அவர்களுக்கும் பாத்திமா (ரலி) அவர்களுக்கும் திருமணம் நடந்தது இம்மாதத்தில் தான் என்றும் சொல்கின்றனர். நபி ஹூத் (அலை) அவர்களின் காலத்தில் எழுந்த புயல் இம்மாதத்தின் இறுதிப் புதனுக்கு முன்னிருந்த புதனில் தொடங்கி இறுதிப் புதன் வரை வீசியது என்று கூறப்படுகிறது. இம்மாதத்தின் இறுதிப் புதன் அன்றுதான் சுவன நீர் மற்ற நீர்களுடன் கலக்கிறது என்றும், நோய்வாய்ப்பட்டிருந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இந்நாளில்தான் நலம் பெற்று, குளித்து விட்டுப் பயணம் செய்தனர் என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் இம்மாதத்தில் தீமையும் நடந்திருக்கிறது, நன்மையும் நடந்திருக்கிறது. இம்மாதத்தின் இறுதிப் புதனில் தீமையும் நடந்திருக்கிறது. நன்மையும் நடந்திருக்கிறது. தீமை மட்டுமே நடந்தது, நன்மை நடக்கவில்லை என்று எவரும் கூற முடியாது. எனவே நல்ல காரியங்கள் செய்ய ஏற்ற மாதம் அல்ல ஸஃபர், ஏற்ற நாள் அல்ல இறுதிப் புதன் என்று கொள்வதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

முந்தைய நபிமார்களின் காலத்தில் அவர்களின் போதனை களைக் கேட்காததால் சில சமூகங்கள் மீது அல்லாஹ்வின் சாபம் ஏற்பட்டு, அவற்றிற்கு வேதனைகளும், சோதனைகளும் வந்தன. அந்தச் சமூகங்களுக்கு வேதனைகளும், சோதனை களும் எந்த நாட்களில் வந்தனவோ, அந்த நாட்களைக் கெட்ட



நாள்களாகக் கருதும் வழக்கம் சில முஸ்லிம் பெண்களிடம் இருக்கிறது. அந்நாள்களைக் கெட்ட நாள்களாகக் கருதுவ தற்கோ, அந்நாள்களில் நல்ல காரியங்கள் செய்யக் கூடாது என்று எண்ணுவதற்கோ எவ்வித ஆதாரமும் இல்லை. உண்மையில் இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் கூறியது போன்று எவருக்கு பஜ்ருத் தொழுகைத் தவறி விடுகிறதோ அவருக்கு அந்த நாள் கெட்டநாள் (நஹ்ஸ்) ஆகும்.

வெள்ளிக்கிழமைகளில் பாகற்காய், அகத்திக்கீரை போன்ற கைப்பான சுவையுள்ளவற்றை சமைக்கக் கூடாது என்றும், முஹர்ரம் பத்து நாட்கள் வரை வீட்டில் மீன்கள் சமைக்கக் கூடாது என்றும், சில முஸ்லிம் பெண்கள் நம்புகின்றனர். இதற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை.

பெருநாட்கள் வெள்ளிக்கிழமைகளில் வந்துவிட்டால் முஸ்லிம்களுக்குக் கேடு என்றும், முஸ்லிம் அரசர்களுக்கு ஆபத்து என்றும், சில முஸ்லிம் பெண்கள் நம்புகின்றனர். ஹஜ்ஜின் பிரதான அம்சம் அரபா வெளியில் இருப்பது, அரபா வெளியில் சிறிதளவு நேரமாவது இராவிடில் ஒருவரின் ஹஜ் நிறைவேறாது. அவ்விதச் சிறப்புமிக்க அரபா நாள் வெள்ளிக் கிழமையில் வந்தால், அதையே ஹஜ்ஜுல் அக்பர் என்கின்றனர். அது மிகவும் மேலான ஹஜ் என்று கருதப்படுகிறது. இப்படி நல்ல காரியங்கள் வெள்ளிக்கிழமையில் நிகழ்ந்தால், அதைச் சிறப்பாகக் கருதுவதற்குத்தான் ஆதாரமிருக்கிறது. பெரு நாள்கள் வெள்ளிக்கிழமைகளில் வந்தால் தீமை வரும் என்று கருதுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

தம் பிள்ளைகளின் பிறந்த நேரத்தைக் கூறி, ஜாதகம் பார்க்கும் பழக்கமும் சில முஸ்லிம் பெண்களிடம் இருக்கிறது. ஒருவன் ஒரு பெண்ணின் ஜாதகத்தைக் கணித்து, அவளுக்கு ஏதோ தோஷம் இருக்கிறது என்று கூறிவிட்டான். அவளை எவரும் திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை. அவள்

தற்கொலை செய்து கொண்டு இறந்தாள். ஜாதகம் பார்ப்பதை அங்கீகரிப்பதற்கான ஆதாரம் எதுவும் இஸ்லாத்தில் இல்லை.

குறி கேட்கும் பழக்கமும் சில முஸ்லிம் பெண்களிடம் இருக்கிறது. ''.... ஜோஸ்யனிடம் செல்பவர் எனக்கு அருளப் பட்ட (குர்ஆனை) விட்டும் நிச்சயமாக அப்பால் சென்ற வராவார்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். இதை உணராமல் சில முஸ்லிம் பெண்கள் குறி சொல் பவர்களிடம் எளிதில் ஏமாந்து விடுகின்றனர். சமீபத்தில் நிகழ்ந்த சம்பவம் இது: ஒரு முஸ்லிம் வணிகர் வெளியூர் சென்றிருந்தார். அப்பொழுது அவர் வீட்டிற்குக் குறி சொல்பவன் ஒருவன் வந்தான். அந்த வணிகரின் உயிருக்கு விரைவில் ஆபத்து வரப்போகிறது என்று அவன் அந்த வீட்டிலிருந்த பெண்களிடம் கூறினான். அதைக் கேட்டு அவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கிப் போய், ''அதற்குப் பரிகாரம் ஏதாவது செய்ய முடியுமா?'' என்று கேட்டார்கள். ''ஏன் செய்ய முடியாது?'' என்று கேட்டு விட்டு, ''ஒரு விசேஷ பூஜை செய்ய வேண்டும்'' என்றான் அவன். அந்த பூஜையைச் செய்யும்படி வீட்டிலிருந்த பெண்கள் கூறினர். ''கொஞ்சம் வரட்டியும் தங்க நகைகளும் கொண்டு வாருங்கள்!'' என்றான் அவன். அவ்வாறே வரட்டியும், தங்க நகைகளும் கொண்டு வந்து கொடுக்கப்பட்டன. வரட்டியைப் புகைய விட்டு அவன் பூஜை செய்த போது, பெண்கள் அனைவரும் மயக்கம் போட்டு விழுந்து விட்டனார். அவர்கள் மயக்கம் தெளிந்து பார்த்தபோது அங்குக் குறிகாரனையும் காணோம், தங்க நகைகளையும் காணோம்.

உங்களிடம் வருபவர்களிடம் குறி கேட்பதும் தவறு. நீங்களே போய் குறி கேட்பதும் தவறு. முக்காலத்தையும் உணர்ந்தவன் அல்லாஹ் ஒருவன் தான். ஒருவரின் ஒட்டகை காணாமல் போய்விட்டது. அவர் அண்ணல் நபி (ஸல்) அவர் களிடம் வந்து, ''அது எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார்.



அதற்கு அவர்கள், ''எனக்குத் தெரியாது' என்று பதில் கூறினார்கள். சற்று நேரம் கழித்து அவர்கள் ஒரு தோட்டத்தைக் குறிப்பிட்டு அதில் மூக்கணாங்கயிறு மாட்டிக் கொண்டதால் நின்று கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைக் கேட்டு அவர், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சற்று நேரத்திற்கு முன் தெரியாது என்று கூறினீர்கள். இப்பொழுது இன்ன தோட்டத்தில் மூக்கணாங்கயிறு மாட்டிக் கொண்டதால் நின்று கொண்டிருக்கிறது என்று சொல்கிறீர்களே'' என்று கேட்டார். அதற்கு அவர்கள், ''அப்பொழுது அல்லாஹ் அதை எனக்குக் காட்டவில்லை. இப்பொழுது அதை அவன் எனக்குக் காட்டினான்'' என்று கூறினார்கள். இப்படி அல்லாஹ்வின் தூதர் அவர்களே இருக்கும் போது உங்களிடம் சில காசுகளை எதிர்பார்க்கும் ஒருவருக்கு எதிர்காலம் தெரியும் என்று எப்படி நம்புகிறீர்கள்? எச்சரிக்கையாயிருங்கள்! நீங்கள் தொழுத நாற்பது நாள் தொழுகை பாழாகி விடும். ''குறி (சோதிடம்) சொல்பவனிடம் சென்று ஒரு விஷயத்தைக் (குறித்துக்) கேட்பவரின் நாற்பது நாள் தொழுகை அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்படுவதில்லை'' என்று அண்ணல்நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றனர்.

சில முஸ்லிம் பெண்களிடம் சகுனம் பார்க்கும் பழக்கம் இருக்கிறது. அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னித்து விடுவான். ஆனால், தனக்கு இணை வைப்பதை மட்டும் மன்னிக்க மாட்டான். இணை வைப்பதற்கு இணையான பாவம் ஒன்று உண்டு. அது எது தெரியுமா? அதுதான் சகுனம் பார்ப்பது. ''மேலும் சகுனம் பார்ப்பது இணை வைப்பதாகும்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றனர்.

ஃபால் பார்ப்பதில் தவறில்லை. ஏனெனில், அதனை அண்ணல் நபி (ஸல்) அவர்களே பார்த்திருக்கின்றனர், ''ஆனால் ஃபால் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தி விடுகின்றது'' என்று அவர்கள் கூறினர். அதைக் கேட்டுத் தோழர்கள், ''ஃபால்

என்றால் என்ன?'' என்று வினவினார்கள். அதற்கு அவர்கள், ''நற்சொல்'' என்று பதில் கூறினர்.

அழகிய பொருளுடைய சொற்களைக் கேட்கும் போதும், பெயர்களைக் கேட்கும் போதும் அவர்கள் அதிகம் மகிழ் வார்கள். ஒருவரை ஜகாத் வசூலிப்பதற்காக அனுப்பும் போது, அவர்கள் அவரின் பெயரைக் கேட்பார்கள். அவரின் பெயர் நல்ல பொருள் உள்ளதாக இருப்பின் அவர்கள் மகிழ்வார்கள். உதாரணம்! ராஷித். ராஷித் என்றால் நேர்வழியில் செல்பவர் என்று பொருள்.

இராசி பார்ப்பதும் சகுனம் பார்ப்பது போன்றது தான். இதுவும் சில முஸ்லிம் பெண்களிடம் இருக்கிறது. முதல் பிறையைப் பார்த்ததும் சில பெண்கள், தமக்கு வேண்டியவரைத் தம்மிடம் அழைத்தோ, அவர் இருக்குமிடத்திற்குத் தாமே குனிந்து கொண்டு சென்றோ அவர் முகத்தில் தான் விழிப் பார்கள். அப்படி விழித்தால் தான் அம்மாதம் முழுவதும் நன்மையாயிருக்கும் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு. இதற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை. புது மாதம் பிறந்து விட்டது என்பதன் அடையாளமாகும் முதல் பிறை. அதைக் கண்டதும் அம்மாதத்தில் தமக்கு நன்மைகள் ஏற்பட வேண்டும் என்று இரு கையேந்தி அல்லாஹ்விடம் இறைஞ்சலாம்.

ஒரு காரியத்தை இன்னாரைக் கொண்டு செய்தால் தான் இராசி, இன்னாரைக் கொண்டு செய்தால் இராசி இல்லை என்றும் நம்பும் பழக்கமும் சில பெண்களிடம் இருக்கிறது. ஒருவரைக் கொண்டு ஒரு காரியம் செய்து, அதில் நன்மை ஏற்பட்டு விட்டால், அவரைக் கொண்டு செய்வது தான் இராசி என்று அவர்கள் நம்புகின்றனர். ஒருவரைக் கொண்டு ஒரு காரியம் செய்து, அதில் பாதகம் ஏற்பட்டு விட்டால், அவரைக் கொண்டு செய்வது இராசி இல்லை என்று அவர்கள் தீர்மானித்து விடுகின்றனர். திருமணம் போன்ற நல்ல காரியம் நடக்கும் சமயங்களில், இம்மாதிரி இராசி பார்ப்பது அதிகம்



நிகழுகிறது. நன்மையும், தீமையும் அல்லாஹ்வால் வருபவை என்று எண்ணாமல், ஒருவரைக் கொண்டு நன்மை விளையும் என்றும், ஒருவரைக் கொண்டு தீமை ஏற்படும் என்றும் நம்புவது ஈமானைப் பாதிக்கும் செயலாகும்.

சில பெண்கள், குழந்தைகள் இறந்த வீட்டிற்குத் தாமும் போவதில்லை, தம் குழந்தைகளையும் போக விடுவதில்லை. குழந்தையை இழந்த பெண்ணின் தோஷம், தங்களையும் பற்றிக் கொள்ளும், தங்கள் குழந்தைகளையும் ஒட்டிக் கொள்ளும் என்று அவர்கள் நம்புகின்றனர். இறப்பு நிகழ்ந்த வீட்டிற்கு அவசியம் போக வேண்டும், இழப்படைந்தவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டும் என்பது இஸ்லாமிய விதி. அதிலும் குழந்தை இறந்த வீட்டிற்குப் போவதும், குழந்தையை இழந்த தாய்க்கு ஆறுதல் கூறுவதும், அவசியம் செய்ய வேண்டிய அரிய காரியமாகும்.

குழந்தையை இழந்த பெண்ணின் நிழல் குழந்தைகள் உள்ள பெண்கள் மேல் விழக்கூடாது என்றும், அவர்கள் முகத்தில் குழந்தைகள் உள்ள பெண்கள் விழிக்கக் கூடாது என்றும், அப்படி நிழல்பட்டு விட்டாலோ, முகத்தில் விழிக்கப்பட்டு விட்டாலோ தீமை ஏற்படும் என்றும் சில முஸ்லிம் பெண்கள் நம்புகின்றனர். உலகில் இறப்பு எங்குதான் ஏற்படவில்லை. அதிலும் குழந்தை இறப்பு கீழை நாடுகளில் மிகவும் அதிகம். இறப்பைக் காரணமாக வைத்து, குழந்தைகளைப் பறிகொடுத்த தாய்மார்களை இப்படிப் பழிப்பது பாவமில்லையா?

குழந்தைகள் இல்லாத பெண் நல்ல காரியங்களுக்கு வரக்கூடாது என்றும் அப்படி வந்தாலும், நல்ல காரியங்கள் நடக்கும் போது முன் நிற்கக் கூடாது என்றும், சில முஸ்லிம் பெண்கள் நம்புகின்றனர். ஒருவருக்குக் குழந்தை கொடுப்பதும், கொடாததும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பொறுத்தது. குழந்தை பெற்றவர்கள் எல்லாம் அல்லாஹ்வின் அருள்

பெற்றவர்கள் என்றும், குழந்தை பெறாதவர்கள் எல்லாம் அல்லாஹ்வின் அருள் பெறாதவர்கள் என்றும் எண்ண வேண்டாம்! அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்பிற்குரிய மனைவி ஆயிஷா (ரலி) அவர்களே குழந்தை பெறாதவர்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவியரில் கதீஜா (ரலி) அவர்களும், மாரியா கிப்தியா (ரலி) அவர்களும் தவிர, மற்ற மனைவியர்கள் அனைவரும் குழந்தை பெறாதவர்கள். இவர்களெல்லாம் அல்லாஹ்வின் அருள் பெறாதவர்களா? இவர்களெல்லாம் நல்ல காரியங்கள் நடக்கக் கூடிய இடங்களுக்கு வரக்கூடாதவர்களா? இதையெல்லாம் எண்ணிப் பாருங்கள். எண்ணிப் பார்த்து இவ்விதப் பாதக எண்ணம் உங்கள் உள்ளங்களில் ஏற்பட்டு விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

குழந்தைகளைப் பறிகொடுத்தவர்களை பாக்கியம் இழந்தவர்கள் என்று சில முஸ்லிம் பெண்கள் நம்புகின்றனர். இவ்வுலகம் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் பாக்கியம் இழந்தவர்களாய் இருக்கலாம். அவ்வுலகம் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் எத்துணை பெரிய பாக்கியசாலிகள் தெரியுமா? உங்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களே பதில் கூறுகிறார்கள், கேட்டுக் கொள்ளுங்கள்! ''உங்களில் எவர் தம் சந்ததிகளில் மூன்று குழந்தைகளை முன்னதாக அனுப்பிக் கொடுத்து விட்டாரோ, அவருக்கு அவை நரகத்தை விட்டும் திரையாகி விடும் (காப்பாற்றும்)'' இரண்டு குழந்தைகளை, ஒரு குழந்தையை இப்படி அனுப்பிக் கொடுத்த தாய்மார்களுக்கும் இந்த நன்மை உண்டு'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உறுதி அளிக்கின்றனர்.

மறுமையில் இந்தக் குழந்தைகளைப் பார்த்து அல்லாஹ் சுவர்க்கத்திற்குப் போகும்படிக் கூறுவான் என்றும், ஆனால் அவர்கள், ''எங்கள் தாய் தந்தையுடன் தான் போவோம்'' என்று அழுவார்கள் என்றும், ''இவர்களின் தாய் தந்தையர்கள்



எங்கே?'' என்று அல்லாஹ் கேட்பான் என்றும், ''நரகில் இருக்கின்றனர்'' என்று அமரர் கூறுவார்கள் என்றும், ''இவர்களின் தாய் தந்தையர்களையும் சுவர்க்கத்திற்கு அனுப்புங்கள்!'' என்று அல்லாஹ் ஆணையிடுவான் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தக் குழந்தைகள் மஹ்ஷர் மைதானத்தில் தாங்க முடியாத தாகவிடாயால் தவிக்கும் தம் பெற்றோர்களுக்குத் தண்ணீர் வழங்குவர் என்றும் கூறப்படுகிறது. ஒருவர் கனவு ஒன்று கண்டார். அவர் மஹ்ஷர் மைதானத்தில் நின்று கொண்டிருக்கிறார். தாங்க முடியாத தாகவிடாய் அவரை வாட்டி வதைக்கிறது. அப்பொழுது அங்குச் சில குழந்தைகள் பாத்திரங்களில் தண்ணீர் கொண்டு வருகின்றனர். அவர்களில் ஒரு குழந்தையைப் பார்த்து அவர் தமக்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும் என்று கேட்கிறார். ஆனால் அந்தக் குழந்தை அவருக்குத் தண்ணீர் கொடுக்க மறுக்கிறது: ''என் பெற்றோருக்கு'' என்று அது கூறுகிறது. இந்தக் கனவைக் கண்டதும் திருமணம் செய்வதில்லை என்னும் தீர்மானத்துடன் இருந்த அவர், திருமணம் முடிக்கவும் வேண்டும், ஒரு குழந்தையாவது இறைவனுக்குக் கொடுக்கவும் வேண்டும் என்று முடிவு செய்கிறார்.

இந்தக் குழந்தைகள் மறுமையில் தம் பெற்றோர்களுக்காக இறைவனிடம் பரிந்துரைப்பர் என்றும் சொல்லப்படுகிறது. ஒரு பராஅத் இரவு, ஒருவர் கனவு ஒன்று கண்டார். மஹ்ஷர் மைதானத்தில் மக்கள் எல்லாம் திரண்டு நிற்கிறார்கள். அப்பொழுது அவரைக் கரும்பாம்பு ஒன்று துரத்தத் தொடங்குகிறது. அவர் வெருண்டோடுகிறார். அந்தக் கரும்பாம்பு அவரை விடாது விரட்டுகிறது. அவர் நரகத்தின் விளிம்பிற்கே வந்து விடுகிறார். அப்பொழுது வெண்ணாடை புனைந்த நல்லவர் ஒருவர் தோன்றி, ஒரு மலையைச் சுட்டிக் காட்டி, ''அங்கு செல்! ஆங்கே முஸ்லிம்களின் அடைக்கலப் பொருள்கள் உள்ளன. அவற்றின் மூலம் உனக்கு அடைக்கலம் கிடைக்கலாம்'' என்கிறார்.

அவர் அம்மலையை நோக்கி ஓடுகிறார். அதில் இரண்டு வாயில்கள் இருக்கின்றன. அவற்றில் திரைகள் தொங்க விடப்பட்டிருக்கின்றன. அவர் அதனை அடைகிறார். ''திரையை அகற்றுங்கள்! இந்த ஏழைகளுக்கு இங்கு அபயம் இருக்கக் கூடும்'' என்று கூறப்படுகிறது.

உடனே திரைகள் விலகுகின்றன. அங்கிருந்து ஒளி வண்ண ஓவியம் போன்ற குழந்தைகள் வெளி வருகின்றனர். அந்தக் குழந்தைகளில் ஒன்று சரேல் எனப் பாய்ந்து, இடக்கரத்தால் அவரை அணைத்துக் கொண்டு வலக்கரத்தால் ஓர் எறியீட்டியைக் கரும்பாம்பின் மீது வீசுகிறது. கரும்பாம்பு அங்கிருந்தும் வெருண்டோடுகிறது.

அதன்பின் அந்தக் குழந்தை அவர் மடிமீது அமர்ந்து, ''அப்பா!'' என்று அழைக்கிறது. அவர் அதனை விழிகளை விரித்துப் பார்க்கிறார். அது அவர் ஈன்றெடுத்த அன்பு மகளாக இருக்கிறது. ''நாங்கள் இங்கு உங்களை எதிர்பார்த்துக் கொண் டுள்ளோம். நீங்கள் எங்களிடம் வரும்போது உங்களுக்காக நாங்கள் இறைவனிடம் பரிந்துரைப்போம்!'' என்று அது கூறுகிறது.

குழந்தை இறந்துவிட்டால் தாயைப் பழிக்கும் முஸ்லிம் பெண்கள், தாயோ, தந்தையோ இறந்து விட்டால் குழந்தையைப் பழிக்கின்றனர். ''தாயை விழுங்கிய குழந்தை, தந்தையை விழுங்கிய குழந்தை'' என்று அந்தக் குழந்தைகள் பழிக்கப் படுகின்றனர். அவர்கள் ஒரு கணம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையை நினைத்துப் பார்த்தால், இப்படிப் பழித்ததற்காக வெட்கித் தலைகுனிவார்கள் என்பதில் ஐய மில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிறக்குமுன்பே தம் தந்தையை இழந்தவர்கள். பிறந்து ஆறாவது வயதிலேயே தம் தாயை இழந்தவர்கள்.

பிறக்கும் குழந்தைகளில் இத்தனையாவது குழந்தை ஆணாக இருந்தால் நன்மை. இத்தனையாவது குழந்தை



பெண்ணாக இருந்தால் தீமை என்றும், சில முஸ்லிம் பெண்கள் நம்புகின்றனர். 'நாம் இத்தனையாவது குழந்தை, நாம் 'அதிர்ஷ்டசாலி' என்று ஒரு குழந்தையை எண்ண வைப்பது அதன் மனத்தில் கர்வத்தை ஏற்படுத்தும். 'நாம் இத்தனையாவது குழந்தை. நமக்கு அதிருஷ்டம் கிடையாது' என்று ஒரு குழந்தையை எண்ணச் செய்வதும், அதன் மனத்தில் தாழ்வு மனப்பான்மையை உண்டு பண்ணும். இரண்டும் குழந்தைக்குத் தீமை பயப்பவை. மேலும் இவ்விதம் நம்புவதற்கும் எவ்வித ஆதாரமும் கிடையாது.

இரவில் தானமோ, தண்ணீரோ கொடுக்கக் கூடாது என்றும் சில முஸ்லிம் பெண்கள் நம்புகின்றனர். தானம் கொடுப்பது சிறந்த செயல். அதிலும் தண்ணீர் தானம் செய்வது மிகவும் சிறந்த செயல். அதை இரவில் செய்தால் என்ன, பகலில் செய்தால் என்ன? தேவை ஏற்படும் போது நம்மிடம் தானம் கேட்டு வருகின்றனர். தாகம் ஏற்படும் போது தான் நம்மிடம் தண்ணீர் கேட்டு வருகின்றனர். தேவை ஏற்படும் போது தானம் கொடாதது, தாகம் ஏற்படும் போது தண்ணீர் கொடாதது, எவ்விதம் அல்லாஹ்வுக்கு உகந்த செயலாக இருக்க முடியும்? இப்படி இரவில் கொடுத்தால், உங்கள் வீட்டு 'பரக்கத்' அடுத்த வீட்டிற்குப் போய்விடும் என்று நம்பு கிறீர்களே, அதற்கு ஆதாரம் எங்கே? இப்படிக் கொடுப்பதால் உங்கள் 'பரக்கத்' கூடுமே ஒழிய, ஒருபோதும் குறையாது என்பதை மனத்தில் வையுங்கள்!

உறவினர்கள் வீட்டிலிருந்து தின்பொருள்கள் வந்தால், அவை வந்த பாத்திரத்தைக் கழுவிக் கொடுக்கக் கூடாது என்றும் அப்படிக் கழுவிக் கொடுத்தால் உறவு முறிந்து விடும் என்றும், சில முஸ்லிம் பெண்கள் நம்புகின்றனர். இதற்கும் எவ்வித ஆதாரமும் கிடையாது.

தொழுது முடித்ததும் தொழுகை விரிப்பை மடக்கிவிட வேண்டும். இல்லையேல் அதில் நின்று ஷைத்தான்

தொழுவான் என்றும் சில முஸ்லிம் பெண்கள் நம்புகின்றனர். எதையும், அதன் வேலை முடிந்ததும் மூடிவிடுவதும், மடக்கி விடுவதும் நல்ல பழக்கமாகும். ஆனால் அதில் ஷைத்தானை சம்பந்தப்படுத்த எவ்வித ஆதாரமும் இல்லை.

அனுமதிக்கப்பட்ட பறவைகளை, பிராணிகளை பெண்கள் அறுக்கக் கூடாது என்று சில முஸ்லிம் பெண்கள் எண்ணுகின்றனர். வாழ்வரசிகளான பெண்கள், உயிரைக் கொல்லும் அந்தக் காரியத்தை விரும்பாவிடில் செய்ய வேண்டியதில்லை. ஆனால் அதனை அவர்கள் செய்யக்கூடாது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

அம்மை, பேதி ஒருவருக்குக் கண்டிருந்தால், அவ்வீட்டில் உள்ளோர் தொழக்கூடாது என்றும், திருக்குர்ஆன் ஓதக் கூடாது என்றும், சில முஸ்லிம் பெண்கள் எண்ணுகின்றனர். மேலை நாட்டார் அவற்றை நோய்களாகவே கொண்டு அவற்றைத் தம் நாடுகளை விட்டும் அடியோடு அகற்றி விட்டனர். அவர்கள் இதை மருத்துவத்தின் மூலமே சாதித்திருக்கின்றனர்.

இதுவரை கூறிய மூடத்தனமான நம்பிக்கைகளும் உங்களிடம் இருக்கக் கூடாது. இனிக் கூறப்போகும் அறிவீனமான பழக்கங்களும் உங்களிடம் இருக்கலாகாது. நேர்ச்சை செய்து கொள்ளும் பழக்கம் உங்களில் பலரிடம் இருக்கிறது. நேர்ச்சை என்பது, ஒருவர் தாமாகவே தம் மீது விதித்துக் கொள்ளும் கடனாகும். நன்மை விளைய வேண்டும் என்றோ, தீமை விலக வேண்டும் என்றோ வேண்டிக் கொண்டு, அவ்விதம் நடந்தால், இன்னது செய்கிறேன் என்று எடுத்துக் கொள்ளும் பிரமாணமாகும் அது. அவ்விதம் நேர்ச்சை செய்து,அவ்விதமே நடந்து விட்டால், நேர்ச்சையை நிறைவேற்ற வேண்டும். நேர்ச்சையை நிறைவேற்ற முடியாமல் போனால் அதற்கு ஈடு செய்ய வேண்டும்.

அல்லாஹ்வுக்காக அதிகப்படியான தொழுகைகளைத் தொழுவதாகவோ, அல்லாஹ்வுக்காக அதிகப்படியான



நோன்புகளை நோற்பதாகவோ, தானதர்மம் செய்வதாகவோ, நேர்ச்சை செய்வதுண்டு. ஆனால், சிலர் மார்க்கத்திற்கு முரணான நேர்ச்சைகளைச் செய்து விடுகின்றனர். அதற்குக்காரணம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளவற்றை அவர்கள் அறியாததேயாகும். ''பாவமான செயலில் நேர்ச்சை செய்யக் கூடாது. மனிதனின் கைவசத்தில் இல்லாததிலும் நேர்ச்சை செய்யக் கூடாது'' என்றும், ''பாவத்திலும், ஆதமின் மகன் உரிமை பெறாத வஸ்துவிலும் எந்த நேர்ச்சையும் இல்லை'' என்றும், ''அல்லாஹ்வுக்குப் பொருத்தமற்ற செயலை நேர்ச்சை செய்வது நேர்ச்சை ஆகாது. உறவினர்களிடம் உறவைத் துண்டித்துக் கொள்ளச் செய்யும் சத்தியம், சத்தியமாக மாட்டாது'' என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளனர்.

''அறியாமையின் காரணமாகத் தவறான நேர்ச்சைகள் செய்து விட்டால், என் செய்வது!'' என்று நீங்கள் கேட்கலாம். மார்க்க நெறிக்கு ஏற்ப அதிகப்படியான (நஃபில்) தொழுகை, நோன்பு, ஹஜ், தானதர்மம் போன்றவை செய்ய நேர்ச்சை செய்யின், அவற்றை அவசியம் நிறைவேற்ற வேண்டும். மார்க்க நெறிக்கு மாற்றமான காரியங்கள் செய்வதாக, அறியாமையின் காரணமாக நேர்ச்சை செய்திருப்பின் அவற்றை நிறைவேற்ற வேண்டியதில்லை. ''எவர் அல்லாஹ்வுக்கு வழிப்படுவதாக நேர்ச்சை செய்கிறாரோ, அவர் அவனுக்கு வழிப்படலாம். அன்றி, எவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்வதாக நேர்ச்சை செய்கிறாரோ, அவர் அவனுக்கு மாறு செய்ய வேண்டாம்!'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றனர்.

ஒரு பெண் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ்வுக்காக என் குழந்தையைப் பலியிடுவதாக நேர்ச்சை செய்துள்ளேன்'' என்று கூறினாள். அதைக் கேட்டு அவர்கள் அல்லாஹ்வின் பெயரால் நேர்ச்சை

செய்வதற்கு வேறு எதனையும் தானம் செய்யும்படியும், குழந்தையைப் பலியிட வேண்டாம்'' என்றும் கூறினர்.

பிரசவ சமயத்தில் பெண்களுக்கு உடல் குளிர்ந்து விடும் அபாயம் உண்டு . அப்பொழுது அவர்களின் உடலில் சூடேற்ற வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு மது கொடுக்கும் வழக்கம் சில இடங்களில் இருக்கிறது. மதுவைக் கொடுப் பவர்களும், மதுவைக் குடிப்பவர்களும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்த அறிவுரையை மனத்தில் கொள்ள வேண்டும். ''இறைவன் நோயையும், மருந்தையும், நிச்சயமாக இறக்கி ஒவ்வொரு நோய்க்கும் ஒரு மருந்தை உண்டு பண்ணியுள்ளான். எனவே ஹராமானவற்றைக் கொண்டு மருத்துவம் செய்யாதீர்கள்!''

இறப்பு நிகழ்ந்த வீடுகளில் ஒப்பாரி வைத்து அழும் பழக்கமும் சில முஸ்லிம் பெண்களிடம் இருக்கிறது. இறந் தவர்களுக்காக மௌனமாகக் கண்ணீர் விடத்தான் அனுமதி இருக்கிறது. ஓலமிடவோ, ஒப்பாரி வைக்கவோ அனுமதி இல்லை. ''(துன்பத்தின் போது) எவர் கன்னத்திலும், வாயிலும் அடித்துக் கொண்டு சட்டையையும் கிழித்துக் கொண்டு, அறியாமைக் காலத்திய சொற்றொடர்களைக் கூறுகிறாரோ, அவர் நம்மில் உள்ளவர் அல்லர்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

இருக்கும் போது குறைத்துப் பேசுவதும், இறந்த போது உயர்த்திப் பேசுவதும் மனித இயல்பு. இறந்த போது ஒருவரை அவர் அவ்விதம் இருந்தாலும்,இல்லாவிட்டாலும், அதிகம் புகழ்ந்து அழுது அரற்றுவது தவறு. இதைத்தான் கீழ்வரும் சம்பவம் உணர்த்துகிறது. அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (ரலி) அவர்களுக்கு (நோயின் காரணமாக) மயக்கம் ஏற்பட்ட பொழுது, அவர்களின் சகோதரி அம்ரா என்பவர், ' என் மலையே!' என்பது போன்ற சொற்றொடர்களால் அவர்களை வர்ணிக்கத் தொடங்கினார். பின்னர் அவர்களுக்கு மயக்கம் தெளிந்த போது, ''இறைவன் மீது ஆணையாக, நீர் கூறிய ஒவ்வொன்றைப் பற்றியும், 'நீர் இவ்விதமாகவா இருந்தீர்?' என்று (என்னிடம்) கேட்கப்பட்டது'' என்று தம் சகோதரியிடம் அவர்கள் கூறினர். எனவே, அவர்கள் இறந்தபோது அவர்களின் சகோதரி அழவில்லை.



ஒரு பெண்மணி தாம் பெற்ற பிள்ளை இறந்த போது எப்படி நடந்து கொண்டார் தெரியுமா? குழந்தை இறக்கும் போது, அதன் தந்தை வீட்டில் இல்லை, அந்தப் பெண்மணி குழந்தையை மறைத்து வைத்தார். குழந்தையின் தந்தை வந்ததும், அவருக்கு உணவு பரிமாறினார். அவர் தம் வீட்டில் நிகழ்ந்த அவலத்தை அறியாமல் அமைதியாக உணவு உண்டார். அவர் உணவு உண்டு முடிந்ததும், அந்தப் பெண்மணி அவரைப் பார்த்து, ''நம் பக்கத்து வீட்டுக்காரர்கள் விசித்திரமான வர்களாய்த் தோன்றுகிறார்களே' என்று சொன்னார். ''என்ன விஷயம்?' என்று அவர் கேட்டார். ''அவர்கள் என்னிடம் தற்காலிகமாக ஒரு பொருளை வாங்கினார்கள், அதனை நான் திருப்பிக் கேட்டால், கொடுக்கத் தயங்குகிறார்கள். அதை நான் எடுத்துக் கொண்டு வந்தால் கூச்சல் போடுகிறார்கள்'' என்று அந்தப் பெண்மணி கூறினார். அதைக் கேட்டு அவர், ''பக்கத்து வீட்டுக்காரர் செய்வது பெரும் பிழை. திருப்பிக் கொடுக்க வேண்டிய பொருளைத் திருப்பிக் கொடுப்பதில் ஏன் தாமதிக்கவோ, கோபிக்கவோ, கூச்சலிடவோ வேண்டும்?' என்று கூறினார். உடனே அந்தப் பெண்மணி தங்கள் குழந்தை இறந்து விட்ட செய்தியை அவரிடம் கூறி, ''இந்தச் சிறு குழந்தையும், இறைவன் நம்மிடம் அடைக்கலமாகக் கொடுத்து இருந்ததுதான். அதனை நம்மிடமிருந்து பெற்றுக் கொண்டால், அதற்காக நாம் புலம்பக்கூடாது'' என்றார். இப்படிச் சொன்னவர் யார் தெரியுமா? அபூதல்ஹா அவர்களின் மனைவி உம்முசுலைம் அவர்கள் தாம்.

சுப்யான் அத்தவ்ரி (ரஹ்) அவர்கள் இறந்ததும், அவர்களை ஒருவர் கனவில் கண்டார். அவர்களிடம் அவர், ''எந்தச் செயல் தங்களுக்கு அவ்வுலகில் பயன் அளித்தது?'' என்று கேட்டார். அதற்கு சுப்யான் அத்தவ்ரி (ரஹ்) அவர்கள் அளித்த பதில் இதுவாகும்: ''எல்லாச் செயல்களும் எனக்குப் பயன் அளிக்கத்தான் செய்தன. எனினும் என் அன்புக் குழந்தை ஒன்று இறந்த பொழுது நான், 'இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்' என்று கூறிப் பொறுமையை மேற் கொண்டு இறைவனைப் புகழ்ந்தேன். அல்லாஹ் எனக்கு அதனை நினைவுபடுத்தி, அதற்காக என் பதவியை உயர்த்தியதாகக் கூறினான்.''

எனவே முஸ்லிம் பெண்களாகிய உங்களிடம் ஈமான் என்னும் இறைநம்பிக்கையைப் பாதிக்கக் கூடிய நம்பிக் கைகளும் இருக்கக் கூடாது, பழக்கங்களும் இருக்கக் கூடாது. உங்களிடம் நல்ல நம்பிக்கைகளும், நல்ல பழக்கங்களும் இருக்க வேண்டும். நீங்கள் தொழுகையைப் பேணுபவர்களாய் இருக்க வேண்டும். ஆண்களுக்கு இருப்பது போல் உங்களுக்கு அதிக வேலையுமில்லை. வெளியில் வேலையுமில்லை. எனவே ஐவேளைத் தொழுகைகளையும் 'வக்து' தவறாமல் தொழுவதை நீங்கள் வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து என்ன கேட்டார் என்று உங்களுக்குத் தெரியுமா? ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னைச் சுவனபதிக்குக் கொண்டு செல்லும் படியான ஒரு செயலை எனக்கு அறிவியுங்கள்! நான் அதனைச் செய்து வருகிறேன்' என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் எதுவும் பதில் கூறாமல் வீற்றிருந்தார்கள். பின்னரும் நான் அவ்விதமே கேட்டேன். அப்பொழுதும் அவர்கள் அவ்வாறே இருந்தார்க்ள. மீண்டும் நான் மூன்றாவது முறையாக அவ்வாறே கேட்டேன். அதற்கு அவர்கள், 'அதிகமாகத் தொழுது சிரம் பணிவதை உம்மீது கடமையாக்கிக் கொள்ளும்' என்றும், 'அல்லாஹ்வுக்கு ஒரு சஜ்தா செய்வீரானால், அதன் காரணமாக உம்மை விட்டும் ஒரு பாவத்தை (அல்லாஹ்) அழித்து விடுவான்' என்றும் அறிவித்தனர்.'' இதிலிருந்து நீங்கள் தொழுகையின் உயர்வை ஓரளவாவது உணர்ந்து கொள்ளலாம்.



எதனையும் முறையாகச் செய்ய வேண்டியது அவசியம். அதிலும் வணக்கங்களை முறையாகச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். தொழுகையின் தலை வாயில் உளூவாகும். உளூவை நீங்கள் ஒழுங்காகச் செய்யாவிட்டால், உங்கள் தொழுகை நிறைவேறாமல் போகலாம். நீங்கள் பலகாரம், பட்சணம் செய்திருப்பீர்கள். உங்களின் கைவிரல் இடுக்குகளில், நகங்களில் மாவு ஒட்டிக் கொண்டிருக்கும். அதனை நன்கு கழுவாமல் உளூச் செய்தால், அந்த உளூ ஒழுங்கான உளூவாக இராது. நீங்கள் நகப்பாலீஷ் போட்டுக் கொள்கிறீர்கள். அது நகங்களில் நன்கு படிந்து கொள்கிறது. அதை அகற்றாமல் உளூச் செய்தால் அந்த உளூவும் முறையான உளூவாக ஆகாது. நீங்கள் இறுக்கமாக மோதிரம் அல்லது காப்பு, மிஞ்சி அணிந் திருக்கிறீர்கள். அவற்றிற்கு இடையிலும் தண்ணீர் செலுத்தி உளூச் செய்யாவிடில் உங்கள் உளூ ஒழுங்கான உளூவாக அமையாது. ''ஏன் அப்படி?'' என்று நீங்கள் கேட்கலாம். உளூச் செய்யும் போது நீங்கள் கழுவும் உடலின் பாகங்களில் நீர் பட வேண்டும்; மாவு படிந்திருந்தாலோ, பாலிஷ் பட்டிருந்தாலோ, மோதிரம், காப்பு, மிஞ்சி ஆகியவை இறுக்கமாக இருந்து கொண்டிருந்தாலோ, நீர் புகமுடியாதல்லவா? உளூச் செய்யப்படும் போது கழுவப்படும் உடலின் பகுதியில், ஒரு சிறிதளவு இடத்திலும் கூட நீர் படாமல் இருந்தால் உளூ நிறைவேறாது.

நீங்கள் முறையாக உளூச் செய்து, முறையாகத் தொழுப வர்களாய் இருக்க வேண்டும். வணக்கத்திற்கு ஆபத்து, விட்டு விட்டுச் செய்வதாகும். இதை உணராமல் சில பெண்கள் ஒரு 'வக்து' தொழுவார்கள், மற்ற 'வக்து'களை விட்டு விடுவார்கள்.

சில பெண்கள், சில நாள்கள் தொழுவார்கள். பல நாள்கள் விட்டு விடுவார்கள். இப்படி நீங்கள் விட்டு விட்டுத் தொழக் கூடாது. ''அசுத்தமாயிருக்கும் நாட்களில் நாங்கள் என்ன செய்வது?'' என்று நீங்கள் கேட்கலாம். பெண்களுக்கு மாதா மாதம், ஒரு குறிப்பிட்ட நாள்களில், ஒரு குறிப்பிட்ட நாள்கள் வரை உதிரப்போக்கு ஏற்படும். அது 'ஹைலு' எனப்படும். பெண்கள் பிரசவித்த பின் அவர்களுக்கு உதிரக் கசிவு ஏற்படும். அது 'நிபாஸ்' எனப்படும். ஹைலோ, நிபாஸோ இருக்கும் நாள்களில் நீங்கள் தொழ வேண்டியதில்லை. நோன்பும் வைக்க வேண்டியதில்லை. அந்த நாள்களில் நீங்கள் திருக்குர்ஆனைத் தொடவும் கூடாது, ஓதவும் கூடாது. சுத்தமானவுடன் நீங்கள் தொழத் தொடங்கிவிட வேண்டும். ஆனால் விடுபட்ட தொழுகைகளைத் திரும்பத் தொழ வேண்டியதில்லை. பெண்களுக்கு நோயின் காரணமாகச் சில சமயங்களில் உதிரக் கசிவு ஏற்படும். அது 'இஸ்திஹாலா' எனப்படும். அது அசுத்தம் அன்று. அந்நாள்களில் தொழவும் செய்யலாம். நோன்பும் வைக்கலாம்.

ரமலான் மாதத்து முப்பது நோன்புகளையும் அவசியம் நீங்கள் வைக்க வேண்டும். அசுத்த நாள்கள் வந்து விட்டால், அந்நாள்களில் நோன்பு வைக்க வேண்டியதில்லை. ஆனால் விடுபட்ட அந்த நோன்புகளை அவசியம் திரும்ப வைக்க வேண்டும். ''தொழுகையில் இருக்கும் சலுகை ஏன் நோன்பில் இல்லை?' என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு ஆதாரமாக இந்தச் சம்பவம் கூறப்படுகிறது.

ஹவ்வா அவர்களுக்கு முதன் முறையாக மாதவிடாய் ஏற்பட்ட போது, அவர்கள் அதுபற்றி ஆதம்(அலை) அவர்களிடம் கேட்டார்கள். ஆதம் (அலை) அவர்கள் ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் கேட்டார்கள். அல்லாஹ், அது தன் ஏற்பாடு தான் என்றும், அந்நாள்களில் விடுபடும் தொழுகை களைப் பிறகு தொழவேண்டியதில்லை என்றும் கூறினான்.



அதன்பின் ஹவ்வா அவர்களுக்கு ரமலான் மாதத்தில் மாதவிடாய் ஏற்பட்டது. அவர்கள் அது பற்றி ஆதம்(அலை) அவர்களிடம் கேட்டார்கள். அந்நாள்களில் நோன்பு நோற்க வேண்டாம் என்றும், அந்நாள்களில் விடுபடும் நோன்புகளைப் பிறகு நோற்க வேண்டியதில்லை என்றும் ஆதம்(அலை) அவர்கள் அல்லாஹ்விடம் கேட்காமலேயே கூறிவிட்டனர். அதை அறிந்து அல்லாஹ் மாதவிடாய் நாட்களில் நோன்பு நோற்க வேண்டாம் என்றது சரிதான். ஆனால் (அந்நாள்களில்) விடுபட்ட நோன்புகளைப் பிறகு நோற்றே ஆக வேண்டும் என்று கூறினான். ''ஏன் இந்த வேறுபாடு?'' என்று ஆதம் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் கேட்டபோது, ''தொழுகை விஷயத்தில் நீர் என்னிடம் கேட்டுக் காரியம் செய்தீர். நோன்பு விஷயத்தில் உம் விருப்பப்படி செய்து கொண்டீர். அதனால் தான்'' என்றான் அல்லாஹ்

''சூலுற்ற பெண்கள் தாம் நோன்பு நோற்பதன் காரணமாகத் தம் வயிற்றில் இருக்கும் குழந்தைக்குத் தீங்கு ஏற்படும் என்று அஞ்சினால், அவர்கள் நோன்பு நோற்காமல் இருந்து விடலாம். ஆனால் அப்படி (விடப்பட்ட) ஒவ்வொன்றிற்கும் அண்ணல் நபி(ஸல்) அவர்களின் அளவுப் படியால் ஒரு படி கோதுமை (தானம்) கொடுக்க வேண்டும் என எனக்குச் செய்தி கிடைத் துள்ளது'' என்று இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கூறியிருக் கின்றனர்.

ரமலான் மாத நோன்புகளுக்கு அடுத்தபடியாக ஷஃபான் மாதத்தில் பராஅத் அன்று நோன்பு வைப்பதும், முஹர்ரம் மாதத்தில் ஒன்பது, பத்தாம் நாள்களில் நோன்பு வைப்பதும் ஏற்றமாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அடுத்தடுத்து இரண்டு மாதங்கள் நோன்பு நோற்றதை ஷஃபான் ரமலான் ஆகியவற்றில் தவிர நான் கண்டதில்லை என்று உம்முஸல்மா (ரலி) அவர்கள் கூறுகின்றனர். ''ஆஷூரா நாள் நோன்பை, இறைவன் முன் சென்ற ஓராண்டில் தீமைகளுக்குப் பரிகாரமாக

ஆக்கி விடுவான் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

அல்லாஹ் அளிக்கும் சலுகைகளைப் பயன்படுத்தவும் செய்யலாம். பயன்படுத்தாமலும் இருக்கலாம். ஆனால் கஷ்டங்களுக்கு இடையில் ஒரு நற்செயலைச் செய்தால், அதற்கு வழங்கப்படும் பலன் அதிகம். ஓர் ஆண்டு ஹஜ்ஜுச் சமயம் வெய்யில் மிகவும் கடுமையாக இருந்தது. அதனால் மக்கள் தம் தலைகள் மேல் தண்ணீரைத் தெளித்துக் கொண்டனர். அந்நிலையிலும் ஆயிஷா (ரலி) அவர்கள் நோன்பு வைத்திருந்தார்கள். அதை அறிந்து ஒருவர், ''இந்தச் சமயத்தில் தாங்கள் நோன்பு வைக்காமல் விட்டு விட்டால் நலமாயிருக்கும்'' என்று கூறினார். அதைக் கேட்டு ஆயிஷா (ரலி) அவர்கள், ''அரஃபா நாள் அன்று நோன்பு நோற்றால், அவ்வாண்டின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்' என்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூற, நான் கேட்டிருக்கிறேன். அவ்விதம் இருக்கும்போது, நான் இப்பொழுது புண்ணியமான இத்தகைய நோன்பை விட்டுவிட முடியுமா?'' என்று வினவினார்கள்.

நீங்கள் ஜகாத் கொடுப்பதிலும் அக்கறையாக இருக்க வேண்டும். பணம் செலவாகாத வணக்கங்களைச் செய்துவிட்டு, பணம் செலவாகும் வணக்கங்களைச் செய்யாதிருப்பது அல்லாஹ்வை ஏமாற்றுவதாகும். அல்லாஹ், தொழுகையையும், ஜகாத்தையும் சேர்த்துச் சேர்த்துக் கூறும் ஆயத்துகள் திருக்குர்ஆனில் பல இடங்களில் இருக்கின்றன. உங்கள் கணவரின் பொருளை ஜகாத் கொடுப்பது உங்களுக்குக் கடமை இல்லை என்றாலும், உங்களுக்கென்று சொத்துகள் இருக்கும் அல்லவா? அவற்றிற்கு ஜகாத் உண்டு. அதைக் கொடுக்க வேண்டிய கடமைகள் உங்களுக்கு இருக்கிறது. அத்துடன் உங்களிடம் தங்கம், வெள்ளி நகைகள் இருக்கும் அல்லவா? அவற்றிற்கும் ஜகாத் உண்டு. அதைக் கொடுக்க வேண்டிய கடமையும் உங்களுக்கு இருக்கிறது.



நீங்கள் தான, தர்மங்களும் தாராளமாகச் செய்ய வேண்டும். உங்கள் கணவரின் பொருளை அவரின் அனுமதியுடன் தான் செய்ய வேண்டும். உங்கள் பொருளை அவரின் இணக்கத்துடன் செய்தல் நலம்.

சில பெண்களுக்குக் கிழிந்து போன ஆடைகளை, இல்லாதவர்களுக்குக் கொடுக்கவும் மனம் வராது, மீந்துவிட்ட உணவுகளைப் பசித்தவர்களுக்குக் கொடுக்கவும் மனம் இடம் தராது. அவர்கள், மீந்துவிட்ட உணவுப் பொருளை அது கெட்டுப் போகும்வரை வைத்திருப்பார்கள். அதன்பின் அதை எடுத்து எவருக்காவது கொடுப்பார்கள். அதற்காகவே கூறப்பட்டது போல் இருக்கிறது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்த அறிவுரை: ''ஒரு பெண் தன் வீட்டில் கெட்டுப் போகாத உணவை தானம் செய்தால், அவளுக்கு அதனைத் தானம் அளித்ததற்கான பலன் உண்டு. கணவருக்கு அதனைச் சம்பாதித்ததற்கான பலன் உண்டு. பொருளாளருக்கும் இதே போன்றே (நன்மை உண்டு). இவற்றில் சிலருடைய நன்மையால் பிறருடைய நன்மை குறைந்து விடாது.''

ஹஜ்ஜையும் நீங்கள் உங்கள் கணவருடன் சேர்ந்து செய்ய விரும்ப வேண்டும், அதற்காக முயலவும் வேண்டும். இயன்றவர் செய்த வணக்கத்தை விட, இயலாதவர் செய்த வணக்கத்திற்குப் பலன் அதிகம். பெண்களாகிய நீங்கள் பலவீனர்கள். அதனால் நீங்கள் செய்யும் ஹஜ் ஆண்கள் செய்யும் ஹஜ்ஜை விட மேலானதாகும். அதற்கு ஆதாரம், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்தச் சொற்கள். ''சிறுவர்கள், முதியோர்கள், பலவீனர்கள், பெண்கள் ஆகியோரின் ஹஜ்ஜும், உம்ராவும், தாம் இறைவழியில் போர் செய்வத(ற்கு நிகர)ாகும்.''

'இதுவரை இஸ்லாம் எங்களுக்கு விதித்திருக்கும் கடமைகளைக் கூறினீர்கள். அது எங்களுக்கு வழங்கியிருக்கும் உரிமைகள் எவை? கூறுங்கள்!' என்று நீங்கள் கேட்கலாம்.

ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்து, அவர்களை சுவர்க்கத்தில் இருக்க வைத்து, அங்கு இருந்த ஒரு குறிப்பிட்ட மரத்தின் கனியை மட்டும் தின்னக் கூடாது என்று தடை விதித்திருந்தான். அந்தக் கனியைத் தின்ன ஆதம் (அலை) அவர்களைத் தூண்டியவர்கள் அவர்களின் மனைவியான ஹவ்வா அவர்கள் என்று கருதப்படுகிறது. அதனால் ஹவ்வா அவர்களே குற்றவாளி என்றும் எண்ணப்படுகிறது. ஆனால் இஸ்லாம் அப்படிக் கருதவில்லை. இருவரையும் தவறு செய்ய ஷைத்தான் தூண்டினான். இருவரும் தவறு செய்தார்கள். எனவே இருவரும் குற்றத்தில் சம பங்காளிகள் என்பதே இஸ்லாமியக் கொள்கை. இருவரும் குற்றத்தில் சம பங்காளி களாகி விட்டதால் அவர்களின் சந்ததிகள் அனைவரும் பாவம் செய்தவர்கள் என்பது இஸ்லாமியக் கொள்கை அல்ல. அல்லாஹ் இருவரையும் மன்னித்து விட்டதால் இருவரும் குற்றமற்றவர்கள் ஆகின்றனர். எனவே பிறக்கும் குழந்தைகளும் பாவமற்றவை என்பது இஸ்லாமியக் கொள்கை.

இஸ்லாம், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மூலம், அரபு அவனிக்கு வருமுன், அரபு அவனி எப்படி இருந்தது தெரியுமா? அங்குப் பெண்கள் மனிதர்களாகவே மதிக்கப் படவில்லை. அவர்கள், மனிதனுக்கும், மிருகத்திற்கும் இடைப்பட்ட ஒரு வினோதப் படைப்பு என்றே கருதப் பட்டனர். பெண்கள், ஆண்கள் உற்பத்தியாகும் அதே வித்திலிருந்து தோன்றியவர்கள் அல்லர் என்றும் நம்பப்பட்டது. ஆகவே, அவர்கள் அங்கு ஆடு, மாடுகளைப் போலவே நடத்தப் பட்டனர். பாத்திரம், பண்டங்களைப் போலவே கையாளப் பட்டனர். பொதுவாக, மனிதர்கள் என்றால் அதில் ஆண்கள் மட்டுமே அடங்குவர். பெண்கள் அடங்கமாட்டார்கள் என்று கருதப்பட்டது.

அதனால்தான் அரபிகள் பெண் குழந்தைகள் பெறுவதைப் பெரும் கேவலமாகக் கருதினார்கள். பெண் குழந்தைகள்



ஓரளவு வளர்ந்ததும், அவர்களை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று குழியைத் தோண்டி, அதில் அவர்களை இறக்கி, அவர்களைக் கதறக் கதற மண்ணைப் போட்டு மூடிக் கொல்லும் வழக்கமும் அரபிகளிடம் இருந்தது.

பெண்களை இவ்விதம் கேவலமாகக் கருதும் பழக்கம் அரபு அவனியில் மட்டும்தானா இருந்தது? இல்லை. நாகரிகம் மிகுந்த நாடுகள் எனப் போற்றப்பட்ட கிரீஸ், ரோம், எகிப்து, பாரசீம், சீனம் ஆகியவை அனைத்திலும் அந்தப் பழக்கம் இருந்தது. ரோமர்கள், பெண்களை வீட்டுப் பொருள்களில் ஒன்று என்று கருதினர். கிரேக்கர்கள் பெண்களை சாத்தான்கள் என்று எண்ணினர். பெண்களும், தங்களைக் கீழான படைப்பு என்றே நம்பிக் கொண்டிருந்தனர்.

இவ்வித நிலை இருக்கும் போதுதான், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அரபு அவனியில் தோன்றி, பெண்களைப் பெருமைப்படுத்தும் அல்லாஹ்வின் வேத வசனங்களைக் கூறினார்கள். அவர்களும் பெண்களைப் பெருமைப்படுத்திப் பேசினார்கள்.

''அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து) அவரிலிருந்து, அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து அநேக ஆண், பெண்களை (வெளிப் படுத்தி)ப், பரவச் செய்தான்.'' (4:1) என்று அல்லாஹ் தன் திருமறையில் ஓர் இடத்தில் கூறினான்.

....''உங்களில் (ஆணாகவோ, பெண்ணாகவோ இருந்த போதிலும்) ஒருவர் மற்றொருவரில் உள்ளவர் தாம்...'' (3:195) என்று அல்லாஹ் தன் திருமறையில் பிறிதோர் இடத்தில் பேசினான்.

''(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை, நீங்கள் அவர்களிடம் மன நிம்மதி பெறுவதற்காக உங்களி

லிருந்தே அவன் படைத்து, உங்களுக்கிடையில் அன்பையும், நேசத்தையும் உண்டு பண்ணியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்'' *(30:21)* என்று அல்லாஹ் தன் திருமறையில் மற்றோர் இடத்தில் அறிவித்தான்.

அல்லாஹ்வின் இந்த வேத வசனங்களுக்கு ஆதாரமாக இந்தச் சம்பவம் கூறப்படுகிறது: அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான்.. அவர்கள் சுவர்க்கத்தில் அவனை வணங்கிக் கொண்டும், வழுத்திக் கொண்டும் இருந்தார்கள். சுவர்க்கத்தில் அவர்களுக்கு எல்லாவித இன்பங்களும் இருந்தன. ஆனால் அவர்களிடம் ஒருவித ஏக்கமும் இருந்து கொண்டிருந்தது. அதுதான் தம்முடன் உறவாடத் தம்மைப் போன்ற ஒருவர் இல்லையே என்பதாகும். அல்லாஹ் இதனை அறிந்தான். ஒருநாள் ஆதம் (அலை) அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது அவர்கள் உடலின் இடப்புறமிருந்து ஓர் எலும்பை அவர்கள் அறியாமல் எடுத்தான். அவ் வெலும்பைக் கொண்டு ஹவ்வா அவர்களைப் படைத்தான். அவர்களை ஆதம் (அலை) அவர்களின் தலைப்புறம் அமர வைத்தான். ஆதம் (அலை) அவர்கள் விழித்ததும் அழகே உருவெடுத்தால் போன்ற ஆரணங்கு ஒருவர், தம் தலைப்புறம் அமர்ந்திருக்கக் கண்டார்கள். அளவற்ற வியப்பு அடைந் தார்கள். ''இறைவனே! இவர் யார்?'' என்று அவர்கள் கேட்ட போது, ''பெண்'' என்று ஒரே சொல்லில் அல்லாஹ் பதில் அளித்தான். இதனை உறுதிப்படுத்தும் விதத்தில், அண்ணல் நபி (ஸல்) அவர்களும், ''ஆணும், பெண்ணும் மனித இனத்தின் ஒரே மாதிரியான இரு பாகங்கள் ஆவர்!'' என்று கூறினர்.

பொதுவான நீதிகள் அனைத்தும் ஆண், பெண் இரு பாலாருக்கும் ஒரே மாதிரியே. ஆதலால், திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் அறிவுரைகள் ஆண்களை விளித்துக் கூறப்பட்டிருப்பது போல் தோன்றும். இதைப் பற்றி ஆயிஷா (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம், ''இறை



வசனம் இறங்கும் போதெல்லாம், ஆண்களைச் சுட்டிக்காட்டித் தானே இறங்குகிறது'' என்று கேட்டனர். அதன்பின் ஆண் களுக்கும், பெண்களுக்கும் என இருபாலாரையும் சுட்டிக் காட்டும் இந்த இறைவசனம் இறங்கியது; ''நிச்சயமாக, முஸ்லிமாகிய ஆண்களும் பெண்களும், விசுவாசியான ஆண்களும் பெண்களும், (இறைவனுக்கு) வழிப்படும் ஆண்களும் பெண்களும், உண்மையே கூறும் ஆண்களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும் பெண்களும், (அல்லாஹ்வுக்குப்) பயந்து நடக்கும் ஆண்களும் பெண்களும், தானம் செய்யும் ஆண்களும், பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும், தங்கள் கற்பைக் காத்துக் கொள்ளும் ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வை அதிகமாகத் துதி செய்யும் ஆண்களும் பெண்களும் - ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் சித்தப்படுத்தி வைத்திருக்கிறான்.'' *(33:35)* இப்படி இன்னொரு வசனமும் இறங்கியது. ''ஆகவே ஆணாயினும், பெண்ணா யினும், எவர்கள் மெய்யாகவே விசுவாசம் கொண்டு நற்கருமங்களைச் செய்கிறார்களோ அவர்கள் தாம் சுவனபதி செல்வார்கள். அவர்கள் அற்ப அளவும் அநீதி செய்யப்பட மாட்டார்கள்.'' **(4:124)**

இவ்விதம் அல்லாஹ்வும், அவன் தூதரும், ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே பேதமில்லை என்று கூறி, பெண்களுக்குப் பெருமை சேர்த்ததும், அரபு அவனியில் பெண்களின் நிலை பெரிதும் உயர்ந்தது. அதைத்தான் உமர் (ரலி) அவர்களின் இந்த உரை உணர்த்துகின்றது: ''மக்காவில் பெண்கள் மதிக்கப்படத் தக்கவர்கள் அல்லர் என்றே நாங்கள் கருதி வந்தோம். இஸ்லாம் தோன்றிய பின், பெண்கள் இனம் பற்றி திருமறை கூறத் தலைப்பட்டதும், நாங்கள் பெண் இனத்தவருக்கு மதிப்புக் கொடுக்கத் தொடங்கினோம். அவர்களின் உயர்வும், தரமும் என்னவென்று தெரிந்து கொண்டோம்.''

இஸ்லாம் வந்தபின் அரபவனியில் பெண்கள் மனித இனத்தின் அழகிய நல்ல பகுதி என்னும் கொள்கை உறுதி யாகியது. பெண் மக்களைக் காட்டிலும், ஆண் மக்களை உயர் வாகக் கருதும் பெற்றோர், சுவனம் இழப்பர் என்று எச்சரிக் கப்பட்டனர். ஆண்களுக்கு இருப்பவை போன்றே பெண் களுக்கும் உரிமைகள் இருக்கின்றன என்று பிரகடனப் படுத்தப்பட்டது.

திருமண விஷயத்திலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான உரிமைகளை இஸ்லாம் வழங்கியது. ''மணமகன் மணமகளையும், மணமகள் மணமகனையும் திருமணத்திற்கு முன் ஒருமுறை பார்த்துக் கொள்ளலாம்'' என்று இமாமுல் அஃலம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றனர்.

ஆணும் தான் விரும்பாத பெண்ணை மணக்க வேண்டி யதில்லை. பெண்ணும் தான் விரும்பாத ஆணை மணக்க வேண்டியதில்லை. திருமணத்தின் போது மணப்பெண்ணின் சம்மதம் இரு சாட்சிகள் முன்னிலையில் வைத்துப் பெறப்பட்டாக வேண்டும். பெண் சம்மதம் தெரிவிக்கா விட்டால், அந்தத் திருமணத்தை நடத்தவே முடியாது.

இஸ்லாத்தில் தனக்குப் பிடிக்காத மனைவியை மணவிலக்குச் செய்ய ஆணுக்கும் உரிமை இருக்கிறது. தனக்குப் பிடிக்காத கணவனை மணவிலக்குச் செய்யப் பெண்ணுக்கும் உரிமை இருக்கிறது.

மனைவி இறந்து விட்டால், கணவன் மறுமணம் செய்து கொள்ளும் உரிமையை இஸ்லாம் வழங்குகிறது. அதே சமயம் கணவன் இறந்து விட்டால் மனைவி மறுமணம் செய்து கொள்ளும் உரிமையையும் இஸ்லாம் வழங்கத் தவறவில்லை. இது நீதியானது மட்டுமல்ல, அறிவானதும் ஆகும் என்று அமெரிக்க நிபுணர்கள் ஆய்ந்து கண்டறிந்திருக்கின்றனர். ஆணோ, பெண்ணோ தன் துணையை, இறப்பினாலோ, மணவிலக்கினாலோ இழந்து விட்டால் மீண்டும் ஒரு துணையைச் சேர்த்துக் கொண்டால் மட்டுமே அவர்களால் நீண்ட நாள் வாழ முடியும். அவ்விதம் செய்து கொள்ளாத வர்களுக்கு நெஞ்சு வலி, காசம் போன்ற நோய்கள் வருகின்றன. அவர்களில் பலர் தற்கொலை செய்து கொள்ளவும் முயலு கின்றனர். இது அவர்கள் ஆய்வின் முடிவாகும்.



முஸ்லிம் பெண்கள் அசுத்தமாயிருக்கும் நாள்களில் வீட்டை விட்டு ஒதுங்கி இருக்க வேண்டியதில்லை. அவர்கள் உடல் உறவு கொள்வதையும், திருக் குர்ஆனைத் தொடு வதையும், ஓதுவதையும், தொழுவதையும், நோன்பு வைப் பதையும், தவிர்த்து, வேறு எல்லாக் காரியங்களையும் அந்நாள்களில் செய்ய அனுமதியுண்டு. அவர்கள், அந் நாள்களில் வீட்டிற்குள் இருக்கவும், வீட்டு வேலைகளைச் செய்யவும் எவ்விதத் தடையும் இல்லை.

தமக்கு மாதவிடாய் வந்து கொண்டிருக்கும் போது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தம்முடன் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை ஆயிஷா (ரலி) அவர்களே கூறுகின்றனர். கேட்டுக் கொள்ளுங்கள்! ''எனக்கு மாதவிடாய் வந்து கொண்டிருக்கும் போது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் என் மடிமீது சாய்ந்து கொண்டு திருக்குர் ஆனை ஓதிக் கொண்டிருந்தனர்.''

ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா (ரலி) அவர்களிடம் பள்ளியிலிருந்து, தாம் தொழும் தடுக்கை எடுத்து வரும்படிக் கூறினர். தாம் மாதவிடாய் நிலையில் இருப்பதாக ஆயிஷா (ரலி) அவர்கள் சொன்னதும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர், ''உம் உதிரம் உம் கையில் இல்லை'' என்று.

ஒரு நாள் மைமூனா (ரலி) அவர்களின் பணிப்பெண் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் வீட்டிற்குச் சென்றாள். அங்கு கணவர் மனைவி இருவரின் படுக்கையும் தனித்தனியே

விரிக்கப்பட்டிருப்பதை அவள் கண்டாள். இருவருக்கும் இடையில் மனத்தாங்கல் இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டு, அதனை அவள் மைமூனா (ரலி) அவர்களிடம் வந்து கூறினாள். மைமூனா (ரலி) அவர்கள் அது பற்றி விசாரித்த போது மனைவி, மாதவிலக்காய் இருக்கும் போது இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இப்படித்தான் இருப்பது வழக்கம் என்று தெரியவந்தது. உடனே மைமூனா (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களின் வழக்கத்தை விட்டும் அப்துல்லாஹ் ஏன் இவ்வளவு தூரம் விலகியிருக்க வேண்டும்? அல்லாஹ்வின் தூதர் அவர்கள் சாதாரணமாய் எங்களுடன் படுத்துறங்குவது வழக்கம் என்று போய்ச் சொல்!'' என்று கூறிப் பணிப்பெண்ணை அனுப்பிவைத்தனர்.

பெண்கள் உடைமைகள் வைத்திருக்க இயலாதென்றும், அவர்கள் சட்டபூர்வமாக எந்த உடைமைக்கும் வாரிசாக வர முடியாது என்றும், அரபு அவனியில் கருதப்பட்டது. இஸ்லாம் வந்துதான், உடைமைகள் வைத்துக் கொள்ள ஆண்களுக்கு உரிமை இருப்பது போல், பெண்களுக்கும் உரிமை இருக்கிறது என்று கூறியது. ஒவ்வொரு முஸ்லிம் கணவனும் தன் மனைவியின் பொருளாதார சுதந்திரத்தை அங்கீகரிப்பதன் அறிகுறியாக, மனைவிக்கு 'மஹர்' கொடுக்க வேண்டும் என்று இஸ்லாம் விதி செய்தது. ''மஹர் என்பது மனைவிக்குக் கணவன் பட்டிருக்கும் கடன்'' என்று இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் கூறியுள்ளனர். ''மஹருக்கு முழு உரிமையும் உள்ளவள் மனைவியே ஆவாள். அவளின் அனுமதியின்றி அதனைத் தொடுவதற்குக் கணவனுக்குக் கூட அதிகாரம் கிடையாது'' என்று இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கூறியிருக்கின்றனர்.

உங்களுக்குச் சேர வேண்டிய உடைமைகள் பற்றி அல்லாஹ் என்ன கூறுகிறான், தெரியுமா? ''(இறந்து போன) பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ, விட்டுப் போன



பொருள்களில் அவை அதிகமாகவோ, கொஞ்சமாகவோ இருந்த போதிலும், ஆண்களுக்குப் பாகமுண்டு. (அவ்வாறே) பெற்றோர்களோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற பொருள்களில் (அவை அதிகமாகவோ, கொஞ்சமாகவோ இருந்த போதிலும்) பெண்களுக்கு பாகமுண்டு. (இஃது) அல்லாஹ்வால் விதிக்கப்பெற்ற பாகமாகும்.'' *(4:7)*

உங்களுக்குச் சேர வேண்டிய உடைமைகள் பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் என்ன விதி செய்திருக்கிறார்கள் அறிவீர்களா? ''ஒரு பெண்ணுக்கு அவளைப் பெற்ற தாயின் சொத்திலிருந்தும், தந்தையின் சொத்திலிருந்தும், கணவரின் சொத்திலிருந்தும், பிள்ளையின் சொத்திலிருந்தும் சந்ததி யில்லாத தன் சகோதரர்களின் சொத்திலிருந்தும், சகோதரிகளின் சொத்திலிருந்தும் உரிய பாகம் வழங்க வேண்டும்.''

பெண்கள் தம் தந்தை, தம் கணவர், தம் பிள்ளைகள், தம் நெருங்கிய உறவினர்கள் ஆகியவர்களுடைய சொத்துக் களிலிருந்து பாகம் பெறுகின்றனர். அத்துடன் அவர்களுக்குக் கணவரிடமிருந்து மஹரும் வருகிறது. இந்தச் சொத்துகளுக்கு பெண்களே உரிமையாளர்கள் ஆவர். இந்த உரிமையில் அவர்களின் தந்தை, கணவர், மற்ற எந்த உறவினரும் தலையிட முடியாது. இந்தப் பணத்தை எதிலாவது முதலீடு செய்து அதிலிருந்து இலாபம் வந்தால் அதற்கும் பெண்களே உரிமை யாளர்கள் ஆவர். இந்தச் சொத்துக்களிலிருந்து வருமானம் அவர்களுக்கு வந்தாலும் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு கணவரை விட்டு அகலாது.

இதைத்தான் அல்லாஹ்வின் இந்த உரை உறுதி செய்கிறது: ''ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவை உரியன (அவ்வாறே), பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவை உரியன.'' **(4:32)**

அல்லாஹ் பெண்களுக்கு வழங்கியிருக்கும் இந்த உரிமைகளை ஆண்கள் அலட்சியம் செய்துவிடக் கூடாது

என்பதைத் தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்த உரை எச்சரிக்கிறது: ''பெண்களின் பாத்தியதைகள் பரிசுத்தமானவை. பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகள், அவர்களுக்குச் சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள்!''

இவ்விதம் இஸ்லாம் உங்களுக்கு உடைமைகள் வைத்துக் கொள்ள மட்டும், உடைமைகளுக்கு வாரிசாக வர மட்டும் உரிமை வழங்கவில்லை. உங்களுக்கு என்று ஒரு பெயர் வைத்துக் கொள்ளவும் உரிமை வழங்குகிறது. சமீப காலம் வரை கொரியாவில் பெண்களுக்குப் பெயரே வைப்பதில்லை. திருமணம் ஆகும்வரை, ஏதாவது ஒரு பெயரால் பெண்கள் அழைக்கப்படுவார்கள். திருமணம் ஆனபின் 'இன்னார் மனைவி' என்று கணவர் பெயரால் குறிப்பிடப்படுவார்கள். இதே நிலை தான் சிறு மாற்றத்துடன் மேலை நாடுகளிலும் இருக்கிறது. பெண்கள் தமக்கென ஒரு பெயர் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதனைத் திருமணம் வரைதான் வைத்திருக்கலாம். திருமணம் ஆனபின் அவர்கள் 'இன்னார் மனைவி' என்றுதான் அழைக்கப்படுவார்கள்.

இவை மட்டும்தானா இஸ்லாம் பெண்களுக்கு வழங்கி இருப்பவை? இல்லை. ஆண்களைப் போலவே பெண்களும், கல்வி கற்க வேண்டும் என்று இஸ்லாம் கட்டாயப்படுத்துகிறது. ''ஒவ்வொரு முஸ்லீமான ஆணும், பெண்ணும் கல்வி கற்பது கடமையாகும்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். சுதந்திரமுள்ள பெண்கள் மட்டுமல்ல. அடிமைப் பெண்களும் கல்வி கற்க வேண்டும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர். தம் அடிமைப் பெண்ணுக்குக் கல்வி அளிக்கும் ஒருவருக்கு என்ன கிடைக்கும் என்று அவர்களின் இந்த உரை உணர்த்துகிறது. ''ஒருவர் தமக்குரிய அடிமைப் பெண்ணுக்கு மிக அழகிய ஒழுக்கம் கற்பித்து, சிறந்த கல்வியும் கற்றுக் கொடுத்தார். பிறகு அவர் அவளை அடிமைத் தளையிலிருந்து விடுவித்துத் தாமே மணந்து கொண்டார். அவருக்கு இருண்டு நற்கூலிகள் கிடைக்கும்.''



உண்மையில் ஆணைவிடப் பெண்ணுக்குத் தான் கல்வி மிகவும் அவசியம். ஆணின் கல்வி உத்தியோகம் பார்க்க அல்லது தொழில் செய்யத்தான் உதவுகிறது. ஆணின் கல்வியால் அல்லாமல் அவன் சம்பாதித்துக் கொணரும் பொருளால் தான் ஒரு குடும்பம் நன்மை அடைகிறது. ஆனால், ஒரு பெண்ணின் கல்வி அவளின் குழந்தைகளுக்குப் பெரிதும் பயன்படுகின்றது. தாயின் மடிதான் குழந்தையின் முதல் 'மத்ரஸா'வாகும். அந்தத் தாய் மட்டும் கல்வி கற்றவளாய் இருந்தால், அவளின் மடி குழந்தைக்குக் கல்லூரியாகவும் ஆகிவிடும். அதனால்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''ஒரு பெண்ணிற்கு அளிக்கப்படும் கல்வி ஒரு சமுதாயத்திற்கு அளிக்கப்படும் கல்வியைப் போன்றது'' என்று.

அண்ணல் நபி (ஸல்) அவர்களே ஆண்களுக்கும், பெண்களுக்கும் கல்வி போதிப்பவர்களாக இருந்தனர். அவர்களின் மனைவி ஆயிஷா (ரலி) அவர்களோ, பெண்களுக்கும், ஆண்களுக்கும் கல்வி கற்பிப்பவர்களாக இருந்தனர். அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஆண்கள் மட்டுமல்லாது, எத்தனையோ மதீனா நகர் அன்சாரிப் பெண்களும் வந்து அறிவு பெற்றும், ஐயத் தெளிவு பெற்றும் திரும்புவதுண்டு. ஆயிஷா (ரலி) அவர்களிடம் பெண்கள் மட்டுமல்லாது, ஆண்களும் வந்து அறிவு பெற்றும், ஐயத் தெளிவு பெற்றும் செல்வதுண்டு.

இவ்விதம் கல்வி ஆண், பெண் இருபாலாருக்கும் கடமையாக்கப்பட்டதால், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே கல்வியில் சிறந்த பெண்மணிகள் தோன்றத் தொடங்கிவிட்டார்கள். சுமார் எண்ணூறு பக்கங்கள் உள்ள திருக்குர் ஆன் முழுவதையும் மனனம் செய்த பெண்கள் பலர் அப்பொழுதே இருந்தனர். அவர்களில் சிலர் ஆயிஷா (ரலி),